# CHILD EDUCATION

BY

C. R. VENKATARAMA AIYAR, M.A., L.T.
*Madras Educational Service*

*Author of Youth and Character; Child Psychology; Teach ng of Reading and Writing in Elementary Schools etc.*

MADRAS
THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

*All Rights Reserved*

[1 E. 2 M.

TCY117
N31
14875l

# இளம்பிள்ளைக் கல்வி

இளம்பிள்ளைகளின் மனத்தின் தன்மைகளையும் அவர்களை
நன்னடையிற் பழக்கும் வகைகளையும் பெற்றோர்
களும் உபாத்தியாயர்களும் நன்கு அறிந்து
கொள்வதற்கு உபயோகமாக நவீன
'கிண்டர்கார்ட்டன்' போதனு
முறைகளை அனுசரித்து

இது
இளமையும் ஒழுக்கமும்; பிள்ளையுள்ளம்; எலிமென்டரி
பாடசாலைகளில் தாய்ப்பாஷையைப் போதிக்கும்
முறை; முதலான நூல்களின் ஆசிரியர்

C. P. வேங்கடராம ஐயர், எம். ஏ., எல். டி.
மதராஸ் எடுகேஷனல் ஸெர்விஸ்
அவர்களால் எழுதப்பெற்றது.

கிறிஸ்டியன் லிடரேசர் ஸொஸைடி
தபாற்பெ. 501, பார்க் டவுன் (P.O.)
மதராஸ்

# PREFACE

*'A Teacher has as his subject Life and Mind.'*

THRING.

---

THE present age is sometimes called the Era of the Child in view of the great importance attached to the study of child life and to the application, in the training and education of children, of the results of such study.

In the West, great strides have been made, wrong ideas pulverised, and improvements effected in the methods of teaching children. Research work is being done by enthusiastic educationists and their noble endeavours are yielding a rich harvest in correct methods of education. But these ideas have yet to be broadcast to teachers of the young in India.

The supreme importance to parents as well as to teachers of a sympathetic observation of the characteristics of childhood and of sensible methods of educating Infants is being iterated by those who are competent to speak on the subject with an emphasis which can no longer be ignored.

The Auxiliary Committee of the Indian Statutory Commission have stressed the 'need for special care' in selecting qualified teachers for primary classes, and have observed, "In Indian primary schools, as they

are at present, the maxim of 'the best teacher for the youngest children' is specially applicable."

The following pages seek to present, in simple language, the truths about Child Education which—the author with his long and varied experience in the training of teachers is persuaded,—form the indispensable modicum of information which every kindergartner must possess. It takes for specific treatment the outstanding physical and mental characteristics of children, elaborated by great educators like Froebel, Rousseau and Herbart, and endeavours to show how advancing knowledge of childhood as explained by eminent investigators like Dr. Oppenheim, Perez, Currie and Sully demands not only that the adult should not read himself into the Infant but that all normal, healthy activities of children need wise direction and encouragement for the healthy growth alike of the mind as of the body.

The material is presented in an Indian setting with examples taken from the homes and environment of children which would be quite familiar to teachers in South India.

At the present moment when, in the Department of Education, efforts are being directed towards 'increasing the efficiency and effectiveness of existing schools,' the author hopes that this book may, in its own humble way, make some small contribution towards the object by seeking to give some help to teachers.

C. P. V.

# ANALYTICAL TABLE OF CONTENTS

PAGE

PREFACE ... ... ... ... ... iii

CHAPTER

I. THE CHILD.

The child differs wholly from the adult. Child Study essential to learn how to deal with Infants. Physical and Mental development; stages. Illustration. Work in the Primary Class, the substructure of child's future education. Child's Brain; some truths about it. Harm in overpressure. Illustration. Growth of Brain and Child's Activity, how related. Precocity ... ... ... 1

II. THE TEACHER OF THE YOUNG.

Why the teaching of Infants is difficult. How Knowledge is acquired. Illustrations. Infant's limited range of ideas. Love, the teacher's indispensable qualification ... ... ... 20

III. THE CHARACTERISTICS OF THE CHILD.

Ceaseless Activity; illustrations; typical forms. Constructive capacity. Curiosity. The Child's Questions. Love and Power of Imitation. Desire to collect. Desire to share and cooperate. Joy of Possession. Child's Mental Activity. Imagination. Illustrations. Training of Character ... ... 29

IV. HOW TO USE THE CHARACTERISTICS.

Part played by Curiosity. Methods of dealing with tender pupils. Harm of long periods. Single Teacher School; some disabilities considered. Organisation of the Infant class; furniture. Pictures as aids to expression. Classification of

PAGE

Infants. Aim in Early Training and Education. Using the Play instinct. Free Play. Play and Work. Motive makes the difference. Illustrations. Means of transforming work into play. Marching; its uses. Conduct of a March. Physical Exercises; some modern types. Place of Music in early education. Hymns; selection of suitable material. Melody and Words; some specimens. Pictures and Objects. Value of appeal to the sense of sight. Learning by Doing. Drawing as a means of expression. Its use to the child and to the teacher. Clay Modelling and its value. Sand Trays. Discipline. Instability, the characteristic of the child. Duration of Lessons. Value of variety. Leading and Driving. Fidgets, what they show. Child's natural demand for variety. ... ... 53

V. STORY TELLING.

Place of stories in the education of the child. Talk, the chief means of educating Infants. Speaking and Listening. How stories supply material for talk. How to tell a story. Some Hints on telling. Children like action in stories. Language of the story to be simple, not babyish. How new terms should be explained. Style. Use of short well-formed sentences. Presentation of facts. Moral to be inferred, not told. Points in narrative to be made prominent and vivid. Avoidance of unimportant detail. Histrionic power; its use in telling stories. Suspense as making narrative live and move. Value of Questions. The retelling of story by children. Value of Drawing in Story telling ... ... ... ... ... 102

INDEX ... ... ... ... ... 119

# இப்புத்தகத்திலடங்கியவை


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | குழந்தை .. .... .... .... .... | 1 |
| 2. | குழந்தையின் உபாத்தியாயர்.. .... .... | 20 |
| 3. | இளம்பிள்ளைத் தன்மை .... .... .... | 29 |
| 4. | குணங்களை உபயோகிக்கும் முறைகள் .... | 53 |
| 5. | கதை சொல்லுதல் .. .... .... .... | 102 |
| | விஷய சூசிகை .... .... .... .... | 119 |

(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்)

"மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின்
மடித்தல நனைப்பவம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனன்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே"

# இளம்பிள்ளைக் கல்வி

## அத்தியாயம் 1

## குழந்தை

புஷ்பம் என்று எதைச் சொல்லுகிறோம்?

இந்தக் கேள்விக்கு, வயது முதிர்ந்த பெரியோர் களேயன்றி, ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தை களுங்கூட ஏதாவதொரு பதில் சொல்லக்கூடும்.

ஆனால், புஷ்பத்தைப்பற்றி, எல்லா விவரங்களை யும் நன்றாக அறிந்து பதிற்சொல்வது எவ்வளவு கடினம்? யோசித்துப் பார்த்தால் அதன் மென்மை, நிறம், மணம், உருவம், தோற்றம், இதழ்களின் அடுக்கு, மகரந்தம்: அது மலருங்காலம், பொழுது, முதலியன: இன்னும் புஷ்பத்தைப்பற்றி நாம் கவ னிக்கக்கூடிய இவ்வைபோன்ற பிற அம்சங்களையும் நன்கு தேர்ந்து மேற்கூறிய கேள்விக்கு விடை யளிக்க எவ்வளவு ஆரய்ச்சி வேண்டியிருக்கிறது?

அதுபோல்வே, "குழந்தை என்று எதைச் சொல் லுகிறோம்?" என்று ஒரு கேள்வி கேட்டால் அநே கம்பேர் உடனே ஏதாவதொரு பதிற்சொல்வார் கள். "இதென்ன! புதுமையானதோர் கேள்வியைக் கேட்டதுபோல எண்ணுகிறீர்களே! குழந்தை என் பது இன்னதென்று எங்களுக்குத் தெரியாதா?" என்று பெற்றோரும் உபாத்தியாயர்களும், குழந் தைகளைப்பற்றித் தாம் எல்லாந் தெரிந்துகொண்ட வர்கள் போலவே, பேசத்தொடங்கலாம்.

'பெற்றவர்களுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை' என்ற வாக்கியத்தை யுன்னி, எவரும்

தங்கள் குழந்தைகளின் தன்மைகளை நன்ருக அறிந்திருப்பதாகவே எண்ணியிருக்கலாம்.

இப்படி எல்லோரும் குழந்தைகளின் தன்மைகளைப்பற்றி எல்லாந் தெரிந்துகொண்டிருப்பதாக எண்ணியிருந்தாலும், இளம்பிள்ளைகளின் கல்விப் பயிற்சியும் நடைப் பயிற்சியும் சம்பந்தப்பட்ட வரையில், பலவகையான தவருன எண்ணங்கள் உண்டாகி, அவை காரணமாக அநேகம் பிசகுகள் ஏற்படுகின்றன. 'இன்று குழந்தை, நாளைக்கே பெரியவன்' என்று உலகத்தில் ஒரு வாசகம் சாதாரண பேச்சு வழக்கத்தில் உள்ளது. இவ்வாசகம் ஒன்றையே அநேகம்பேர் சொல்லிச் சொல்லி, குழந்தை என்பது, பெரிய ஆண்பிள்ளை அல்லது பெரிய பெண் பிள்ளையின் சிற்றுருவமேயன்றி வேறல்ல என்று நினைத்துவிடுகிருர்கள். அப்படி நினைத்து, பெரியவர்களிடம் காணக்கூடிய குணங்களெல்லாம் அவர்களின் சிற்றுருவங்களாகிய குழந்தைகளிடத்திலும் சிறு கடுகளவுகளாக இருக்கவேண்டும் என்று உடனே எண்ணிவிடுகிருர்கள். இவ்வெண்ணங்கள் காரணமாக, கல்வி கற்பிப்பதில் குழந்தைகளையும் பெரியவர்களைப்போலவே நடத்த ஆரம்பித்து, பெரும் பிசகுகளைச் செய்கிருர்கள். பெரிய வகுப்புப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறைகளையே பெரும்பாலும் அனுசரித்து, இளம்பிள்ளைகளுக்கும், வாசிப்பு கணக்கு முதலிய பாடங்களை வைத்து நடத்துகிருர்கள்.

பள்ளிக்கூடங்களில், சிறு குழந்தைகளைச் சில நேரம் விளையாடவிட்டால், "விளையாடும் நேரத்தை வாசிப்பில் செலவழிக்கலாகாதா? இப்படி வீண்கா

ல்ம் போக்குவது சரியா?'' என்று சில பெற்ருேர்கள் தாபப்படுகிருர்கள் என்றும் தெரிகிறது. உபாத்தியாயர்களாக உள்ளவர்களிலும் அநேகர் இதே அபிப்பிராயத்தை மனத்திற்கொண்டு சிறு குழந்தைகளைப் பன்முறை அதட்டியும், வெருட்டியும், ஓயாமல் படித்துக்கொண்டாவது, அல்லது, கணக்கில் முறைசொல்லிக்கொண்டாவது இருக்கும்படி, கட்டாயப்படுத்துகிருர்கள். குழந்தைகள் தமக்குள் கூடிப்பேசினுல் கசபசவென்று சத்தம் உண்டாகிறதென்று, சில உபாத்தியாயர்கள் சீறுவார்கள். ஆகையால், அவர்களைப் பேசக்கூடாதென்று தடுத்து, கையைக் கட்டிக்கொண்டும், வாயைப் பொத்திக்கொண்டும், இப்படி அப்படி அசையாமல், சும்மா இருக்கச்சொல்லி நிர்ப்பந்திப்பார்கள்.

குழந்தைகள் எல்லாம் சிறிய வடிவங்கொண்ட பெரியவர்களே என்று எண்ணி, பெரியவர்கள் குணங்களும் எண்ணங்களும்கூட அவர்களிடம் சிறிது உதித்திருக்கலாம் என்று மதித்திருத்தலினுலேயே மேலே சொன்னவைபோன்ற பிசகுகள் ஏற்படுகின்றன. ''என்னடா! குழந்தாய்! உன் அறிவை உபயோகப்படுத்திப்பார்! நீ நாளைக்கே உன் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டாமா? உனக்கு ஏன் அந்த முன்யோசனையில்லை?'' என்று உபாத்தியாயர்களுள்ளும் சிலரும், பெற்ருேரிற் பலரும், குழந்தைகளை அதட்டுவதை இன்னும் கேட்கிருேம்.

நாம் குழந்தைகளின் இயற்கைகளை நன்ருக அறிந்துகொள்ளாத வரையில் அவர்கள் பெரியவர்களுடைய, சிறு வடிவம் என்றே மதித்திருக்கலாம். ஆனுல், குழந்தையின் தன்மைகளைப்பற்றிப் புதிய

உண்மைகள் பல, தெளிவாகத் தெரிந்திருக்கும் இக்காலத்திலுங்கூட, அப்படியே எண்ணிக்கொண்டிருப்பதற்குச் சிறிதும் நியாயம் இல்லை. குழந்தையின் தன்மை வேறு, பெரியவன் தன்மை வேறு, என்பதை, குழந்தையின் இயற்கைகளைக் கவனித்த பல நிபுணர்கள் அநேகம் ஆதாரங்களைக் காட்டித் தெரிவித்துள்ளார்.

பெற்றெடுத்த தாயாரைப்போலவே குழந்தைகளிடம் அன்பு பாராட்டி அவர்கள் மனப்போக்கை உள்ளபடியே அறிந்த கௌரவமுள்ள சில உபாத்தியாயர்கள் தங்கள் அனுபோகங்களை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி புத்தகங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். உபாத்தியாயர்களே யன்றி மனோதத்துவ சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்த சில நிபுணர்களும், தேக தத்துவங்களைக் கிரம்மாகப் பரிசீலனை செய்த சில வைத்திய சிரேஷ்டர்களும், தாங்கள் கண்டறிந்த உண்மைகளைத் திரட்டி வெளியிட்டிருக்கின்றனர்.

கிராமப் பள்ளிக்கூடங்களில் சிறு குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் யாவருக்கும் எப்போதும் பாலர்களோடேயே பழகிக்கொண்டு அவர்களுக்குப் போதிக்கவேண்டிய அனைவருக்கும், இந்த ஞானம் இன்றியமையாததொன்றாய் இருக்கிறது.

ஆகையால், அப்படிப்பட்ட பல அரிய விஷயங்களிற் சில முக்கியமானவற்றை இங்கே விவரிப்போம்.

இதுவரையில் குழந்தைகளுடைய மனத்தின் அமைப்பைப்பற்றி நாம் தெரிந்துகொண்டிருக்கிற

விஷயங்களைச் சில வாக்கியங்களில் தொகுத்துக் கூறலாம்.

குழந்தை பெரியவனுடைய சிற்றுருவம் அல்ல. உருவத்தில் மாத்திரமேயன்றி குழந்தைக்கும் பெரியவனுக்கும் அநேகமாக ஒவ்வொரு முக்கியமான அம்சத்திலும் வேறுபாடுகளைக் காணலாம். தமது தன்மை எவ்வாறிருக்கின்றதோ, அதுபோலத்தான் குழந்தையின் தன்மையும் இருக்கும் என்ற எண்ணத்தை அடியோடு நீக்கி, குழந்தையின் குண விசேஷங்களில் அன்போடும் கவனத்தைச்செலுத்தி அறிந்துகொண்டாலன்றி, இளம்பிள்ளையின் மனத்தின் தன்மைகளை நன்கு உணரமுடியாது, என்ற உண்மையை உபாத்தியாயர் தம் மனத்திற் கெட்டியாகக் கொள்ளவேண்டும்.

மேலே விவரித்துக்கூறிய விஷயங்களைச் சுருக்கி இரண்டு வாக்கியங்களில் சொல்லலாம்:

1. குழந்தை வேறு, பெரியவன் வேறு: இவர்களுள், ஒருவரையொருவர் ஒவ்வார்.

2. பாலர்களுக்குப் பயன்பெறப் போதிப்பதற்கு, அவர்கள் தன்மைக் குணங்களைப்பற்றிய ஞானம் உபாத்தியாயருக்கு இன்றியமையாதது.

இவற்றை யிப்படி எடுத்துச்சொன்ன பிறகு இவை மிகச் சாமான்னியமான விஷயங்கள் போலவே தோற்றலாம். ஆனால் இந்த உண்மைகளைக் கண்டறிந்தபின் குழந்தைகளின் கல்விப்பயிற்சி முறைகள் எல்லாம் அவ்வுண்மைகளைப் பின்பற்றி, புதிய மாதிரியில் மாறிவிடவேண்டும் என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

சிறு குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் வித்தியாசம் வயதில் மாத்திரமேயன்றி வேறென்றிலும் இல்லை என்ற எண்ணம் மனத்திற் கிடந்தவரையில் குழந்தைகளை நடத்திவந்த முறைகள் வாலிபரை நடத்திய முறைகளோடே ஒத்திருந்தன. எப்போது இப்படி நினைப்பது தவறு என்பது தெரிந்ததோ, அப்போதே, அந்த அந்தப் பருவத்துக்கேற்றபடியே கற்பிக்கும் முறைகள் யாவும் திருத்தம் அடையவேண்டும் என்பது விளக்கமாயிற்று. மேலும், உபாத்தியாயர்கள் எல்லாரும் குழந்தைகளுக்குப் பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதுதான் தங்கள் கடமை என்று எண்ணி, பாடங்களைக் கவனித்த அளவு குழந்தைகளைக் கவனித்தறியவில்லை. இப்போது, குழந்தைகளைக் கவனித்தறிவது அவர்களுடைய முக்கிய கடமை என்றும், அப்படிக் கவனிப்பதால் கல்விப் பயனும் பெருகும் என்றும் தெரிகிறபோது, உபாத்தியாயர்களுக்குப் புதியதோர் ஊக்கம் பிறக்கும்.

### தேக தத்துவம்

குழந்தைகள் பெரியவர்களை ஒத்தவர்கள் அல்லர் என்று தேகதத்துவ சாஸ்திரத்தில் பரிசிலனை செய்தவர்கள் சித்தாந்தப்படுத்தியிருக்கிறார்கள். பொது வகையாக மாத்திரம், ஆண்குழந்தையும் பெண் குழந்தையும், முறையே, பெரிய ஆண்பிள்ளையைப் போலவும் பெண்பிள்ளையைப் போலவும் உருவம் உள்ளது என்று கூறலாமேயன்றி, மேற்றப்படி, ஒவ்வொரு முக்கியமான அம்சத்திலும் அவர்கள் ஒருவரின் ஒருவர் வித்தியாசப்பட்டிருப்பதைக் காணலாம்.

தொண்டரடிப்பொடியாழ்வார், ஓர் பாசுரத்தில்* ‘பேதை பாலகன் அதாகும்’ என்ற வாக்கியத்தில் பேதை என்ற சொல்லை உபயோகித்திருப்பதை நாம் இங்கே கவனிக்கவேண்டும். பேதைப்பருவம், குழந்தைப்பருவம், பாலபருவம் என்பன மக்களின் வளர்ச்சியில் பருவபேதங்கள்.

குழந்தையானது பெரிதாக வளருகையில் பருவத்துக்குப் பருவம் அநேகம் அம்சங்களில் மாறுதல் அடைகின்றது. இந்த மாறுதல்களை நாம் சாதாரணமாக அப்போதைக்கப்போது உற்று நோக்கி ஆராய்வதில்லை. “இக்குழந்தை நேற்றுத்தான் பிறந்தான்போலத் தோற்றுகிறது; ஆனால் இப்போது என்ன தோற்றமும் குணமும் அடைந்திருக்கிறான்” என்று, ஒரு சிறுவனைப் பார்த்து, பெரியோர் மொழிவதை நாம் கேட்டிருக்கிறோம். இப்படி நன்றாகக் காணக்கூடியபடி மாறுதல்கள் தோற்றும்போது கவனிப்பார்கள்.

ஆனால் குழந்தையின் தேகத்தின்பாகம் ஒவ்வொன்றும் கிரமமாகவும் தொடர்ச்சியாகவும் நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மாறுதல் அடைந்துகொண்டேயிருக்கிறது. இம்மட்டோடு மாறுதல் நின்றுவிட்டதென்று எந்தப் பருவத்திலும் வரையறுத்துச் சொல்லமுடியாது. ‘குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக

---

* “வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே.”
(திருவாய்மொழி—திருமாலை—3.)

வளர்ந்து யௌவனத்தை யடைந்தது' என்ற வாக்கியத்தை அநேகம் சரித்திரங்களில் படிக்கிறோமல்லவா? இந்த வாக்கியத்தில், 'நாள்', 'பொழுது', 'மேனி', 'வண்ணம்' என்ற சொற்கள் எதைத் தெரிவிக்கின்றன? ஆராய்ந்து பார்த்தால், நமது கண்ணுக் கெதிரிலேயே, இடைவிடாமல், இயற்கையில் கிரமமாக மாறுதல்கள் தோற்றியே மக்களின் பருவ பேதங்கள் உண்டாகின்றன என்பது புலப்படும்.

ஆகையால், சிறு குழந்தை நாம் பெரிதும் விரும்புகிறபடியே தேக வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் அடையவேண்டுமாயின், மேலே கூறியபடி இயற்கையில் தாமாகவே தோன்றுகிற மாறுதல்களை ஜாக்கிரதையாகப் பார்த்து, அவை ஒழுங்கான வகையில் செல்லும்படி கவனித்து வரவேண்டியது எவ்வளவு அவசியமாகின்றது?

ஒரு குழந்தை சிறந்தவண்ணம் ஓங்கிவளரவேண்டுமானால், அதை நடத்திவரும் விதங்கள் யாவும், நாம் விரும்புகிற அந்த வளர்ச்சிக்கு அநுகூலமானவையாகவும், அதற்கு ஒத்தபடியாகவும் இருக்கவேண்டும். சிசு வாலிபனைப்போல் இல்லாத காரணத்தினாலேயே அது பிறகு அடையவேண்டிய நிலை இதுவென்று யோசித்து, அதற்கு உதவியாக, முற்றாத நிலையில் செய்யத் தகுந்தவற்றையெல்லாம் எதிர்கால உணர்ச்சியோடு செய்யவேண்டும்.

முதலில் தேக வளர்ச்சியைப்பற்றி யோசிக்குமிடத்து, குழந்தைகளின் தேக அமைப்பைப்பற்றி உபாத்தியாயர்கள் அறிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் சிலவுள. 'இளம்வயது', 'இளம்பிள்ளை', 'இளங்குழந்தை' என்ற சொற்கள் சாதாரண வழக்

க்த்தில் உபயோகப்பட்டு வந்தாலும், அவற்றில் 'இளம்' என்ற அடைமொழி எதை உணர்த்துகிற தென்று கவனிக்கவேண்டும். ஒரு இளஞ்செடி எவ்வாறு தளிர்த்து, இலைமுற்றி வளர்கிறதென்பதைக் கவனிப்போம். தென்னையின் இளஞ்செடியைத் தென்னம்பிள்ளை யென்று சொல்லுகிறோம். அதுவே சிலகாலத்துக்குப் பின்பு பெரிய மரமாகிப் பலன் தருகிறது. ஆனால் அதன் இளம்பருவத்தில் அதனை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டியிருக்கிறது? பிறகு பெரிதாக வளரவேண்டும் என்று முதலில் இடவிசாலம் தருகிறோம். வெயில் வெப்பம் கூடாதென்று மறைவு கட்டுகிறோம். முதலில் தரை ஈரம் கார்த்துக்கொண்டிருக்க அடிக்கடி தண்ணீர் ஊற்றுகிறோம். வேர்மூலமாகத் தென்னம்பிள்ளைக்குக் கிடைக்கவேண்டிய பூமி சத்தைப் பிற புல்பூண்டுகள் எடுத்துக்கொள்ளாதபடி, களை பிடுங்குகிறோம். முதலில் இவ்வாறு பாதுகாத்தால், பிற்கு, தென்னைமரம் பெரிதாக வளர்ந்தபோது அதன் நிழலே அதனடியில் செடிகள் வளராமல் தடுத்துக்கொள்ளுகிறது. நேரே சூரிய வெளிச்சம் இல்லாவிடின், வெளிச்சமுள்ள பக்கமாகச் சாய்ந்து வளருமென்று யோசித்து, மேலே நல்ல வெளிச்சம் இருக்கும்படி கவனித்துக்கொள்ளுகிறோம். இப்படி சொற்ப காலத்துக்குள்ளேயே வளர்ந்து பலன்தரக் கூடிய தென்னையின் இளம்பருவத்தில், அது நாம் விரும்புகிறவண்ணம் வளரவேண்டுமே யென்று, அதை ஜாக்கிரதையாகக் கவனிக்கிறோம். அதுபோலவே, பாலர் வகுப்பில் இருக்குங்காலம்தான் சிறுகுழந்தைகள் விரைவாக வளருங்காலம் என்

பதை உபாத்தியாயர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

எல்லாப் பாகங்களும் சமகாலத்தில் ஒரே வண்ண மாக வளரா. சில சீக்கிரமாகவும், வேறுசில சிறிது தாமதித்தும் தோற்றும். குழந்தை பிறந்தபின்பு, அது கண்ணைத்திறந்து பார்ப்பது, முகம் பார்த்துச் சிரிப்பது, கவிழ்ந்துகொள்வது, இரண்டு கைகளை யும் தரையில் ஊன்றிக்கொண்டு தலையை நிமிர்ந்து பார்ப்பதும் முதலாய செய்கைகள் படிப்படியா கவே தோற்றும். பிள்ளைப்பருவச் செய்கைகளைத் தாயார் அன்போடு கவனிப்பாள். உலக இயற்கை யில் கண்டவண்ணம் ஒருகாலத்தில் உண்டாக வேண்டிய வளர்ச்சிமுறை அப்போது காணப்பெறு விட்டால், தாயார் அதைப்பற்றி விசாரமடைந்து பெரியோர்களிடம் வினவி உரியவற்றைச் செய் வாள். பருவங்களுக்கேற்ற செய்கைகள் ஏறக் குறைய அந்த அந்தக்காலத்தில் தோற்றவேண்டும்.

தோற்றவேண்டுமே என்று அவசரப்பட்க் கூடாது. ‘குழந்தைக்கு இப்போது பல் முளைக்க வேண்டுமே. இன்னும் முளைக்கவில்லையே’ என்று அவசரப்படக்கூடாது. இளம் வெற்றிலைக்கொடி யைப் பயிரிடும்போது எப்படி நாமாக அவசரப் பட்டு ஒன்றும் செய்யக்கூடாதோ, அதைவிடப் பன்னூறுமடங்கு அதிகமாகக் குழந்தைகளைக் கவ னிக்கவேண்டும். அவர்கள் இயல்பான வளர்ச்சிக் குக் குறுக்கே ஒன்று செய்யப்புகுவது தவறு.

குழந்தைகளின் தன்மைக்குணங்கள் சடக் கென்று மாறுவதையும், புத்திசாலித்தனம் சில வேளைகளில் மந்தமாக இருப்பதையும் பார்த்துக்

க்வலையடையாமல் அவை கடவுள் ஆணையால் குழந்தையின் நன்மைக்காகவே தோற்றுகின்றன என்று எண்ணி அவசரப்படாமல் இருக்கவேண்டும். ஏனென்றால், தேகவளர்ச்சியும் பருவச் செய்கையும் எல்லாக் குழந்தைகளிடத்தும் ஒரே கணக்குப் போல் உண்டாகமாட்டா. 'எட்டாம் மாதத்தில் குழந்தை எட்டியடி வைத்து நடக்கும்' என்ற வாக்கியத்தைச் சொல்லி, சிலர், குழந்தை எட்டுமாதம் ஆகியும் இன்னும் நிற்கவில்லையேயென்று விசாரமடைந்து, அதற்குத் தாமாக நிற்கக் கற்றுக் கொடுக்க ஆரம்பிக்கக்கூடாது. அந்த அந்த நரம்புக்கூட்டங்கள் உறுதிப்பட்டு பரவிவரும் தருணத்தில் அவ்வப்பகுதிக்கேற்ற செய்கைகள் நம் முயற்சியின்றியே தாமாகத் தோன்றும். நாம் குறுக்கே பிரவேசித்து, ஒன்றைத் திருத்தவோ, மாற்றவோ, ஆரம்பிப்பது மிகத்தவறு. குழந்தைகளின் வளர்ச்சியெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே தாமாகத் தோன்றிவிடும். சில குழந்தைகள், நடக்க ஆரம்பிக்கு முன்னே, அடிக்கடி எழுந்து நின்றும், விழுந்தும், பிறகு எழுந்துநின்று அடியெடுத்துவைக்க முயன்றும், எடுத்துவைத்தபோது விழுந்தும், பிறகு செம்மையாக நின்று நடக்க ஆரம்பிக்கும். வேறு சில குழந்தைகள், சிறிதுகாலம் எழுந்து நிற்காமலே தாமதித்திருந்து, ஒருநாள் தாமாக எழுந்து நின்று அடியெடுத்து நடக்க ஆரம்பித்துவிடும். இதிலிருந்து, இயற்கையில் எல்லாப் பகுதிகளும் எல்லாக் குழந்தைகளுக்கும் சமகாலத்திலேயே ஒரே மாதிரியாக வளர்ந்து வராது என்ற உண்மையை அறிந்துகொள்ளலாம்.

பல் முளைக்கும்போது சில குழந்தைகள் இளைத்துக்காட்டும். உயர்வதற்கு முன்னும் இளைக்கும் என்பதைச் சிலர் கவனித்திருக்கலாம். முதலில் பளபளவென்று பேசிய குழந்தை சிலகாலம் மந்தமாகவும் இருக்கலாம். அப்போது தேகம் வளர்ச்சியடையும். அப்படிப்பட்ட சமயங்களில் இயற்கையின் ஒழுங்கான போக்குக்குக் குறுக்கே நாம் ஏதாவதொன்றைச் செய்யப்புகுவது அறிவீனமேயாகும். அப்படிச் செய்வதால் பிற்காலத்தில் மாறாத தீங்குகள் ஏற்படலாம்.

ஆதலால், குழந்தைகளைக் கையைக் கட்டிக்கொண்டும் வாயைப் பொத்திக்கொண்டும் இருக்கும்படி பயமுறுத்துதல்; அவை இங்குமங்கும் ஓடித்திரியாதபடி அரைஞாணில் கயிற்றைக் கட்டி ஓரிடத்தில் உட்காரவைத்தல்; இவைபோன்ற செயல்கள் குழந்தைகள் தாராளமாக இருத்தற்குப் பெருந்தடைகளாகும்.

அதுபற்றி, அவர்களை ஓயாமல் எங்கேனும் திரியவிடுவதும் சரியன்று. எந்தக்காலத்திலும், சரீர உழைப்போ அல்லது மன உழைப்போ அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. அதிலும், இளம்பிள்ளைப்பருவத்தில் அப்படிப்பட்ட அதிக உழைப்பு விபரீத பலனைக் கொடுத்துவிடும் என்பதைப் பெற்றோரும் உபாத்தியாயரும் ஞாபகத்தில் இருத்திக்கொள்ளவேண்டும்.

தேகத்தின் வளர்ச்சியைமட்டில் கவனிக்கும்போது, ஈரல், இதயம், தசைத்திரள், நரம்பு, எலும்பு முதலிய பகுதிகள் கிரமமாக வளர்ந்து வரும்படி நாம் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்க

வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படியிருக்க மூளையின் வளர்ச்சி விஷயத்திலோ இதைவிடப் பலமடங்கதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டியது மிக்க அவசியமாகிறது.

மூளையின் அமைப்பு முழுமையும் சவிஸ்தாரமாக நமக்கு இப்போது தெரியாவிட்டாலும், தெரிந்துள்ளவரையில், அது மிக அற்புதமாக இருக்கிறது. மூளையைப்பற்றி நாம் இன்னும் தெரிந்து கொள்ளாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆயினும், ஸ்தூலமாகச் சொல்லுமிடத்து, மூளையென்பது மண்டைக்குள் இருக்கிற ஓர் சக்திக் கருவி என்று கூறலாம். மண்டையென்று நாம் சொல்வது எலும்பாலாகிய ஒருவகைப் பெட்டி. இதனுள்ளே நவநீதம்போன்றதோர் வஸ்து நிரம்பியிருக்கின்றது. இதுவே மூளை யெனப்படும்.

மூளையில் இரண்டு பெரிய பாகங்கள் உள்ளன. ஒன்று வலதுபாகம், மற்றொன்று இடதுபாகம். மூளையில் உள்ளீடாக நரம்புப் பதார்த்த அணுத் திரள்களும் நரம்புநார்த் தொகுதிகளும் உள்ளன. நரம்புப் பதார்த்த அணுக்கள் முக்கியமாக மூளையின் மேற்பாகத்தில் ஒரு கவசம் போர்த்ததுபோல இருக்கும். இந்தக் கவசம் பார்ப்பதற்குத் திருநீறு (விபூதி) வர்ணம் கொண்டதாய்த் தோற்றும். மேற்கூறிய நரம்புநார்த் தொகுதிகள் அவ்வாறின்றி வெண்மை நிறமாகக் காணப்படும். நரைபோன்ற நிறமமைந்த மேற்கூறிய நரம்புப் பதார்த்த அணுக்களைத் தீண்டினல்தான் ஓர் எண்ணமோ, அநுபவமோ, மனத்தில் உதிக்கும். இந்த நரம்புப் பதார்த்தத் திரள்களை நரம்பு நார்களே ஒன்றோ

டொன்று பிணைக்கின்றன. ஆதலால் ஒரு திரளில் ஏற்படும் உணர்ச்சியை இன்னொரு திரளுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு இவையே சாதனமாக விருக்கின்றன.

இவ்வணுக நரம்புநார்கள் மூளையில் மாத்திரமேயன்றி அங்கிருந்து தேகமெங்கும் வியாபித்திருக்கின்றன. ஆதலால், அவை தேகத்தில் ஓரிடத்தில் புலப்படும் செய்தியை மூளைக்கு அறிவிக்கவும், அம்மாதிரியே மூளையிலிருந்து தொழில் இயக்கும் கருவிகளுக்குச் செய்திகளைக் கொண்டுபோகவும், உபயோகமாக அமைந்திருக்கின்றன. இவ்விதமாகவே அநுபவங்களும் அவற்றிற்கேற்ற தொழில் இயக்கங்களும் சரீரத்தில் உண்டாகும்.

சிறு குழந்தைகளின் மூளையின் பரிமாணத்தை மட்டில் பார்த்தோமானால் அது சற்று பெரிதாக இருப்பதுபோலவே காணப்படும். ஒரு வயதுள்ள குழந்தையின் மூளை, வயதில் முதிர்ந்த மனிதனுடைய மூளையின் கனத்தில் ஏறக்குறைய அரைப்பங்கு எடை இருக்கும். நான்கு அல்லது ஐந்து வயதுக்கெல்லாம், பெரியவர்களின் மூளை எவ்வளவுபளு இருக்குமோ, அதில் அநேகமாய் முக்கால் திட்டத்துக்கு வந்துவிடும். ஆகையால் மூளையின் பரிமாணத்தைமாத்திரம் பார்த்தோமானால், குழந்தையின் கை, கால் முதலிய அவயவங்கள் அதிக உழைப்பு தாங்காத மென்மையுள்ளனவாக இருக்க, மூளைமட்டில் நன்றாக உழைக்கக்கூடியபடி வளர்ந்திருக்கிறதென்று தப்பாக எண்ணிவிடுவோம். இப்படி எண்ணியே, சிலர் குழந்தைகளை அதிகமாக உழைத்துப் படிக்கச்செய்து பிறகு வருந்துகிறார்கள். உண்மையில், குழந்தையின் மூளையானது

பரிமாணத்தில் மாத்திரம் பெரிதாகத் தோன்றுகிறதேயல்லாமல், அதன் உள்ளீடும் உள்வளர்ச்சியும் மிகச் சொற்பமாகவேயிருக்கும்.

சாமான்னியமாக, ஒரு தேங்காயின் பரிமாணத்தை மாத்திரம் பார்த்து, அது இளநீர்க்காய், அல்லது அரைக்காய், அல்லது நன்ருகத்தேறி முற்றிய காய் என்று சொல்லமாட்டார்கள். ஒரே பரிமாணம் உள்ளதாயிருந்தாலும், காயின் உள்ளீட்டின் முதிர்ச்சியைக் கவனித்தல்லவா தேங்காயின் தன்மையை அறிந்துகொள்ளுகிருேம்?

இப்படியிருக்க எவ்வித ஆலோசனையுமின்றி, நாம் நேரே கண்ணுல் பார்க்கமுடியாத மூளைப் பாகமானது முற்றியிருப்பதாக எண்ணிவிடுவது தகுதியாகுமா? விசாரிக்கப்புகுந்தால், குழந்தைகளின் மூளையானது முதலில் பரிமாணத்தில் மட்டும் பெரிதாகத் தோற்றுகிறதேயல்லாமல், அதன் உள்ளே அநேகமாய் நீர்ப்பாகந்தான் அதிகமாக இருக்கிறது. ஆகையால், முதிர்ந்த வயதில் இருப்பதைக் காட்டிலும் அதன் உட்பாகம் நிரம்ப மென்மையாகவே இருக்கும். தவிர அதில் உள்ள வெண்மையான பாகமும், திருநீற்றின் வண்ணங்கொண்ட வெண்ணெய்போன்ற பாகமும், நிறத்திலும் தன்மையிலும் தமக்குள் அதிக வித்தியாசமின்றியே காணப்படும். முதிர்ந்த தேகத்தில் உள்ள அங்கங்களின் திண்மை, இளங்குழந்தையின் அங்கங்களின் மென்மையிலிருந்தே கிரமமாக வளர்ந்துவரும்.

இதுவரையில் குழந்தையின் மூளையின் தன்மையைப்பற்றிச் சில உண்மைகளைச் சொன்னேம். இனி, மூளை பரவிவளரும் வகையைப்பற்றிச் சில உண்மைகளைத் தெரிவிப்போம்.

எல்லா இளம்பிராணிகளிடத்திலும் நாம் ஒரு செய்கையை வெளிப்படையாகக் காணலாம். அவை எப்போதும் இப்படி அப்படி அசைவதிலும், திரிவதிலும், அதிகப் பிரியமுள்ளவையாக இருப்பதை நாம் கவனிக்கலாம். இப்படி ஓயாமல் திரிவதில் உள்ள பிரியமே மூளைப்பாகத்தின் சுருசுருப்புத்தன்மையை வெளியே தோற்றுவிக்கிற முக்கிய குறியாகும். தேகத்தின் எல்லாப் பாகங்களிலும் நரம்புகள் இருக்கின்றன. இவையெல்லாம், பலவகையான சின்னபின்னல்களாகப் போய், மூளையில் ஒருங்கு சேர்ந்திருக்கின்றன. எந்தச் செய்கைக்கும் மூலகாரணம் மூளையின் ஏவலேயாம். மூளையே நடு நாயகமாக இருந்து சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் தொழிற்படுத்துகிறது. ஆகையால், கை கால்களை உதைத்துக்கொள்வது முதலாகிய குழந்தைகளின் செய்கைகள் எல்லாம், மூளை வேலை செய்து வருவதைக்காட்டும் குறிகளாகக் கொள்ள வேண்டும்.

இதிலிருந்து, நாம் இன்னொரு முக்கியமான உண்மையை அறிந்துகொள்ளலாம். சிறு குழந்தைகளைக் கற்பிக்கும்முறை சம்பந்தமாக நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயங்களுள் இஃதொன்றாகும். மூளையின் சுருசுருப்புத்தன்மையானது, தேகத்தின் இடைவிடாத சலனம் மூலமாகவே நமக்கு வெளித்தோற்றுகிறது, என்பது தெரியும்போது, இப்படிப்பட்ட தேக அசைவுகள் மூலமாகத்தான் நாம் மூளையைப் பாவி வளரச்செய்யவேண்டும் என்ற விஷயம் இனிது புலப்படும். சுருங்கச்சொல்லின், செய்கை அல்லது தொழில் மூலமாகவே; மூளை

விருத்தியடைகிறது. ஆதலால் மூளையை விருத்தி செய்வதற்குச் சிறந்த உபாயம் மேற்கூறிய செய்கைகளேயாகும்.

மூளையானது எண்ணங்களையே யோசிக்கும் கருவி என்று கருதிவந்தவர்கள், அது எவ்வாறு தொழிற்படுத்துங் கருவியாகவும் இருக்கிறது, என்று கேட்கலாம். சற்று யோசித்துப் பார்த்தோமானால், எண்ணத்துக்கும் தொழிலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதென்பது விளங்கும். இரண்டு பேர் பேசும்பொழுது, அவர்கள் மனத்தில் தோற்றுகிற எண்ணங்கள், கைகளின் அசைவு மூலமாகவும், தலையின் அசைவு மூலமாகவும் வெளித்தோற்றுவதைக் காண்கிறோமே. இதுவே இதற்குத் திருஷ்டாந்தம்.

ஆகவே, இளம்பிராயத்தில், மூளையானது நன்றாக முற்றாமலும் பரவி வளராமலும் இருக்கும். மூளையின் தன்மை தேகத்தின் செய்கை மூலமாக வெளியே காணப்படுகிறது. ஆதலால் நாம் கிரமமாக, உரிய செய்கைகள் மூலமாகவே மூளையை விருத்திசெய்ய முயல்வதுதான் ஒழுங்கான முறையென்பது விளங்கும்.

இந்த உண்மையிலிருந்து நாம் இன்னொரு சங்கதியை ஊகித்துக்கொள்ளலாம். சாதாரணமாக, நாம், சில குழந்தைகளை அதிசூக்ஷ்ம அறிவுள்ளவை என்று சிலாகிக்கிறோம் அல்லவா? அந்தக் குழந்தைகளை, பெரியோர்கள், 'அதிகக்கல்வி' என்றும், 'அதிமாத்திரை' என்றும் சொல்வார்கள். அந்த அந்தப் பருவத்துக்குத் தகுதியான செய்கைகளும் குணங்களும் தோற்றுவதுதான் இயற்கை.

இப்படிப்பட்ட குழந்தைகள் முதலில் தங்கள் வயதுக்கு மேற்பட்ட புத்திசாதுரியமுள்ளவையாக இருக்கும். பிறகு சில வருஷங்களுக்கெல்லாம் புத்தி மந்தப்பட்டு, பலஹீனமாய் விடும்.

தென்னை, மா, மாதுளை முதலிய மரங்களில் சில ஜாதிகள் அதிக சீக்கிரத்தில் விசேஷ பலனைக் கொடுக்கின்றனவே? இவை சில வருஷங்களுக்கெல்லாம் வளமை குன்றி, பலன் கொடுக்காமலே நின்று விடுகின்றன. நல்ல மரங்கள் எல்லாம் 'பருவத்தாலன்றிப் பழா' என்றபடி உரிய பருவங்களில்தான் பழுக்கும்.

அதுபோலவே குழந்தைகளும் பருவத்துக்கேற்ற வளர்ச்சி, புத்தி, உள்ளவைகளாக இருப்பதே நலம். சிறுபிராயத்திலேயே அதிக சூக்ஷ்மபுத்தியும் எண்ணமும் ஏற்பட்டால், அப்படிப்பட்ட குழந்தைகளை அதிகமாக உழைக்கச் செய்யக்கூடாது. சிலர் தங்கள் குழந்தைகள் சீக்கிரத்தில் மகா மேதாவிகளாக ஆகிவிடுவார்கள் என்று சந்தோஷம் அடைந்து, ஓடுகிற மாட்டின் வாலைப் பின்னும் முறுக்கி ஓட்டுவதுபோல, ஏற்கனவே அளவுக்கு மீறிய சுருசுருப்புள்ள குழந்தைகளை அதிகமாகப் படிக்கச்சொல்லி நிர்ப்பந்தித்து, கடைசியில் துர்ப்பாக்கியர்களாகிறார்கள்.

சிறு பிள்ளைகளைக் கற்பிக்குங்காலத்தில், அவர்களுடைய மனவளர்ச்சியோடு தேகவளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் நன்கு கவனிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு அநேகம் விஷயங்களைப் போதிப்பதோடேயே தங்கள் கடமையெல்லாம் தீர்ந்துவிட்டது என்று எந்த உபாத்தியாயரும் எண்ணக்

கூடாது. சிறு குழந்தைகளைக் கற்பிப்பதில், அவர்களுடைய கரணங்கள் எல்லாம் நேரான வழியிற் போகும்படி கவனித்து, அவர்கள் தேகத்தை நன்கு பாதுகாத்துப் போதிப்பதே உபாத்தியாயர் கடமையாகும்.

அத்தியாயம் 2

## குழந்தையின் உபாத்தியாயர்

இதுவரையில், குழந்தையின் முக்கியமான தன்மைகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தோம். இனி, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு உபாத்தியாயராக இருத்தற்கு எவர் தகுதியுள்ளவர் என்பதை இவ்வத்தியாயத்தில் விசாரிப்போம்.

பொதுவாகச் சொல்லுமிடத்து, கல்வி கற்பிக்கும் பலதிறப்பட்ட உத்தியோகங்களில், குழந்தைகளுக்கு முதன்முதற் கற்பிக்கும் தொழிலே அதிக உத்தரவாதமானதும், பிரயாசையோடு கூடினதாயும் உள்ளது என்பது, வித்தியா விஷயங்களை நன்கு ஆராய்ச்சி செய்தவர்களுடைய கொள்கை. இது பற்றியே, பள்ளிக்கூடங்களை நடத்துவதில் தக்க திறமையுள்ள தலைமை யாசிரியர்கள், குழந்தைகள் வாசிக்கும் ஆரம்ப வகுப்புகளில், போதனு விஷயங்களை நன்றாகக் கற்றறிந்தவரையே உபாத்தியாயராக நியமிப்பார்கள். சிறு குழந்தைகள் படிக்கும் வகுப்புகளில், கெட்டிக்கார உபாத்தியாயர்களை நியமித்துப் பாடம் சொல்லச் செய்துவந்த பள்ளிக்கூடங்களிலெல்லாம், அச்சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி திருப்திகரமாக இருப்பதை நேரே நமது பழக்கத்தில் கண்டறியலாம்.

சிறு குழந்தைகளைக் கற்பிக்க அதிகச் சாமர்த்தியம் வேண்டுமோ என்று சிலர் யோசிக்கலாம். அதிபால்யர்களான மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பிப்பதில் மிகக் கடினமான விஷயம் இதுவே என்று

ஹெர்பார்ட் முதலான மேல்நாட்டுப் போதன சாஸ்திர நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்து வெளியிட்டிருக்கிறார்கள். சிறுவர்களுக்குக் கல்வி புகட்டும் விஷயத்தில் இவர் எடுத்துச் சொல்லிய உண்மை நிரம்ப உபயோகமாக இருக்குமாதலால், அதனை இங்கே விவரிப்போம். சிறுவர்களுக்கேயன்றி, வயது முதிர்ந்த மாணாக்கர்களுக்குப் போதிக்கும் விஷயத்திலும், இந்த உண்மையை மறக்கக்கூடாது.

குழந்தைகள் எப்படிக் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்று விசாரிப்போமானால் இந்த உண்மை வெளியாகும். பொதுவாக, இரண்டொரு உதாரணங்களை எடுத்துக்கொண்டு, எவரும் எந்தவிதத்தில் தங்கள் அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதை முன்னே ஆலோசித்தோமானால், குழந்தைகள் எவ்வாறு கற்றுக்கொள்வார்கள் என்பதையும் அறிந்துகொள்ள இந்த ஆலோசனை உதவியாக விருக்கும்.

உதாரணம் 1. பெரிய நகரங்களில் ஆபீசுகளுக்கு விடுமுறை நாட்களில் ஜனங்களுக்குப் பொழுது போக்குக்காக, அநேகம் இடங்களில் பாட்டுக் கச்சேரிகளும் நாடகங்களும் நடக்கும். நாடகத்தில் பாடும்போது சிலர் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்து, நாடகம் கலைந்து ஜனங்கள் வெளியே போகிற போது, அன்று கேட்டதை, ஞாபகத்திலிருந்தே, சொற்பிழை, ஓசைப்பிழை இல்லாமல், நாடகம் நடித்தோர் பாடிய வண்ணமே பாடிக் காண்பிப்பார்கள். இதைக் கேட்டவர்கள் இவர்களுடைய ஞாபக சக்தியைக் கொண்டாடி ஆச்சரியப்படுவார்கள். இவர்களுக்கு இது எப்படிச் சாத்தியமாயிற்று?

ஏற்கனவே, இவர்களுக்குச் சங்கீதத்தில் நல்ல பழக்கம் இருந்தமையாலேயே, புதிய பாட்டு ஒன்றைக் கேட்டவுடன், அதன் சொற்களும், ஓசையும் அவர்கள் மனத்தில் நன்கு பதிந்தன. இன்னும் சிலர் இவர்களைப் போலவே பாட முடியாவிட்டாலும் கொஞ்சம் குறையாகப் பாடிக்காட்டலாம். முன்னமே சங்கீத ஞானம் சிறிது இருந்ததனல்தான், இவர்களுக்கும் இம்மாதிரி கொஞ்சமாவது பாட முடிந்தது. ஆனல் நாடகத்தைக்காண வந்தவர்களிற் பெரும்பாலார்க்குத் தாங்கள் செவிமூலமாகக் கேட்ட ஆனந்தம் தவிர வேறென்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாது. அப்படி ஆனந்திப்பதிலும் அவர்களது களிப்பின் அளவும் தன்மையும்கூட, ஏற்கனவே கொஞ்சம் சங்கீதங்கேட்ட பழக்கம் காரணமாக, ஒருவருக்கு ஒருவர் வேற்றுமைப்படும். பலருக்கு ஒன்றுமே ஞாபகத்திலிராது. அல்லது ஒன்றும் அர்த்தமாகி யிராது; சங்கீதத்தைக்கேட்டு அதில் உருசி பிறவாதவனே, எப்போது பாட்டுக் கச்சேரி முடிந்து வெளியே உலாவப்போகலாம் என்ற கவலையோடு, நண்பரின் நிர்ப்பந்தத்திற் கிணங்கி உட்கார்ந்திருப்பான். இங்கே எடுத்துச் சொன்ன உதாரணத்தில், ஒருவரினெருவர்க்கு வித்தியாசம் ஏற்பட்டதன் முகாந்தரம், அவர்களுக்கு இதற்கு முன்னிருந்த இசையறிவின் அளவேயென்று கண்டோம் அல்லவா?

எதை நாம் கவனித்தாலும் இந்த உண்மையே மேம்பட்டுத் தோற்றும்.

உதாரணம் 2. வேர்க்கடலையின் மேற்புறத்தோலை விரைவாக எடுப்பதற்கு அனுகூலமான ஒரு புதிய

எந்திரம் ஒரு கிராமத்துக்கு முதன்முதற் கொண்டு வரப்பட்டது. அவ்வூர்ப் பள்ளிக்கூடப்பிள்ளைகள் அதைப் போய்ப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தப் பிள்ளைகளுள், எவனுவதொருவன் இதற்கு முன்னே நகரத்தில் சிலகாலம் வசித்திருந்தால், அவன் மனத்தில் அந்த எந்திரத்தின் ஓசை ரெயில் எஞ்சின் ஓசையைப்போல் இருக்கிறதென்பது புலப்படலாம். இதைத்தவிர அவன் வேறொன்றையும் கவனிக்கமுடியாது. ஆனல், கிராமத்திலேயே வளர்ந்த குழந்தைகள், மணிலாக்கொட்டையை வெயிலில் உலர்த்தி அதை அநேகம் வேலையாட்கள் கையில் சிறு தடிகளைக்கொண்டு அடித்துத் தோலை உரிப்பதை முன்னே பார்த்திருந்தால், அப்படி உரித்த கொட்டை மெஷினில் கொடுத்து உரித்ததைப்போலவே இருக்கிறதா என்பதைக் கவனிப்பார்கள். இவர்களுக்கு எஞ்சின் விசேஷம் புலப்படாது; நகரப்பிள்ளைகளுக்கோ உரித்த பருப்பின் தன்மை விளங்காது. அவர்கள் முறையே, ஏற்கனவே தாம் அறிந்திருந்த விஷயங்களைக் கொண்டே, புதிய விஷயத்தை மனத்திற் கொள்ள வேண்டும். அதுபற்றியே அவர்கள் மனத்தோற்றத்தின்கண் இவ்வித வித்தியாசம் ஏற்பட்டது.

ஆதலால் எந்த அறிவைப் பெறுவதற்கும், அதனோடு பொருத்தமான சில அம்சங்கள் ஏற்கனவே தெரிந்திருக்கவேண்டும். தெரிந்ததைக்கொண்டே தெரியாத விஷயத்தை அறிந்துகொள்ள முடியும். புதிய அறிவைப் பெறுவது பழைய ஞானத்தைக் கொண்டுதான் சாத்தியமாகும்.

உதாரணம் 3. பலான கனவானைக் கண்டு அவ்ரிடம் இந்தக் கடிதத்தைக் கொடு என்று ஒருவனைக் கட்டளையிடுகிறபோது, அவன், "ஐயா, நான் அவரை இதற்குமுன் பார்த்ததில்லையே. அவரை நான் தெரிந்துகொள்வதெப்படி" என்று கேட்டால், நாம் அவனிடம் என்ன சொல்லுகிறோம்? 'இந்தக்கடிதத்தை எடுத்துக்கொண்டு நான் சொன்ன இடத்துக்குப்போ. நீயும் ஷண்முகமும் சிநேகம் அல்லவா?' 'ஆம்'. 'நீ இப்போது பார்க்கவேண்டியவர் ஷண்முகத்தைப்போலவே இருக்கும்போது, அவனை விடக் கொஞ்சம் கறுத்த நிறம் உள்ளவர்' என்று சொல்வோம்.

இந்த உதாரணத்தாலும், தெரிந்த விஷயங்களின் உதவியினாலேயே தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளக்கூடுமாக இருக்கிறது என்பது புலப்படும். புதிய ஞானத்தைப் பழைய அறிவின் உதவியாலேயே பெறக்கூடுமாயிருக்கிறது.

ஆகையால் உபாத்தியாயர் குழந்தைகளுக்கு ஒரு புதிய விஷயத்தைக் கற்பிக்கும்போது, அவர்களுக்கு முன்னமே தெரிந்துள்ளவற்றோடு, புதிய விஷயத்தைத் தக்கபடி பொருத்திச் சொன்னால் தான், அவர்கள் அதனை அறிந்துகொள்ள முடியும். முற்றிலும் புதிதாயுள்ள விஷயத்தைப் பிள்ளைகள் உபேக்ஷை செய்வார்கள். அது அவர்கள் மனத்துட் செல்லாது. ஆதலால் ஞானத்தை அடையும் விஷயத்தில், உபேக்ஷை அல்லது அசட்டையை நீக்குவதற்கு ஒரே உபாயம்தான் உண்டு. ஏறக்குறைய பழக்கமான பொருள்களைப்பற்றியே போதிப்பது தான் நல்ல உபாயமாகும்.

அறிவு எப்படி விருத்தியாகின்றது என்ற விஷயத்தைக் குறித்து இங்கே விவரித்துச் சொன்னதிலிருந்து, சிறு குழந்தைகளுக்குப் போதிப்பதில் உள்ள முக்கியமான பிரயாசை இஃது என்பது நன்ருக விளங்கும். ஒரு சிறு குழந்தையின் மனத்தின் பரப்பு மிகச் சிற்றளவையுடையது. அதற்குத் தெரிந்துள்ள வஸ்துக்களோ மிகச் சொற்பம். வஸ்துஞானமும் மிகக் கொஞ்சம். அதனுல் ஒவ்வொரு புது விஷயத்தையும் அதற்கு எடுத்துச் சொல்லும்போதெல்லாம், நாம் சொல்வதை அறிந்து கொள்ள அதற்குச் சக்தியிருக்கிறதா என்பதை உபாத்தியாயர் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஆனுல் சிறு குழந்தைகளுக்கு நாம் மிகப் பெரிய விஷயங்களைப் போதிக்கப்போவதில்லை. அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியவை யெல்லாம் மிக்க எளியனவேயன்றி அரியவையல்ல. ஆயினும், மிக்க எளிய விஷயமானுலும், அது முற்றிலும் புதியதாக இருந்தால், அசட்டை செய்யப்படும். எந்த விஷயமும் மிகவும் நூதனமாயிருக்குமாயின் அது மனத்துட் புகாது. ஆதலால், ஒவ்வொரு சிறு விஷயத்தையும், குழந்தைகள் மனம் உட்கொள்ளுமாறு, போதிப்பதற்கு அதிகச் சாமர்த்தியம் வேண்டும்.

இப்படிப்பட்ட சாமர்த்தியத்தைப் பெறுவது சுலபமல்ல. சிறு குழந்தைகளுக்குப் போதிக்கும் முறைகளை அறிந்துகொள்ள நல்ல பழக்கம் (டிரெயினிங்) வேண்டும். உபாத்தியாயர்கள் இப்படிப்பட்ட பழக்கத்தைப் பெற்ற பிறகும் குழந்தைகளின் மனத்தைப்பற்றி அநேகம் விஷயங்களைத்

தெரிந்துகொள்ள முயலவேண்டும். பெற்றோர்களும் குழந்தைகளின் தன்மைகளை உணர்ந்து அவர்கள் கல்விப்பயிற்சியிலும் நடைப்பழக்கத்திலும் தங்கள் மனத்தைச் செலுத்தவேண்டும்.

குழந்தைகளின் தேகவளர்ச்சி, மனவளர்ச்சி, நன்னடைப்பழக்கம், கல்வி முதலிய விஷயங்களில் எவ்வளவுக்கெவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு, அவர்கள் சீராக வளர்ந்து வருவார்கள். ஆனதால், உபாத்தியாயர்களுக்கு மாத்திரமேயன்றி, பெற்றோர்களுக்கும் பயனாகு மாறு குழந்தைகளின் முக்கியமான குணவிசேஷங் களுள் சிலவற்றை இங்கே விளக்கிக் கூறுவோம்.

குழந்தைகளின் தன்மைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் குழந்தைகளோடு நன்றாகப் பழக வேண்டும். அவர்கள் செய்கைகளையெல்லாம் பிரிியத்தோடு கவனிக்கவேண்டும். அப்படிக் கவனித் தால்தான் அவர்களுடைய தன்மைகள் தெரியும். அப்போது, அவர்கள் நடையையும் கல்வியையும் இப்படிப்பட்ட முறைகளால் விருத்திசெய்தால் பயனுண்டாகும் என்பது விளங்கும்.

இப்படி, குழந்தைகளோடு பழகி அவர்கள் தன் மைகளைப்பற்றிய ஞானத்தைப் பெற விரும்பு வோர்க்கு இன்றியமையாத குணம் ஒன்றுண்டு, அந்தக்குணம் எல்லா ஸ்திரீகளிடத்திலும் இருக் கின்றதென்று கூறலாம். அந்தக் குணம் இல்லாத உபாத்தியாயர், வயதிற் பெரிய பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லி, அவர்களை விருத்திக்குக் கொண்டு வருவாரானாலும், சிறு குழந்தைகளுக்குப் போதிக்க அருகராகமாட்டார். அந்த முக்கியமான குணம்

எப்போது அவரிடம் இல்லையோ, அப்போதே அவர் சிறு குழந்தைகளுக்குப் பாடம்சொல்லும் தொழிலை மேற்கொள்ளக்கூடாது.

இந்தக் குணம் என்ன? அதுவே அன்புடைமை எனப்படும். சிறு குழந்தைகளின் தன்மைகளை அறிய விரும்புவோர் அவர்களிடம் மிக்க அன்போடு இருத்தல்வேண்டும். அன்பு இருந்தாலன்றி அவர்களை நன்கு அறிந்துகொள்ள முடியாது.

சிறு குழந்தைகளுக்குக் கற்பிக்கும் உபாத்தியாயரிடத்தில் இருக்கவேண்டிய முக்கியமான குணம் அன்புடைமையேயாகும் என்ற உண்மையானது பன்முறை எடுத்துச்சொல்லத்தகும். அன்பு இருந்தாலன்றி, குழந்தைகளின் சந்தோஷங்களிலும், கவலைகளிலும், மனஞ்சென்று தெரிந்துகொள்வது முடியாது. 'அன்பகத்தில்லா' உபாத்தியாயர் ஒருவர் எப்படியாவது சமாளித்து குழந்தைகளின் தன்மைகளைத் தெரிந்துகொண்டுவிடலாம் என்று எண்ணுவது தவறு. அவர் முயற்சி வீணாய்விடும். ஏனெனில், குழந்தைகள் தம்மீது அன்பில்லார் முன்னே, குழந்தைகளாகவேயிருக்கமாட்டார்கள். தம்மிடம் எவர் அன்புடையராக இருக்கிறார் என்பதைக் குழந்தைகள் எளிதில் தெரிந்துகொள்வார்கள். எவர் அன்புள்ளவர்போல நடிக்கிறார், எவர் உண்மையாகவே அன்புள்ளவராயிருக்கிறார் என்பதைக் கண்டுகொள்ளுங் குணம் குழந்தைகளுக்கு உண்டு.

சூரியன் உதயமாகும்போது, நன்றாக மலர்கிற தாமரைப்புஷ்பம், சந்திரன் உதயமாகும்போது, குவிந்துகொள்கிறது. மலர்களைப்போலவே

குழந்தைகளும் அன்புள்ளார் வரவால் நகைமுகங் கொண்டு இன்புற்றிருப்பார். அன்பில்லாதார் வரவால் மனம் நலிந்து அழுங்குவார். ஆதலால், உபர்த்தியாயர் குழந்தைகளிடம் 'தாயொக்கும்' அன்போடு இருத்தல்வேண்டும்.

மழையிலும், காற்றிலும், மலர்கள் குவிந்து வருந்துவதுபோலவே உண்மையான அன்பில்லாமல் பெருமிதத்தோடு பேசுபவர்களிடத்தில் குழந்தைகள் மனத்தைத் திறந்து காட்டமாட்டார்கள். அவர்களிடம் அணுகிப் பழகி அவர் தன்மைகளை அறிந்துகொள்ள விரும்புவோர் அவர்பால் மிக்க அன்புள்ளவர்களா யிருந்தாலன்றி, அவர்களை அறிந்துகொள்ள முடியாது. கடுமையாகவும், திருக்கு முறுக்காயும் அவர்களை அணுகுவது தவறு. எல்லாக் குணங்களும் நிரம்பி, புத்திசாதுரியம் உள்ளவராயினும் உபாத்தியாயரிடம் அன்பொன்று இல்லாவிடின், அந்த அன்பில்லாமையாகிய குறையே அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பெருந் தடையாய் நிற்கும்.

அத்தியாயம் 3

## இளம்பிள்ளைத் தன்மை

சிறு குழந்தைகளின் தன்மைகளை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசையானது நம்மைத் தூண்ட, நாம் அவர்களிருக்கும் இடத்தை நாடிச் செல்வோம். அவர்களோடு பழகுவதற்கும், அவர்கள் தம் தன்மைகளை ஒளியாமல் நமக்குத் தெரியக் காண்பிப்பதற்கும், நம்மிடம் இருக்கவேண்டிய இன்றியமையாக் குணம் அன்புடைமையே என்பதை முன்னமே அறிந்துகொண்டோம். ஆதலின் அவர்களிடம் மனமார்ந்த அன்போடு அவர்கள் கூட்டமாகக் கூடியிருக்கும் இடத்திற்குச் செல்வோம். அவர்பால் என்ன என்ன விசேஷ குணங்களைக் காண்கிறோம்? பார்த்த அளவிலேயே, அவர்களிடம் ஒரு குணம் சிறப்பாகத் தோற்று கிறது. அதாவது, ஓயாத சுருசுருப்பு. தூங்கிவிட்டால் சும்மா இருக்கிறார்கள். விழித்திருக்கையில் சிறிது நேரங்கூட சும்மா இருக்கமாட்டார்கள். ஏதாவது செய்துகொண்டேயிருப்பார்கள். அவர்கள் தேகமும் மனமும் ஓய்வின்றி ஏதாவதொரு செய்கையில் முயன்றிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. முன்னே சொன்னபடி, மனத்தின் சுருசுருப்பு, இயற்கையாக வெளிப்படையான கரசரணாதிகளின் சேஷ்டிதங்களால் விளங்குகின்றது. 'குழந்தை ஓயாமல் விஷமம் பண்ணிக்கொண்டிருக்கிறது' என்று வெறுத்துச் சொல்வதுபோலக் கூறி,

பெற்றோர் சந்தோஷிப்பார்கள். இந்த உண்மையை உபாத்தியாயர்களும் அவசியம் அறியவேண்டியது. சாதாரணமாக, ஆரோக்கியமாக இருக்கிற குழந்தைகள் ஓயாமல் சேஷ்டித்துக்கொண்டேயிருக்கும். விஷமம் பண்ணுவது மனத்தின் சுருசுருப்பைக் காட்டுகிறது. ஆகையால் 'இந்தக் குழந்தை எப்போதும் ஏதாவது சேஷ்டிதங்களைப் பண்ணிக் கொண்டேயிருக்கிறது. இதைச் சற்று நேரமாவது சும்மா இருக்கச் செய்யவேண்டும்' என்று ஆரம்பித்து, சிறு குழந்தையைச் சும்மா இருக்கச்சொல்லி நிர்ப்பந்திப்பது மூடத்தனம்.

குழந்தையின் தேகத்தில் நலியொன்றும் இல்லாவிட்டால், அது சற்றுநேரங்கூட சும்மா இராது. வயது முதிர்ந்தவர்கள் ஓய்ந்திருப்பதைப்போல் சிறு குழந்தைகள் இருக்கமாட்டார்கள். கடுமையான வெயில் நேரங்களில், வயதானவர்கள் உறங்குவார்கள்; சிறு குழந்தைகளோ, சத்தமிட்டுக் குலாவி விளையாடும். குழந்தைகள் சத்தம் செய்து கொண்டு விளையாடுவதால், பகல் உறக்கங்கெட்டு விழித்துக்கொண்ட கிழவர்கள், 'இந்தப் பசங்களுக்கு வெயில் சந்திரனைப்போல இருக்கிறது. வெயிலை லக்ஷ்யம் செய்யாமலே விளையாடுகிறார்கள்' என்று பாராட்டி, தூக்கங்கெட்டதால் உண்டாகிய கோபத்தை, குழந்தைத் தன்மையை அன்போடு கவனித்ததால் உண்டான மகிழ்ச்சியால் மறைப்பார்கள்.

ஆனதால், ஓயாத சலனம் ஆரோக்கியக் குறிப்பு என்பதை உபாத்தியாயரும் பெற்றோரும் உணரவேண்டும். இதுதான் இயற்கைத்தன்மை.

இளம்பிராயப் பிராணிகள் எல்லாம் ஓயாமல் சலித்துக்கொண்டுதானிருக்கும். பசு அமைதியாக ஓரிடத்தில் இருக்கிறபோது, அதன் கன்று எவ்வளவு துள்ளி விளையாடுகிறது? இதைப் பார்க்கும் போதுகூட, சிறு குழந்தைகளின் இயற்கை இவ்வண்ணம் இருக்கும் என்பதை அறியாமலிருக்கமுடியுமா? நோய் ஒன்றுமில்லாமல், சௌக்கியமாக இருக்கும் குழந்தை, எப்போதும், ஏதாவதொன்றைச் செய்ய எத்தனிக்கும். சும்மா இராது. குழந்தையைச் சீராட்டவேண்டும் என்றெண்ணி தகப்பனார் மடியில் எடுத்து வைத்துக்கொண்டால், அது, அங்கே சற்றும் நில்லாது, கால்களை உதைத்துக்கொண்டு பரபரப்போடு இங்குமங்கும் சென்று, விஷமம் செய்ய ஆசைப்படும்.

ஒரு குழ்ந்தை. உட்காரவைத்த இடத்திலேயே அசைவற்று சும்மா இருக்குமானால், அதற்குச் சரீரத்தில் ஏதோ நோய் இருக்குமென்று சந்தேகிக்கலாம். 'இந்தக் குழந்தை விளையாடவும் இல்லை. சிரிக்கவும் இல்லை. விட்ட இடத்தில் சும்மா படுத்திருக்கிறது. அதற்கு உடம்பு என்னமோ தெரியவில்லை' என்று தாயார் சந்தேகிப்பது குழந்தைத் தன்மைய்ய அவள் நன்கறிந்திருத்தலைக் காட்டும்.

குழந்தை ஆரோக்கியத்தோடு கூடியதாயிருப்பின், இடைவிடாமல் சேஷ்டிதங்களைச் செய்யும் என்ற உண்மையை, ஸ்ரீகண்ணனை வளர்த்த யசோதைப்பிராட்டியார் திருவாக்கில் காணலாம். 'இந்தச் சிறிய குழந்தை செய்யும் செய்கைகளைப் பொறுக்கும் வல்லமை எனக்கு இல்லாமையால், நான் மிகவும் மெலிந்து போனேன்' என்று, தன்

குழந்தையின் சேஷ்டிதத்தை அதிக அன்போடும் கவனித்துச் சந்தோஷிக்கிறாள்.*

நல்ல பழக்கங்களால் காலக்கிரமத்தில் சிறு குழந்தைகள்கூட அதிகச் சத்தம் செய்யாமலும் இங்குமங்கும் திரியாமலும் இருப்பார்கள். இந்த அமைதி, நற்போதனையாலும் நற்பழக்கத்தாலும், கொஞ்ச காலத்துக்குப்பிறகு, தானாகவே ஏற்படும். அதை விட்டு, நீடித்த காலத்தில் ஏற்படவேண்டிய பழக்கத்தைச் சீக்கிரத்தில் வலிந்து உண்டாக்க எத்தனித்தல் தவறு. ஓயாத சலனம் சிறு குழந்தைகளின் சுபாவகுணம்; ஆகையால் அவர்கள் கூடியிருக்கும் வகுப்பில், அவர்களியற்கைக்குப் பொருந்த அசைவுக்கும் சலனத்துக்கும் போதிய வசதிகளும், சௌகரியங்களும், நிரம்ப இருக்கவேண்டும்.

சிறு குழந்தைகள் சற்றும் சும்மா இராமல், ஏதாவது சேஷ்டிதங்களைச் செய்யும் சுபாவம் உள்ளவர்கள் என்பது தெரிந்தபின்பு, அவர்கள் எந்த எந்த வகைகளில் சேஷ்டிதங்கள் செய்கிறார்களென்பதைக் கவனிப்போம்.

மண்ணில் அளைந்து விளையாடுவதில் அவர்களுக்கு அதிகப் பிரியம் உண்டு. விளையாடும் இடங்களில் சிறு மண்கட்டிகளைக் கொண்டுபோய்ச் சேர்த்து வைத்துக்கொள்ளுவார்கள். சிறு குழந்தை, சில மண்கட்டிகளை வைத்துக்கொண்டு, இது வீடு, இது

* "கிடக்கில் தொட்டில் கிழிய வுதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்லில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்."
(பெரியாழ்வார்—திருமொழி. 1, 9.)

கோயில், இது குளம், இது கிணறு என்று சொல்லிக்கொண்டே விளையாடும். இவ்விஷயத்தில் குழந்தைகளுக்குள் வித்தியாசம் இல்லை. வீதியில் புழுதியில் அளைந்து விளையாடும் குழந்தை விளையாட்டுக்கு உறுப்பான அநேகம் வஸ்துக்களுக்குப் பதிலாக மண்கட்டியை வைத்து விளையாடும். சிறு வீடுகளைக் கட்டிக்கொண்டு, இங்கே தொட்டில் இருக்கிறது, இங்கே சமையல் அறை இருக்கிறது, என்று வைத்து விளையாடுவார்கள். இப்படி, ஒன்றைச் சிருஷ்டிப்பது, கட்டுவது, என்ற தொழில் வகைகளில் அவர்கள் சேஷ்டிதம் செல்லும்.

குழந்தைகள் எப்போதும் சுருசுருப்பாக இருப்பார்கள் என்று சொன்னோம். அந்தச் சுருசுருப்பு, இப்படிக் கட்டிடங்களைக் கட்டுவதில் பெரும்பாலும் செல்லும். ஒரு சிறு பருக்கைக்கல்லை வைத்து, அதையே சுவர் என்று மதித்து, தரையில் குச்சியால் கோடுகளைக்கீறி, கட்டுக்கோப்பு செய்துகொள்வார்கள். அந்தக் கோடுகளையும், சாமான்களையும் பார்த்தால் நமக்கு ஒன்றும் விளங்காது. அவர்களுக்கு அவை நிரம்ப முக்கியமான கட்டிட உறுப்புக்களாகவே விளங்கும். ஆகையால் அவர்கள் வைத்திருக்கும் வஸ்துக்களை நாம் மாற்றிவைத்தாலுங்கூட அவர்களுக்கு வருத்தம் உண்டாகும். அவர்கள் போடும் கோடு ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் உண்டு. *'அறையும் ஆடரங்கும்' பிள்ளைகள் தரையிற் கீறிடுவதைப் பாராதார் யார். இப்படி வீதியில் மண்ணில்விளையாடுவதைப்போலவே, கடற்கரையோரத்

* கம்பராமாயணம்—சிறப்புப்பாயிரம்—செய்யுள், 10.

திலும் ஆற்றோரங்களிலும், மணலில், தங்கள்மனோ தர்மம் போனபடி, எதை இச்சிக்கிறார்களோ அதை உடனே ஒருவகையாகச் சிருஷ்டித்துக்கொண்டு விளையாடுவது குழந்தைகளின் சுபாவம். இப்படி, கட்டுக்கோப்பு வகையில் குழந்தைகள் ஓயாமல் சேஷ்டிதம் செய்வார்கள். இந்த உண்மையை உபாத்தியாயரும் பெற்றோரும் நன்றாகக் கவனித்தறிந்தால், போதனவகைகளில், இந்த இயற்கைச் சுருசுருப்பையே சுலபமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

சிறு குழந்தைகள், மனை கோலி, அறை வகுத்து, சிற்றில் கட்டி, பண்டங்களைச் சேமித்து விளையாடுவதைக் கவனிப்போமானால், அவையெல்லாம் பெரியவர்கள் குடும்பம் நடத்துவதைப்போலவே இருக்கும். நமக்கு அவை வினோதமாகத் தோற்றலாம். ஆனால் குழந்தைகளோ ஒவ்வொரு சிறு விஷயத்தையும் ஆலோசித்து, தம்மோடேயே பேசித் தீர்மானித்துக்கொண்டு, தங்கள் முழுமனத்தையும் அவற்றிற் செலுத்தி விளையாடுவார்கள். இவர்களே பிறகு குடும்பத்தை நடத்துபவர்கள்; கட்டிடங்களைக் கட்டுபவர்கள்; ஒப்புரவு தெரிந்து வாழ்பவர்கள்.

கட்டிடங்களைக்கட்டும் விளையாட்டுக்கு உறுப்பாக, சிறு குழந்தைகளிடம் சில குணங்கள் இருக்கின்றன. கட்டிடங்களைக் கட்டுவதாகிய செய்கைக்கு அடிப்பீடமாகவும், அவ்வகைச் சேஷ்டிதத்துக்கு ஆதாரமாகவும், அதைச் செய்வதற்கு வேண்டிய சாதனங்களைத் தருவதாகவும் உள்ள பல்வகைக் குணங்கள் குழந்தைகளிடம் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவற்றுள் முதலாவதாக நாம் கவனிப்பது, சிறு குழந்தைகளின் நூதன அற்புத ஆராய்ச்சி விசேஷம். சிறு குழந்தைகளிடம் உள்ள குணங்களுள், அதிசயங்களை ஆராயுங்குணமே மற்றக்குணங்களினுந் தலைநிமிர்ந்து நிற்பதைக் காணலாம். சிறு குழந்தை எதையும் அதிசயத்தோடு பார்த்து அறிந்துகொள்ள விரும்பும். இந்தக் குணமானது வெகுவாய் அநேகம் ஜீவப்பிராணிகளின் குட்டிகளிடமும் இருப்பதை யாவரும் கவனிக்கலாம். ஒரு சிறு பூனைக்குட்டியை ஒரு புதிய அறைக்குள் விட்டுவிட்டால், அது என்ன செய்கிறது? மெல்ல மெல்ல, அந்த அறையின் மூலைகளையும், ஓரங்களையும், சந்து பொந்துகளையும், வெகு ஊக்கமாகவும் நிதானமாகவும் உற்றுப்பார்க்கின்றதல்லவா? அதைப்போலவேதான் குழந்தையும் தன்னைச்சுற்றிலுமுள்ள எல்லா வஸ்துக்களையும் உற்றுப்பார்த்தறிய விரும்புகிறது. ஆனால், பூனைக்குட்டி பார்ப்பதை எல்லாரும் எளிதில் கவனிக்கிறார்கள். குழந்தைகளோ. தங்கள் மனத்தில் உதிக்கும் உற்சாகத்தை அனுசரித்துப் பார்க்கும் இயல்புள்ளவர்கள். ஆகையால்தான் நாம் அவ்வளவு சுலபமாக அதனைக் கவனிப்பதில்லை.

தன் குழந்தையைத் தனியே விளக்குக்குச் சமீபத்திலாவது அடுப்பின் அண்டையிலாவது விடக்கூடாதென்று தாயார் அறிவாள். ஏனெனில் அது தானே மார்பினால் ஊர்ந்துகொண்டுபோய்க் கையைச் சுட்டுக்கொள்ளும் என்று பயந்து, அவள் குழந்தைக்குச் சமீபத்தில் இருந்து அது நெருப்பைத் தொடாதவண்ணம் கவனித்துக்கொள்ளு

வாள். ஊர்ந்து செல்லத் தொடங்கிய குழந்தை விழித்திருக்கும்போது சற்றும் சும்மா இராது. இங்குமங்கும் மார்பினால் நகர்ந்து சென்று சமீபத்தில் உள்ள வஸ்துக்களைத் தொடும்; முடியுமானால் அவற்றைப் புரட்டும், இழுக்கும், தள்ளும்.

மேலே சொன்னபடி பூனைக்குட்டி அன்றயைச் சுற்றிப்பார்க்கும் சுபாவமும், குழந்தை விளக்கண்டையில் ஊர்ந்துபோய் அதனைத் தொடும் சுபாவமும், உள்ளபடி, பூகோள விஷய ஆராய்ச்சிக்காக ஒருவன் இமயமலையின் சிகரங்களை ஏறிப்பார்க்க முயற்சிசெய்யும் சுபாவத்தோடும், சமுத்திரத்தின் கீழ்ப்பாகத்தில் என்ன ஜந்துக்கள் இருக்கின்றன என்பதை அறிய அதில் மூழ்கிப் பார்ப்பவனுடைய முயற்சியோடும் ஆராய்ச்சிச் செயலில் ஒருவாறு ஒற்றுமையுள்ளனவே. நூதனங்களை அறிய விரும்பும் இயல்பான குணமே இப்படிப்பட்ட செய்கைகளில் ஜீவர்களைச் செலுத்துகிறது. 'அப்படியிருந்தும், இந்த உண்மை நமக்கு எளிதில் தோற்றுவதில்லை.

குழந்தைக்கு கிலுகிலுப்பை, பொம்மை, சிறு பறை, வாத்தியம், ஊதுகுழல் போன்ற விளையாட்டுச் சாமான்களை வாங்கிக்கொடுத்தால், அது சற்று நேரத்துக்கெல்லாம், அவற்றைக் கிழித்தும், ஒடித்தும், சின்னபின்ன மாக்கிவிடுகின்றது. இப்படிச் செய்கிறதே என்று பிறகு அதற்கு ஒன்றும் வாங்கிக்கொடாமல் இருக்கலாமா? பின்பு அவற்றுள் ஒன்றைக் கண்டபோது, 'அது வேண்டும்' என்று கேட்கும். உண்மையில் குழந்தைக்கு அவற்றைக் கிழித்துக் கெடுக்கவேண்டும் என்ற எண்ணம்

இல்லை. விளையாட்டுச் சாமான்களில் அதற்கு எவ்வளவோ ஆசையுண்டு. அதுபற்றியே அவற்றை நன்ருகப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறது. அவ்வாறு பார்க்க முயலும்போது, கிலுகிலுப்பை போன்றவை கிழிந்து உபயோகமற்றுப்போகின்றன. ஆலயங்களில் திருவிழா நடக்குங்காலத்தில், கடைகளில் குழந்தைகளுக்குவிளையாட்டுச்சாமான்கள் விற்பார்கள். அவற்றுள் ஒன்றை 'கிறிஸ்துமஸ் பந்து' என்று சொல்லுவார்கள். குழந்தைகள் அதைத் தங்கள் இஷ்டப்படி பேரிட்டுச் சொல்வி, அந்த ஊதுகருவி வேண்டும் என்று வாங்கிக் கொள்ளும். அதன் அமைப்பு வருமாறு: இந்தியா ரப்பர் என்ற மிகமெல்லிய வஸ்துவால் ஒரு பையைப்போலச் செய்திருக்கும்; அதனுள்ளே ஒரு சிறு குழலை வைத்து, அதன்வழியே ஊதினல் காற்று உள்ளே சென்று அந்தப் பையைப் பெரியதாகச் செய்கிறது. பிறகு சும்மா விட்டுவிட்டால், உட்சென்ற காற்று, மேற்கூறிய குழல்வழி வெளியே செல்லும்போது ஓர் மெல்லிய நாண்போன்ற பாகத்தில் உராய்ந்து இனிமையான ஓசையை எழுப்பும். இது குழந்தைகளுக்கு மிகவும் பிரியமானதோர் விளையாட்டுச் சாமான் ஆகும்.

வாங்கிக் கொடுத்தவுடனே, குழந்தை, இதனை ஊத ஆரம்பித்து, நன்ருக ஊதத்தெரியாமல் வாய் எச்சிலால் பையை நிறைத்துவிடும்; அல்லது அளவுக்கு அதிகமாக ஊதும்; அப்படி அளவுக்குமீறி ஊதினல், காற்று அதிகமாகி, ரப்பர்பை அதனைத் தாங்காது 'படார்' என்ற சத்தங் கேட்க, கிழிந்து போகும். பிறகு அது ஊதுவதற்குத் தகுதியற்ற

தாய் விடுகிறது. ஆனபோது, இன்னொன்று வேண்டும் என்று குழந்தை அதையே மறுபடியும் விரும்பும்.

இதனால், குழந்தைக்கு அதைக் கிழித்துக் கெடுத்துவிடவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பது விளங்கும். பின்பு இன்னொன்றை வாங்கிக் கொடுத்தால், அது அதிகக் காற்றைக் கொள்ளாது என்று, குழந்தை தானாகவே அறிந்து, அதை அளவாக ஊதி ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளும். தான் அறிந்துகொண்ட இரகசியத்தைப் பற்றித் தன்னைத்தானே வியந்துகொள்ளும். சில சமயம் மற்றக் குழந்தைகளுக்கும் இதை எடுத்துச் சொல்லும்.

இவ்வாறு நூதனத்தை ஆராய்ச்சி செய்யும் இயல்புக்குணம் குழந்தைகளிடம் இருப்பது, அவர்களுடைய ஞானத்தை விருத்திபண்ணிக்கொள்ளுவதற்கு உதவியாகவிருக்கிறது. நாம் நன்றாகக் கவனிப்பதில்லையேயொழிய, உற்றுப்பார்த்தால், குழந்தைகள் சிசுபிராயத்திலிருந்தே நூதனங்களை அறிய ஆசைப்படுகிறார்கள் என்ற உண்மை தெரியவரும்.

முதலில், இளங்குழந்தை தன் வாயினால் வஸ்து ஞானத்தைப் பெற முயலும். எதை எடுத்தாலும் வாயில் வைத்துப்பார்க்கும். வாய்க்குள் வைக்கத்தகாத ஆணி முதலியவற்றைத் தாயார், ஜாக்கிரதையாக, குழந்தைக்கு எட்டாதபடி அப்புறப்படுத்தி வைப்பாள். கொஞ்சகாலத்துக்கெல்லாம், வாயில் வைத்துக்கொள்வதைப் போக்கி, கையால் தொட்டும், தொட்டு எடுத்தும் பார்க்க ஆரம்பிக்கும். இவற்றையெல்லாம் நாம் உற்றுக் கவனிக்காம

விருந்து, பிறகு, குழந்தை பேச ஆரம்பித்தகாலத்தில், 'இது என்ன?', 'இதற்கு என்ன பெயர்?', 'இதைத் தின்னலாமா?' என்ற இவைபோன்ற பல கேள்விகளைக் கேட்கும்போதுதான் நாவையும் கையையும் உதவியாகக்கொண்டு நூதனங்களை அறியும் குணம் அதனிடம் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். குழந்தைகளோடு பழகுபவர்கள் இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்காமல் தப்பிச் செல்ல முடியாது. ஒன்றுக்குப் பதிற்சொல்லியவுடன், உடனே இன்னொரு கேள்வியைக் கேட்கும். பன்னிப்பன்னி, பல கேள்விகளைக் கேட்கும்.

ஆகையால், இதுவே சிறு குழந்தைகள் கல்வி பயிலும் வகுப்பை நடத்துவதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம். குழந்தைகள் கேட்கும் கேள்விகளை, எப்படி அவர்கள் போதனைக்குப் பிரயோஜன உபகரணமாகத் திருப்பிக்கொள்ளலாம்? நூதனங்களை அறிந்துகொள்ள விரும்பும் இயல்பே, அவர்களைக் கேள்வி கேட்கும்படி தூண்டுகின்றமையால் அத்துணை உபயோகமான இயல்புக்குணத்தை ஆதாரமாகக்கொண்டே சுலபமாக, அவர்கள் அறிவை எப்படி விருத்திசெய்யலாம்? இவை போன்ற விஷயங்களைச் சிசுபோதம் செய்பவர்கள் ஆலோசிக்கவேண்டும்.

இவையன்றி குழந்தைகளிடம் இன்னொரு சுபாவத்தையும் தெளிவாகக் காணலாம். பார்த்ததைப் போல நடிக்கவேண்டும் என்ற ஆசையும் அப்படி நடிக்கப் போதிய சக்தியும் குழந்தைகளிடம் இயல்பாக அமைந்திருக்கின்றன. முதலில், நூதனங்களை அறிய விரும்பும் குணமே வழிகாட்டிபோலத்

தோற்றுகிறது. பார்ப்பதைச்செய்யும்சக்தி அதைப் பின்பற்றிச் செல்லுகிறது. இவ்விரண்டு குணங்களின் சேர்க்கையே குழந்தையின் அறிவுக்கு மூல காரணமாகும். நூதனங்களைப் பார்த்தவுடனே, பார்த்ததைப்போலத் தானும் செய்யவேண்டும் என்ற ஆசை உதிக்கின்றது. இவ்விதமாகச் சில முறை செய்யச்செய்ய, பார்த்த விஷயங்கள் நன்ருக மனத்திற் பதிகின்றன. நூதனங்களைப் பார்க்கும் குணமும், பார்த்ததைச் செய்யும் சக்தியும் ஒன்று கூடியே, குழந்தையின் அறிவுக்குப் பெரும்பாலும் ஆதாரமாகின்றன.

குழந்தையின் அதி இளம்பிராயத்திலேயே பார்த்ததைச் செய்யும் இயல்புக்குணம், மனத்தால் தூண்டப்பட்டு விளங்குகிறதென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. உதாரணமாக, ஐந்து, ஆறு மாதமான குழந்தையிடம் நாம் பேசுவோமானுல், அதுவும் ஏதோ சத்தம் செய்யும். ஊ.....ம், ஆ......அம், என்று குழந்தை செய்யும் சத்தம், நாம் பேசும் பேச்சைக் கேட்டு, அதைப்போலவே, தானும் பேச வேண்டுமென்று நினைத்துச் செய்வதாகச் சொல்ல முடியாது. அது அப்போது ஒன்றும் தெரிந்து செய்வதில்லை. ஆறு, ஏழு, மாதத்தில், குழந்தையானது, நாம் ஒரு பொம்மையைப் பார்க்கிருேம் என்பதைக் கவனித்தால், தானும் அந்தப் பக்கமாகத் தலையைத் திருப்பிப் பார்க்கலாம். ஆனுல், நாம் செய்வதைத் தானும் செய்யவேண்டுமென்று தெரிந்து செய்வதாகச் சொல்லமுடியாது. அப்படிப் பார்ப்பதில் மனத்தின் முயற்சி யில்லை. அது தேகவசத்ததான காரியமே.

ஆனால் முதலில் இப்படி அரை பிரக்ஞையோடும் தேகவசத்தாலும் செய்யுங் காரியங்கள், விரைவாக மனத்தின் காரியங்களாக மாறுகின்றன. அதாவது, ஒரு வயதுக்குள்ளாகவே, குழந்தை ஒவ்வொன்றையும் உற்றுப்பார்க்கும். பிறர் செய்வதைப்போலத் தானும் செய்யவிரும்புவதைக் காட்டும். அப்போது அது ஒவ்வொன்றையும் ஒரு நோக்கத்தோடு செய்வதைக் கவனிக்கலாம். வயதாக ஆக பெரியவர்கள் என்ன என்ன செய்கிறார்கள் என்று பார்த்து, அப்படியே, ஒவ்வொன்றையும் தானும் செய்யத் தொடங்கும். அதன் விளையாட்டும், விருப்பமும் இவ்வாறு பெரியவர்களைப்போல நடிப்பதிலேயே பெரும்பாலும் செல்லும்.

பெரியவர்கள் வீதியில் ஏதாவது பண்டம் வாங்குவதைக் கவனித்த குழந்தை பிறகு தானும் ஏதோ விலைக்கு வாங்குவதுபோல விளையாட்டில் நடிக்க ஆரம்பிக்கும். பெரியவர்கள் பேசும் பேச்சுகளில் ஏதாவதொன்று தெரிந்தால் அதை அடிக்கடி சொல்லும். படிப்படியாக, குடும்ப நடவடிக்கைகளைக் கவனித்து, அவற்றை விளையாட்டில் நடிக்கும். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதாகச் சொல்லி, ஒரு சிறு செப்பில் கயிற்றைக் கட்டி, முற்றத்தையே கிணறாகப் பாவித்து, தண்ணீர் முகந்துகொள்வதாக விளையாடும். இவைபோன்ற பற்பல செய்கைகளை, தன்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் செய்யும் காரியங்களைக் கவனித்துத் தானும் அவர்களைப்போலவே செய்யத் தொடங்கும்.

எல்லாக் குழந்தைகளிடத்தும் இந்தக் குணங்களை மிகவும் விளக்கமாகக் காணலாம். மேற்கூறிய

குணங்களைப்போல அவ்வளவு விளக்கமாகக் காண்பது அரிதாயினும், ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு வேறு சில இயல்புத்தன்மைகளும் குழந்தைகளிடம் காண்முடியும். அவையாவன:

(1) வஸ்துக்களைச் சேர்த்துவைத்துக்கொள்ளும் குணம்.

(2) பிறகுழந்தைகளோடு ஒப்புரவு பாராட்டுகை.

குழந்தைக்குக் கொடுத்த வஸ்துவில் அது சொந்தம் பாராட்டும். 'இது என் பொம்மை,' 'என் ஊதல்,' 'என் குடம்,' 'என் வண்டி,' என்று தன் விளையாட்டுச் சாமான்களை எடுத்துக்கொள்ளும். தான் எந்தப் பாத்திரத்திலிருந்து பால் குடிக்கின்றதோ அதைத் தன்னுடைமை என்று பாராட்டும். அநேகம் தட்டுமுட்டுச் சாமான்களை ஒன்றுகத் திரட்டிவைத்துக்கொண்டு விளையாடும். சமுத்திரக்கரையிலுள்ள கிளிஞ்சல்கள், வீதியிலிருந்து பொறுக்கி யெடுத்துக்கொண்ட பருக்கைக்கற்கள், உடைந்துபோன பலபங்கள் முதலியவற்றைச் சேமித்துவைத்துக்கொண்டு விளையாடும். ஆனல், தானகவே சேர்த்துவைத்துக்கொண்டாலும், விளையாடும்போது மற்றக் குழந்தைகளையுங் கூட்டிக் கொண்டு அவர்களுக்கும் தன்னிடமுள்ள சாமான்களைப் பகிர்ந்துகொடுத்து விளையாடும்.

இவ்வாருகக் குழந்தைகளிடம் வெளிப்படையாகக் காணக்கூடிய சுருசுருப்பு பல திறப்படும். ஆயினும் இங்கே அவற்றுள் நிரம்ப முக்கியமானவையும் எவரும் எளிதில் உற்றுநோக்கி அறியக்கூடியவையாகவும் உள்ள ஒரு நான்கினைமட்டும் மேலே விவ

ரித்தோம். அவற்றைத் திரும்பவும் இங்கே தொகுத்துக் கூறுவோம். அவையாவன:

(1) நூதனங்களைக் கவனிப்பது

(2) பார்த்ததைப்போலச் செய்ய விரும்புவது

(3) வஸ்துக்களைச் சேர்க்க ஆசைப்படுவது

(4) ஒப்புரவு செய்வது.

ஆனால், மனத்துள் நிகழும் கருத்துக்களே இவ்வகையான சுருசுருப்பாக வெளியே தோற்றப்படுகின்றன என்று முன்னே கூறியது ஞாபகத்திலிருக்கலாம். மனத்தின் கரணங்களே வெளியே விளையாட்டுகளாகப் புலப்படுகின்றன. குழந்தைகளின் மனப்போக்குகள் இத்தன்மையனவென்று ஒரு சிறிது சொல்லலாமேயன்றி, அவர்கள் மனோநிலைகளை எவரும் இன்னும் முற்றும் உணர்ந்தவரில்லை. வெளிப்படையாக நாம் காணும் சேஷ்டிதங்களைக்கொண்டும், கரசரணுதிகளாகிற அங்கங்களின் சேஷ்டிதங்களை மனத்தில் உதிக்கும் எண்ணங்களே தோற்றுவிக்கின்றன என்ற உத்தேசத்தைக்கொண்டும், சிறு பிள்ளைகளின் மனத்தின் குணஅம்சங்கள் இப்படியிருக்கின்றனவென்று ஒருவாறு ஸ்தூலமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

முக்கியமாக, சிறு குழந்தைகளிடம் மனோபாவத்தைக் காணலாம். அந்த மனோபாவமானது சிருஷ்டி பாவனையாக அவர்கள் விளையாட்டில் காணப்படும். சிறுபிள்ளைகளின் விளையாட்டில் முக்கியமாக சிருஷ்டி பாவனையே சிறந்து நிற்றலால், இளம்பிள்ளைப் பிராயத்தை, பாவனை மயமான காலம் என்று கூறுவார்கள். இளம்பிள்ளையின் மனத்தின் தன்மைகளையெல்லாம் நாம் நன்ருக

உணர்ந்தறிய முடியாதெனினும் அவர்கள் பாவனை மயமாக இருப்பதைத் தெளிவாகக் காணலாம். சிறு குழந்தைகள் எதையும் மனத்தால் நிருமித்துக்கொள்ளுவதை எவரும் பார்க்கலாம். விளையாடும்போது, ஒரு குழந்தை, சுவரிடம்போய் நின்றுகொண்டு, பெட்டியொன்றைத் திறப்பது போலத் தன் கைவிரலைக் காட்டி, அதினின்றும் நகை, உடை முதலியவற்றை எடுத்து அணிந்து கொள்வதாகச் சொல்லி, அப்படியே தான் உண்மையில் அணிந்துகொண்டும் உடுத்துக்கொண்டும் இருப்பதுபோலவே பாவித்து உற்சாகமாக விளையாடும். தொட்டிலில் ஒரு சட்டத்தின்மீது உட்கார்ந்து கொண்டும், அதன் இருபுறத்திலும் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டும், கடிவாளக்கயிறு கையில் இருப்பதுபோலவும், ஜாட்டியொன்றும் இருப்பது போல்வும் பாவித்து, குதிரைச்சவாரி செய்யும். அல்லது அதேநிலையில் தன் கால்களை மேலுங்கீழும் தூக்கியும் தாழ்த்தியும் 'ஸைகில்' என்ற இரட்டைச் சக்கிரவண்டியில் அதிக வேகமாகச் செல்வது போலவே பாவனை செய்து விளையாடும். இப்படி, பாவனையை யொட்டிய மனப்போக்கு, இளம்பிராயத்தில் எல்லாக் குழந்தைகளிடத்தும் இருப்பதினால், அவர்கள் எதையும் பாவித்துக்கொண்டு சந்தோஷமாக விளையாடுவார்கள்.

குழந்தைகள் எதையும் நன்றாக உற்றுநோக்கும் இயல்புள்ளவர்கள். இவ்வியல்பும் உற்றுப்பார்த்து ஒன்றைச்செய்து விளையாடுவதோடு நிற்காது. குழந்தைகள் கண்கள் எப்பொழுதும் நூதனங்களைக் காண்பதிலேயே செல்லும். கண்ணால் பார்த்த

விஷயங்கள் அவர்கள் மனத்தில் படம்போல நிற்கும். இளம்பிராயத்தில் கண்கள் நாற்புறங்களிலுஞ் சென்று விஷயங்களை மனத்துள் வாங்கிக்கொள்ளு வதுபோல, பிறகு உழைப்பதில்லை. வயது ஆக ஆக, நமது உள்ளெண்ணங்களே நம் மனத்தைக் கவர்ந்து கொள்ளுகின்றன. ஏதாவதொரு எண்ணத்தை ஏற்றிக்கொண்டு அதனோடு நமது மனமும் உழன்று நிற்கும். நமது எண்ணத்தையே நினைத்துக்கொண்டு மனம் சுழன்றிருக்கையில், கண்கள் வெளியேயுள்ள வஸ்துக்களை நன்றாகப் பார்ப்பதில்லை. இந்த வழக்கத்தை, நமது மனவலியால் தகைந்தால்தான் புறத்திலுள்ள வஸ்துக்களைக் கவனிக்கமுடியும். இல்லாவிட்டால் பொருள்களை உற்றுநோக்கியறியும் இயல்பு, வரவரக் குறைந்துபோகும். குழந்தைகளுக்கோ அப்படியில்லை. அவர்கள் கண்கள் புறத்தேயுள்ள வஸ்துக்களின்மீது செல்லும்போது அவர்கள் மனமும் கண்களையே பின்பற்றிச் செல்லுகிறது. அதனால் அவர்கள் கூர்மையாக உற்றுப்பார்த்து நுண்ணிய விஷயங்களையும் கவனித்து, தங்கள் அளவுக்குத் தக்கபடி எவ்வளவு தெரிந்துகொள்ளக் கூடுமோ அவ்வளவையும் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

குழந்தைகள் பெரியவர்களைப்போல மனத்துள் எண்ணங்களை வைத்துக்கொண்டு அவற்றையே சிந்தனை செய்துகொண்டிருக்கமாட்டார்கள். ஆதலால், அவர்களுடைய முழுக் கவனமும் புறத்தேயுள்ள பொருள்களின்மீது செல்லுகின்றது. நிமிஷத்துக்கு நிமிஷம் அவர்கள் கவனமும் பல பொருள்களின்மீது பாய்ந்து செல்லும். ஒரு நிமிஷம் உற்று நோக்கியதையே மறுநிமிஷமும் கவனித்துக்கொண்

டிருக்கமாட்டார்கள். அப்படி அவர்கள் கவனம் கணப்பொழுதே ஒன்றின்மீது நிற்குமாயினும், அவர்கள் பார்த்ததைப் பார்த்தவண்ணமே தெளிந்து கொள்ளுவார்கள். உரத்த சத்தம், மிக அழகிய வர்ணம், வேகமான செய்கைபோன்ற நிரம்ப அதிசயிக்கத்தக்கவைமீது அவர்கள் கவனம் பாய்ந்து செல்லும். அந்தக் கவனம் அப்படிப்பட்ட விஷயங்களின் சுவாதீனத்திலே இருக்கும். ஆயினும், பார்த்தவரையில் கண்டதே காட்சியாக நம்புவார்கள். அவர்களுக்குச் சொல்வனவெல்லாம், அவர்கள் மனத்தின் முன்னே பிரகாசமான பிம்பங்களைப் போல எழுகின்றன. அவர்களுக்கு எடுத்துச் சொல்வதெல்லாம், பதுமைகள்போலத் தோற்றுவதால், அவர்கள் உடனே அவற்றைப்போலச் செய்ய எண்ணுகிறார்கள். உதாரணமாக, ஒரு மேளக்காரன் மேளத்தை யடிக்கும்போது பார்த்த குழந்தை, பிறகு அவனைப்போலவே நடித்துக்காட்டும். முழுமனத்துடன் கவனித்த விஷயம் பசுமரத்தாணிபோல அதன் மனத்துட் பதிந்து, நினைத்த மாத்திரத்தில் உருவெளியில் தோற்றுகிறது. அதனால் அவனைப்போலவே நடிக்கின்றது.

குழந்தைகளோடு நிரம்பப் பழகுவோர், அவர்கள் பாவனாசக்தியின் தீவிரத்தையும் நன்றாகக் கவனித்தறியக்கூடும். குழந்தைகள் தங்கள் கையில் இல்லாதவற்றை இருப்பதாகப் பாவித்துக்கொண்டு விளையாடுவார்கள். இச்சித்தமாத்திரத்தில், வேண்டியவற்றை மனோபாவத்தில் சிருஷ்டித்துக்கொள்வதை, அவர்களோடு பழகுபவர்கள் நன்றாகக் காணலாம். மாப்பாவைக்குக் கலியாணம் செய்வ

தாக எண்ணிக்கொண்ட குழந்தை, முகூர்த்தத்துக்கு அழைக்கும். சுவரண்டை போய் நின்றுகொண்டு, அநேகர் வீடுகளுக்குப்போய் அவர்களை அழைப்பதுபோலவே பேசும். அவர்கள் பேசுவதுபோலவும், தான் பதிற்சொல்வதுபோலவும் பாவித்துக்கொள்ளும். அது மனத்தால் நினைப்பதெல்லாம் அதற்கு உண்மையாகவே யிருக்கும். ஒரு சமயம் ஓர் குழந்தை விளையாடிக்கொண்டிருக்கையில், சிறிய கடுதாசித்துண்டு ஒன்றையெடுத்து, அதைப் பிள்ளைத்தொட்டிலாகப் பாவித்து, அதில் ஒரு குழந்தை படுத்துறங்குவதாகவும் எண்ணிக்கொண்டு விளையாடிற்று. அப்போது யாராவது அந்தக் கடுதாசியின் பக்கத்தில் போனாலும், 'குழந்தை தூங்குகிறது, இங்கே சத்தம் போடக்கூடாது' என்று சொல்லிற்று. இப்படி, தேவையானவற்றைப் பாவித்துக்கொள்வதோடு, பாவித்துக்கொண்டதை உண்மையானதென்றே நம்பும் பாவனாசக்தி, குழந்தைகளிடம் இருக்கிறது. பாவனாசக்தியுள்ள குழந்தைக்கு, இது நல்ல காரியம், இது 'அசட்டுத்தனம்' என்று சொல்லி, அதனுடைய நடையை நல்லவழியிற் கொண்டு செலுத்த வேண்டும். குழந்தையின் தேகம் புஷ்பத்தைப் போல எவ்வளவு மென்மையாக இருக்கிறதோ, அப்படியே அதன் மனமும் ஓர் மெல்லிய பூங்கொம்பைப்போல இளக்கமுள்ளதாகவே இருக்கும். அப்போதே 'வருத்தவளை வேய் அரசர் மாமுடியின் மேலாம்' என்றபடி, இளக்கமான மனத்தை நல்ல வழியிற் செலுத்தினால், பிறகு அது தீயவற்றிற் புகாமல், நல்மார்க்கத்திலேயே ஊன்றிநிற்கும்.

குழந்தைகளை நன்னடையிற் பழக்கவேண்டிய முறை யாது? பெரியோர்கள் நடைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல் அன்று. இதற்கு ஓர் திருஷ்டாந்தம் கூறுவோம். 'அறஞ்செய விரும்பு' என்ற நீதியை உபாத்தியாயர் ஒரு குழந்தைக்குப் போதித்தார். குழந்தைக்கு அந்த வாக்கியத்தின் அர்த்தத்தைச் சொன்னார். பிறகு, அவர் 'உன்னிடம் குடை யிருக்கிறதல்லவா?' என்று, ஓர் உதாரணத்தை எடுத்துச்சொல்ல நினைத்து, மற்றொரு பையனைக்காட்டி, 'நீ அவனுக்கு அதைக் கொடுத்து விடவேண்டும். அதுவே அறம்' என்று சொல்லி முடிப்பதன் முன்னே, அந்தக் குழந்தை, 'என் குடையை நான் கொடுக்கமாட்டேன்' என்று கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தது. இந்த உதாரணத்தி லிருந்து நாம் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். சிறு பிள்ளைகளின் மனம் பெரியவர்கள் மனத்தைப்போலவே இராது என்று முன்னே சொன்னோமல்லவா? அவர்களுடைய தேகத்தின் தன்மையும், மனத்தின் தன்மையும், பெரியவர்களைப்போன்றிராதவாறே, அவர்கள் நன்னடை, பக்தி முதலிய குணங்களிலும் வித்தியாசங்கள் இருப்பதியல்பே.

நல்லொழுக்கத்திலும் குழந்தை வளர்ச்சியடைய வேண்டும். ஆதலின், நன்னடைப் பழக்கம் குழந்தையிடம் எவ்வாறு உண்டாகி ஊன்றுகிறது என்பதைக் கவனிப்போம். முதலில், எதைச் செய்தால் தாயார் கோபிப்பாள் என்பதைக் குழந்தை தானாகவே தெரிந்துகொள்ளுகிறது. ஒன்றைச் செய்தால், தாயார் சந்தோஷமாகப் பேசுவதையும்

வேறொன்றைச் செய்ய எத்தனிக்கும்போது, தாயார் வேண்டாமென்று தடுப்பதையும் கவனித்து, ‘எது செய்யத்தக்கது, எது செய்யத்தகாதது’ என்று குழந்தை சிறிது அறிந்துகொள்ளுகிறது. ஆனால் அதற்குப் பகுத்தறியும் சக்தி அந்த இளம்பிராயத்தில் ஏற்படாது. தாயார் என்ன சொல்வாளோ என்ற பயத்தால், ஒரு வரம்பு அல்லது ‘ஹத்து’ மீறி செய்யக்கூடாதென்றமட்டில் அது ஸ்தூலமாக அறிந்திருக்கிறது. ஆனால், ‘இவை விலக்கப்பட்டன, இவை விதிக்கப்பட்டன’ என்று பொதுவகையாக, தீயவற்றையும் நல்லவற்றையும் ஆராயும் சக்தி நாளடைவிலே விருத்தியாகவேண்டும். இது செய்தால் கோபிப்பார்கள், ஆதலால் அதைச் செய்யக்கூடாதென்று வீட்டில் வளர்த்துவரும் செல்லப் பிராணிகூடக் கொஞ்ச நாளைக்குள் தெரிந்துகொள்ளக்கூடும். ‘வா’ என்றால் வரும். ‘போ’ என்றால் போகும். ‘இரு’ என்றால் இருக்கும். ஆனால் மற்றப் பிராணிகளெல்லாம் இந்த நிலையிலேயே எப்போதும் நின்றுவிடும். இளம்பிள்ளையோவென்றால் அவ்வாறின்றி, வெகு விரைவில், படிப்படியாக ஒழுக்கவுணர்ச்சியில் விருத்தியடைகிறது. தாயார் தகப்பனார் பார்த்திருக்கும்போது, அவர்கள் எது செய்யக்கூடாது என்கிறார்களோ, அதைச் செய்யாமல் ஒழிவதில், அவர்கள் அதிகாரத்துக்கு உட்பட்டு, முதன்முதல், தீய செய்கைகளைச் செய்யாமல் இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக, சில காரியங்கள் நல்லவை, அவற்றைச் செய்வது அழகு என்று தெரிந்து கொள்ளும். அப்போதே அவற்றைச் செய்வதில் விருப்பமும் தோற்றுகிறது. வேறு சில செய்கைகள்

தீயவை, அவற்றைச் செய்வது தகாது என்பது தெரிகிறபோது அவற்றில் வெறுப்பு தோற்று கிறது.

இவ்விதமாகவே, முதலில் தான் ஒன்றும் பதிற் சொல்லாமலும், கேள்வி கேட்காமலும், பிறர் ஏவு கிறபடியே, சில காரியங்களைச் செய்த குழந்தை, பிறகு நாளடைவில் நல்லவை இவை, தீயவை இவை என்பதை யுணர்வதற்கு ஓர் அரிய சக்தியைப் பெறு கின்றது. கடவுள் ஒருவர் இருக்கிறார், நாம் செய் யும் நல்லவற்றையும் அல்லவற்றையும், அவர் பார்க் கிறார் என்பதை யுணர்ந்து, பிறகு, இதைச் செய், இதைச் செய்யாதே என்று தனக்குள்ளேயேயிருந்து அறிவிக்கும் மனச்சாட்சி மூலமாகவே கடவுள், தம்மை நமக்கு அறிவிக்கிறார் என்பதும் தெரியும். அப்போதுதான், நல்லொழுக்கம் என்பது, நடுவு நிலைமையோடு மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடத்தலாம் என்பது புலப்படும்.

இளம்பிள்ளைப்பருவத்தில் பெற்றோர் சொற்படி செய்து, அவர்கள் ஆணைகடவாது நடக்கும் குழந் தை, பெரிதாக வளரவளர, கொஞ்சம் கொஞ்ச மாக, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தியைப் பெற்று, வயதில், கடவுள் ஆணைப்பிரகாரம் நல் லொழுக்க நெறியில் வாழ்நாளைக் கடத்தவேண்டும் என்ற உறுதியைக் கடைப்பிடிக்கும். இந்த உண் மையைப் பெற்றோரும் உபாத்தியாயரும் மனத்திற் கொள்ளவேண்டியது.

ஆனால், மேலே சொன்ன வரிசைக் கிரமத்திலே தான் நல்லொழுக்கம் விருத்தியாகும் என்று சொல்லமுடியாது. ஏனெனில், ஒழுக்கம் என்பது

நாம் கண்ணால் காணமுடியாத மனத்தின் நிலையைப் பற்றி யிருப்பதால், அது விருத்தியாகும் வகையும், குழந்தைக்குக் குழந்தை வித்தியாசப்படலாம். ஆனபோதிலும், தேகவிருத்தி, மனவிருத்தி சம்பந்தமாக வெளியே தோற்றும் குணங்களையும் அங்கசேஷ்டிதங்களையும் உதவியாகக்கொண்டு நல்லொழுக்கத்தை நன்கு பயிற்றுவிக்கலாம்.

இதுவரையில், சொல்லிவந்த இளம்பிராயத்தின் சிறப்பியல்புகளுள் இப்போது கடைசியாக எடுத்துச்சொன்ன ஓயாத சலனம் என்ற இயல்பே மிக முக்கியமானது. ஏனெனில், இந்த இயல்பு மற்ற எல்லா இயல்புகளையும் தன் வசப்படுத்திக்கொண்டு நிற்கிறது. குழந்தைகள் எப்போதும் ஏதாவதொன்றைச் செய்வதிலேயே இஷ்டமுள்ளவர்களாக இருந்தாலும், கணப்பொழுதேனும் ஒன்றிலேயே தம் மனத்தைச் செலுத்தியிருக்கமாட்டார்கள். நிமிஷத்துக்கு நிமிஷம் அவர்கள் இஷ்டமும் மாறிக்கொண்டிருக்கும். உதாரணமாக, ஓர் மரப்பாவையை வைத்து விளையாடிக்கொண்டிருக்கும்போது, குழந்தையின் ஞாபகம் வேறொன்றில் சென்றால் உடனே அந்தப் பாவையைப் போட்டுவிட்டு மற்றொன்றில் கவனத்தைச் செலுத்தும். ஆனால், எப்போதும் சுருசுருப்பாகவே இருக்கும். தேகம் சுருசுருப்பாக இருக்கும்; மனமும் ஓயாமல் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றும். ஒன்றைச் செய்ய ஆரம்பித்தாலும், சடக்கென்று செய்யும்; அதைவிட்டாலும், சடக்கென்று விட்டுவிடும்.

இப்படி ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிக்கொண்டு, ஏதாவதொன்றிலேயே கணப்பொழுதும்

ஊன்றி நிற்காவிட்டாலும், ஓயாமல் சுருசுருப்பாகவே இருத்தலாகிய குணாதிசயம் உள்ள குழந்தைகளின் தேகத்தைப் போஷித்து, வளர்த்து, அவர்கள் புத்தியை விசாலப்படுத்தி, ஒழுக்கத்தைச் சீர்படுத்தவேண்டியவர்கள், இளம்பிள்ளைப் பருவத்தின் இயல்புகளை நன்குணர்ந்து, அந்த இயல்புகளையே முறையாக உபயோகித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்.

குழந்தைகள் எந்நேரமும் இருந்தவிடத்திலேயே இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது எவ்வளவு தவறோ, அப்படியே, அவர்கள் மனமும் கரணமும் ஒரேவழியில் நிற்கும் என்று நினைப்பதும் தவறாகும். வயது முதிர்ந்த மக்களுக்கே ஒரே விஷயத்தை நீடித்தநேரம் கேட்பதில் வெறுப்பு தட்டுகிறதைக் காண்கிறோமே? அவர்கள் மனநிலையே அப்படியிருக்கும்போது, இளம்பிள்ளைகள் தம் மனத்தை ஒன்றிலேயே நெடுநேரம் செலுத்தக் கூடும் என்று எதிர்பார்த்தல் நியாயமாகுமா?

அத்தியாயம் 4

## குணங்களை உபயோகிக்கும் முறைகள்

முன் அத்தியாயத்தில், பிள்ளைக்குணங்களை நன்கு அறிந்துகொண்டு அவற்றின் உதவியினாலேயே குழந்தைகளுக்கு நற்பழக்கங்களை உண்டுபண்ணி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னோம். ஆகையால், இதுவரையில் இளம்பிள்ளைகள் குணவிசேஷங்களைப்பற்றி நாம் அறிந்துள்ளவற்றை இங்கே சுருக்கமாகத் தொகுத்துக் கூறி, பிறகு அவற்றை உபயோகிக்கும் முறைகளைக் கவனிப்பது தக்கது.

இளம் குழந்தைகள் சுருசுருப்புள்ளவர்கள்; தூங்குகிற நேரம் தவிர் விழித்திருக்கும்போதெல்லாம் அவர்கள் எப்போதும் ஏதாவதொன்றைச் செய்துகொண்டே இருப்பார்கள்; எவை அகப்படுமோ அவற்றை வைத்துக்கொண்டு ஏதாவதொன்றைக் கட்டுவதிலும், வினோதங்களை எண்ணுவதிலும், தங்களைச்சுற்றிலும் உள்ளவற்றைப் பார்ப்பதிலும் அவர்கள் மனம் பரபரப்புடன் செல்லும்.

இப்படி எந்நேரமும் சுருசுருப்பாகவே இருத்தற்கு, முக்கியமாக, வினோதங்களைக் கவனிப்பதில் அவர்களுக்குள்ள ஆசையே பெரிதும் உதவுகிறது. பார்த்தவற்றைச் செய்யவேண்டும் என்ற விருப்பமும், அப்படிச் செய்வதற்குப் போதிய சக்தியும், இயல்பாகவே அவர்களுக்கு அமைந்திருக்கின்றன. ஆனால், இவ்வாறான குணங்களின் இடையே,

'சலனம்' இருக்கிறது. இது ஒன்றைவிட்டு வேறொன்றைப் பற்றும் குணமாகி மற்ற எல்லாவற்றையும் கவர்ந்து நிற்கிறது. 'விடாமுயற்சி' என்ற குணம் இனிமேல்தான் உண்டாகவேண்டும்.

இதனால், மேற்கூறிய தன்மைகளைக்கொண்ட இளம்பிள்ளைகளை, ஒரு பாடம் முக்கால் மணி நேரம் தொடர்ச்சியாக நடக்கப்பெற்ற பெரிய வகுப்புப் பிள்ளைகளோடு இருக்கச்செய்து, அங்கே நடக்கும் பாடங்களை, சத்தம் செய்யாமல் கேட்டுக் கொண்டிருக்கச் செய்யலாம் என்றெண்ணுவது பிசகு என்பது விளங்கலாம். சும்மா இருக்கவேண்டும் என்றும், சத்தம் போடாமல் மேல் வகுப்பில் நடப்பதைக் கேட்டுக்கொண்டு இருந்தவிடத்திலேயே உட்கார்ந்திருக்கவேண்டும் என்றும், நிர்ப்பந்தித்தால் குழந்தைகள் பயந்து சொன்னபடியே உட்கார்ந்திருக்கலாம். ஆனால், அவர்களுடைய இயற்கைக் குணத்துக்கு மாறாக; கட்டாயத்தினால் சும்மா இருக்கும் குழந்தைகள் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு மனம் வெதும்பிக் கஷ்டப்படுவார்கள். பள்ளிக்கூடத்துக்குப் போகப் பயப்படுவார்கள்; கட்டாயப்படுத்தி அனுப்பினால் வருந்துவார்கள்.

ஆகையால், இளம்பிள்ளைகளுக்குப் பாடநேரம் பதினைந்து அல்லது இருபது நிமிஷங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும். சில பள்ளிக்கூடங்களில், எல்லா வகுப்புகளும் ஒரே அறையில் இருக்கும். உபாத்தியாயரும் ஒருவரேயிருந்து இரண்டு, மூன்று வகுப்புகளுக்குப் பாடம் சொல்வார். இளம்பிள்ளைகளின் பாடநேரம் இருபது நிமிஷமாகவும், மற்றப் பிள்ளைகளுக்குப் பாடநேரம் நாற்பத்

ைந்து நிமிஷமாகவும் இருக்கும்போது, இளம் பிள்ளைகளுக்கும் நாற்பத்தைந்து நிமிஷப்பாட மாகவே நியமித்தாலன்றி, உபாத்தியாயர் எல்லா வகுப்புகளையும் தாம் ஒருவராக இருந்து சமாளிக்க முடியாது. ஒரே உபாத்தியாயர் சிறு குழந்தை களுக்கு இருபது நிமிஷநேரம் ஒரு பாடமும், பெரிய வகுப்புகளில் நாற்பத்தைந்து நிமிஷம் ஒரு பாடமுமாக நடத்தி சமகாலத்தில் எல்லா வகுப்பு களையும் கவனிக்க முடியுமா என்பது யோசிக்கத் தக்கது. உபாத்தியாயர் மிகுந்த சாமர்த்தியமுள்ள வராக இருந்து, வகுப்புகளில் பிள்ளைகளும் அதிக மாக இல்லாத பக்ஷத்தில், சில உபாயங்களால், ஒரே உபாத்தியாயர் எல்லா வகுப்புகளையும் கவனிக்க லாம். ஆனால் இது கஷ்டசாத்தியம். கூடியவரை யில் சிறு குழந்தைகளைக் கவனிக்கத் தனியாக ஒரு உபாத்தியாயர் இருத்தலே நலம்.

ஆகையால், சிறு குழந்தைகள் படிக்கும் வகுப் புக்குத் தனியாக ஓர் இடம் இருப்பதாகவும், அங்கே அவர்களுக்குப் பாடம் சொல்வதற்குத் தனியாக உபாத்தியாயர் ஒருவர் இருப்பதாகவும் வைத்துக்கொண்டு, அந்த வகுப்பு அறையை இப்படி உபயோகிக்கலாம் என்பதை இனி யோசிப் போம்.

குழந்தைகள் படிக்கும் வகுப்புக்கு வேண்டிய சாமான் வகையறு எவை? இவ்விஷயமாய் அவர் களின் சிற்றுருவத்தையே இங்கே கவனிக்கவேண் டும். அவர்கள் உட்கார்ந்திருப்பதற்குச் சௌகரிய மான ஆசனம் வேண்டும். சிறு குழந்தைகளை உயர மான ஆசனங்களில் உட்காரும்படி நிர்ப்பந்திக்கக்

கூடாது. ஒரு வாலிபனை அவன் கால்கள் பூமியிற் படாமல் தொங்கிக்கொண்டிருக்கும்படி உயரமான விசிபலகையில் உட்கார்ந்திருக்கச் செய்தால், அவன் அப்படியே நெடுநேரம் உட்கார்ந்திருக்கச் சம்மதிப் பானு! எவ்வளவு சீக்கிரம் அதிலிருந்தும் விடுதலை பெற விரும்புவான்? உயரமான பெஞ்சுகளைக் கீழ் வகுப்புகளில் போட்டுவைத்து, அவற்றின்மீது குழந்தைகளை ஏறி உட்காரச் செய்வோமானுல், அவர்கள் பாதம் பூமியிற் படியாமல் தொங்கிக் கொண்டிருக்கும். அதனுல் காலில் இரத்தம் கட் டிக்கொண்டு கடுக்கும். அதைவிட்டு எங்கும் போகக்கூடாது என்றும் கட்டாயப்படுத்தினுல், நெடுநேரம் வரையில் அவர்கள் அப்படியே உட் கார்ந்திருக்க எவ்வளவு வேதனைப்படுவார்கள்? இவற்றையெல்லாம் யோசித்து, சிறு குழந்தைகள் இருப்பதற்குத் தகுதியான பெஞ்சுவகையருக்கள் அவர்கள் சௌகரியமாக உட்காரக்கூடியவையாக இருக்கவேண்டும். தரையில் உட்கார்ந்தால், உடுத் திருக்கும் உடை அழுக்கடைவதோடு, எறும்பு முத லிய ஜந்துக்களின் தொந்தரையும் ஏற்படும். ஒவ் வொருவருக்கும், தனித்தனியே, பனையோலையால் முடையப்பட்ட பாய் இருக்கலாம். அல்லது அதிக உயரமில்லாத மணை அல்லது பலகை இருக்கலாம். செங்கல் அல்லது களிமண்ணினுல் மேடை அல்லது சிறு திண்ணை போட்டு அதில் பிள்ளைகளை வரிசை யாக உட்காரச்செய்வதாயிருந்தால், அந்த மேடை ஒரு அடி உயரத்துக்கு உட்பட்டிருக்கவேண்டும். உட்கார்ந்திருக்கையில் குழந்தைகளின் பாதங்களி ரண்டும் சமமாகப் பூமியில் படியும்படி அந்தத்

திண்ணை தாழ்ந்ததாக இருக்கவேண்டும். திண்ணையைச் சுவரையொட்டிப் போடுவது நலம். திண்ணை அதிக அகலமாக இருக்கக்கூடாது. அகலமாயிருந்தால், திண்ணையின் ஓரத்திலேயே பிள்ளைகள் உட்காருவார்கள். அப்போது அவர்கள் முதுகு சுவர் மீது படாது. அதனால் நிமிர்ந்து உட்காரமுடியாமல் உடம்பையும் கழுத்தையும் வளைத்துக்கொள்வார்கள். இவையன்றி, ஒரு அடி உயரத்துக்கு மேற்படாத பெஞ்சுகளை உபயோகிக்கலாம். கூடுமானால், சிறிய நாற்காலிகளை வைத்துக்கொள்வதே சிலாக்கியம். தேக்குமரத்தினால் செய்த நாற்காலிகள் அநேக வருஷங்கள் வரையில் கெடாமல் இருக்கும். முக்கால் அடி உயரத்தில் சில நாற்காலிகளும் ஒரு அடி உயரத்தில் சில நாற்காலிகளும் இருந்தால் குள்ளமான குழந்தைகளும் சற்று உயரமான குழந்தைகளும் தங்கள் சௌகரியம்போல உட்கார்ந்துகொள்ளலாம். நாற்காலிகளின் இரண்டு பக்கங்களிலும் கைகள் வேண்டியதில்லை. பிரம்புச் சட்டமில்லாமல் பலகை ஆசனத்தோடு, ஒரு அடிக்கு உட்பட்ட உயரமுள்ள நாற்காலிகளைப் போலச் சௌகரியமான ஆசனங்கள் வேறெவையும் இல்லை. அப்படிப்பட்ட நாற்காலிகளில் குழந்தைகள் கஷ்டமின்றி நிமிர்ந்து உட்கார்ந்திருக்கமுடியும். நாற்காலியின் பின்சட்டம் முதுகுக்கு ஆதாரமாக இருக்கும். பாதங்கள் நன்றாகப் பூமியிற் படிந்திருக்கும். அப்போது குழந்தைகள் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பார்கள். ஒவ்வொரு குழந்தையும் தனித்தனி நாற்காலியில் உட்கார்ந்திருப்பதினால், நெருக்கமின்றி, ஒருவர்மேல் ஒருவர் சாயாமலும்

உராயாமலும் உட்காரலாம். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நாற்காலி யிருந்தால், அது தன் நாற்காலியைச் சுத்தமாக வைத்துக்கொள்ள விரும்பும். அதனால் நல்ல பழக்கங்களும் உண்டாகும். பிரம்பு நாற்காலியில் மூட்டுப்பூச்சி யடையும். குழந்தைகள் உட்காருவதால், அடிக்கடிப் புதிதாகப் பிரம்பு பின்னவேண்டியிருக்கும்.

குழந்தைகள் இருக்கும் அறை நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளதாயிருக்கவேண்டும். சிறு குழந்தைகள் படிப்பதற்காகத் தனியாகச் சிறு கொட்டகை ஒன்றைக் கட்டி, உள்ளே போவதற்கு வழிவிட்டு, மற்றப் பக்கங்களிலும் தென்னங் கீற்றுக்களைக் கட்டிவிட்டால், காற்றும் வெளிச்சமும் குறைந்துபோகும். ஆதலால், அப்படிக் கொட்டகை கட்டினால், அதில் ஜன்னல்களை வைத்து, கீற்றுகளை மடக்கிக் கட்டவேண்டும்.

குழந்தைகள் வகுப்புக்கு ஏதாவதொரு வாத்தியப்பெட்டி இருக்கவேண்டியது அவசியம். அவர்கள் பாடும்போதும், வகுப்புக்குள் ஒழுங்காக நடந்துவந்து உட்காரும்போதும், கவாத்து பழகும்போதும், வாத்தியம் வாசிப்பது அவர்களுக்கு உத்ஸாஹத்தைக் கொடுக்கும். காலைப் பூமியில் தட்டிக்கொண்டு 'மார்ச்' கவாத்து செய்யும்போது, தாளம், சிறு பறை முதலியன எவ்வளவோ உபயோகமாக இருக்கும். இது கிரமம், இது கிரமமன்று என்ற ஞாபகம், வாத்தியம் மூலமாக அவர்கள் மனத்துட் புகும். சங்கீதக் கிரமப்படி அளவுபடுத்துகிற ஓசைகள் ஒழுங்கான மாதிரியைக் கற்பிக்கும்.

இளம்பிள்ளை வகுப்புகளில் அழகிய சித்திரப் படங்கள் இருக்கவேண்டும். குழந்தைகள் விரும்பக் கூடிய அழகும், வர்ணமும், விஷயங்களையும் கொண்ட படங்கள் நிரம்ப உபயோகமாகவிருக்கும். படங்களைப் பார்த்துப் பிள்ளைகள் தமக்குள் சம்பாஷணை செய்வார்கள்; தமக்குள் பேசப் பழகுவார்கள்: பேசவேண்டும் என்று இயல்பாகவே பிள்ளைகள் விரும்புவார்கள். அந்த விருப்பத்தை விருத்தி பண்ணத்தக்கவையாகவுள்ள சித்திரப்படங்களை உபாத்தியாயர் யோசித்துத் தேர்ந்து வகுப்பில் வைக்கவேண்டும்.

மேற்கண்டபடி அறையையும் சாமான்களையும் அமைத்துக்கொண்டபிறகு, பிள்ளைகளை வயதுக்குத் தக்கபடி இரண்டு மூன்று தகுதிகளாக வகுத்து, அந்த அந்தத் தகுதிக்கேற்றவாறு பாடம் சொல்லுதல் நலம். ஐந்து வயதுக்குட்பட்ட சிசுக்களையும், ஐந்துமுதல் ஆறு வயது வரையில் உள்ள குழந்தைகளையும், எட்டு வயதுள்ள சிறு பிள்ளைகளையும் ஒன்றுசேர்த்து ஒரே வகுப்பில் உட்காரவைத்துக் கொண்டு, பொது நோக்காகவே எல்லோருக்கும் ஒரே பாடத்தைச் சொல்லும் வழக்கம் சரியன்று. பிள்ளைகளுடைய வயதுக்கும் தகுதிக்கும் தக்கவாறு அவர்களைப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு திறத்தாரையும் தனித்தனியே கவனிக்கவேண்டும். ஆனால் வயதைமாத்திரம் உத்தேசித்துப் பிரிப்பதும் சிறந்த முறையாகாது. பிள்ளைகளின் விருத்தியம்சங்களை அடிக்கடி கவனித்து, அவர்கள் புத்திகூர்மையின் தரத்துக்கும், விருத்தியின் தகுதிக்கும் பொருத்தமாக, தனித்தனி இனங்களிற்

சேர்த்துப் பாடம் கற்பிக்கவேண்டும். சாதாரணமாக, பாலர் வகுப்பில், இரண்டு அல்லது மூன்று இனங்களில் பிள்ளைகளைப் பிரித்துக்கொள்ளலாம்.

இவ்வாறு பிரித்துக்கொண்டபிறகு, அவர்களை என்ன செய்யச்சொல்லலாம் என்பதை யோசிக்க வேண்டும். அவர்களோ, ஓயாமல் எதையேனும் செய்யும் சுருசுருப்புள்ளவர்கள்; தம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களையெல்லாம் ஆவலோடும் ஆச்சரியத்தோடும் பார்க்கும் இயல்புள்ளவர்கள்; பார்த்ததைப் பார்த்தவண்ணம் மனத்திற்கொண்டு, அதைப் போலவே தாமும் செய்ய விரும்புபவர்கள்; அப்படியெல்லாமிருந்தும், எதிலும் கணப்பொழுதுக்கு மேல் நீடிக்கமாட்டாக் கவனமுள்ளவர்கள்; நிமிஷத்துக்கு நிமிஷம் மனத்தின் திருஷ்டியானது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிச்செல்லும் சுபாவம் உடையவர்கள்: அரைக்கணமும் ஒன்றிலேயே யிராமல், ஒரு புஷ்பத்தைவிட்டு வேறோர் புஷ்பத்துக்குச் சுழன்று செல்லும் வண்டைப் போன்ற மனவேகம் உள்ளவர்கள்: அத்தகைய சுபாவம் உள்ள குழந்தைகள் நம்மிடம் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அருமையான காலத்தை வீண்போக்காமலும், அவர் இயல்புக்கு விரோதமில்லாமலும், அவரது இயற்கைக்குணங்களையே, பயன்பட, இப்படி உபயோகிக்கலாம் என்பதை இனி ஆலோசிப்போம்.

'பிள்ளைக்கல்வி' என்பது அவர்கள் மனத்தில் ஏதாவதொன்றைப் புகுத்திக் கற்பிப்பதுதான் என்று எண்ணுவது தவறு. குழந்தைகளுக்கு

ஒரு புத்தகத்தை வாசிக்கக் கற்பிப்பதும், கணக்கு போடச் சொல்லிக்கொடுப்பதுமே, ‘பிள்ளைக்கல்வி’ ஆகாது.

ஆனால், ‘பிள்ளைக் கல்வி’யில் நாம் முயல்வேண்டியவை எவை? பிள்ளைகளுடைய அறிவை விசாலப்படுத்தவேண்டும்; அவர்களை ஒழுங்கான நடையிற் பழக்கவேண்டும்; கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணத்தை அவர்கள் புத்தியில் உண்டு பண்ணவேண்டும்; இவையன்றி ஒப்புரவு, உண்மை, தீவினையச்சம் முதலிய நன்னடைகளின் விதைகளை அவர்கள் மனமாகிய களத்தில் தருணத்தில் விதைத்து நற்பயிர் செய்யவேண்டும்.

இவை பிள்ளைக்கல்வியின் நோக்கமாயின், கற்பிக்கும்போது விஷயங்களை விஸ்தாரமாக எடுத்துச் சொல்லியும், திருஷ்டாந்தம் காட்டியும், வற்புறுத்தியும், அதட்டியும், அடித்தும் ‘உண்மைகளைப் போதிப்பேன்’ என்று தொடங்குவது தவறு. முன்னே எடுத்துக்கூறிய குழந்தைகளின் இயல்புக் குணங்களையும் மனப்போக்கையும் கருவிகளாகக் கொண்டு, சில உபாயங்களால், அவர்களை நன்மார்க்கத்தில் கொண்டுவர முயலவேண்டும். குழந்தைகள் இயற்கையாகவே மிக்க சுருசுருப்புள்ளவர்கள்: ஏதாவது ஒன்றைச் செய்ய விரும்புபவர்கள்: அப்படிச் செய்யும் தொழிலைச் சந்தோஷமாக மேற்கொண்டவர்கள். ஆகையால் அவர்களுக்கு நாம் ஒரு வழிகாட்டியைப்போல மாத்திரம் இருந்து, அவர்கள் விருப்பத்தையும் சுருசுருப்பையும் உதவியாகக்கொண்டு, எதிர்காலத்தில் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை இவை என்று நம் மனத்தில்

தெளிவாக நிச்சயித்து, அவற்றிற்கு இணக்கமாக வே, அவர்கள் சுருசுருப்பையும் தகுதியான வழி களில் கொண்டு உய்க்கவேண்டும்.

இவ்விஷயமாக, உபாத்தியாயர் அனுஷ்டிக்க வேண்டிய முறை ஒன்றுண்டு: ஆரம்பத்தில் குழந் தைகளை அவர்கள் இஷ்டம்போல இருக்கவிடுவதே நல்ல உபாயம். எந்த உபாத்தியாயர் இப்படி அவர்கள் இஷ்டம்போலச் செய்யவிடுகிருரோ அவர், கூடிய சீக்கிரத்தில், அந்தப் பிள்ளைகளை என்ன செய்யச் சொல்லுகிருரோ, அதைச் செய்வ தற்கு, அவர்களே இஷ்டத்தோடும் இசைந்துவரு வதைக் காண்பார். பிள்ளைகளை நிர்ப்பந்திப்பது தகுதியன்று. 'அவர்களுக்கு எதில் இஷ்டம் இருக் கிறதோ அதைச் செய்யட்டும்' என்று, அவர்கள் சுய இச்சைப்பிரகாரம், குழந்தைகளை நிர்ப்பந்திக்காமல் விடுகிற உபாத்தியாயர் பெறுகிற பலன் மிகப் பெரிது. அப்படிப்பட்ட உபாத்தியாயர் பிறகு அந்தக் குழந்தைகளை நோக்கி, 'இப்போது இதைச் செய்யுங்கள்' என்று சொன்னவுடனே அதை அவர் கள் முழுமனத்தோடும் திருப்தியாகச்செய்ய முந்து வார்கள்.

### (i) வேலையும் விளையாட்டும்

குழந்தைகள் இயல்பாகவே விளையாடும் விளை யாட்டெல்லாம் அவர்கள் அறிவை விருத்திசெய் யத்தக்கனவாம். இளம்பிள்ளைகள் வகுப்பின் வேலை முற்றும் விளையாட்டு ரூபமாகவே இருத்தல் வேண் டும். விளையாட்டுகள் மூலமாக அவர்களை அநேகம் விஷயங்களை அறிந்துகொள்ளுமாறு செய்ய இய லும். உண்மையில், விளையாட்டுக்கும் வேலைக்கும்

அதிக வித்தியாசம் இல்லையென்றே கூறலாம். ஒரு தொழில் விளையாட்டாக மதிக்கப்படுதலும், அல்லது, வேலையாகக் கருதப்படுதலும், அந்தத் தொழிலைச் செய்பவனுடைய மனத்தைப் பொறுத்திருக்கிறது.

உதாரணமாக, ஒரு பூந்தோட்டத்தில் நாள் முழுமையும் காலங்கழிப்பதற்கெண்ணி, இரண்டு பேர் போகிறார்கள். ஒருவன் தோட்டத்துக்கு சொந்தக்காரனாகிய எஜமானன்; மற்றொருவன் தோட்டக்காரன். அன்றைப்பொழுதை, தோட்டத்தில் கழிப்பதாக எண்ணிப்போன எஜமானனுக்கு அப்படிச் செய்தது, விளையாட்டாகும். பொழுது போக்குக்காகத் தோட்டத்துக்குப் போயிருக்கிறான். அங்கே அவனும் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம், புல்பூண்டு முதலியவைகளைப் பிடுங்கலாம், இன்னும் தோட்டக்காரனோடு சேர்ந்து வேறு சில வேலைகளையும் செய்யலாம். செய்தாலும் அவனுக்கு அது விளையாட்டே. தோட்டக்காரனுக்கோ, எஜமானன் தன்னுடன் ஒத்து உழைக்கும்போதும், அது வேலையேயாகும்.

இன்னொரு உதாரணம்: வெயிற்காலத்தில் வெற்றிலைத் தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு, கிணற்றில் ஏற்றம்போட்டு, மூன்று ஏவலாளர் வேலை செய்கிறார்கள். எஜமானன் போய் நின்றுகொண்டு சில சமயம் தானும் ஏற்றம் மிதிக்கிறான். ஏவலாளர் செய்வது வேலை, எஜமானனுக்கு அது விளையாட்டு. ஆகையால், வேலைக்கும் விளையாட்டுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம், செய்யும் தொழிலில் இல்லை. அதைச் செய்வதன் நோக்கத்

தைப் பொறுத்திருக்கிறது. தொழில்தான் அந்த நோக்கத்தையும் தருகிறது. எப்படியெனில், தண்ணீர் பாய்ச்சவும், செடிகளைப் பாதுகாக்கவும், வேலைக்காரனுக்குச் சம்பளம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால், அந்தச் சம்பளத்தை உத்தேசித்து உழைப்பது அவன் கடமையாகின்றது. அந்த உழைப்பு அவனுக்கு வேலையாயிற்று. அந்த வேலையைச் செய்வதில் அவனுக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, சம்பளத்தில் விருப்பம் இருக்கிறது. ஆகவே, தொழிலுக்குப் புறம்பேயுள்ள உத்தேசம், அதாவது சம்பளம், அவனை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறது. எஜமானனுக்கு அதே தொழில் உத்ஸாஹத்தை மூட்டுகிறது. ஆகவே அது அவனுக்கு விளையாட்டாயிற்று. இவ்வுதாரணங்களால், விளையாட்டு என்பது உத்ஸாஹத்தையும் மனதுக்குப் பிடிமான்மாயிருத்தலையும் பொறுத்திருக்கிறது என்பது விளங்கும்.

இந்த உண்மையை அறிந்துகொள்வது 'இளம்பிள்ளைக் கல்வி'க்கு நிரம்ப உபயோகமானது. குழந்தைகள் அதிக ஊக்கத்தோடும் மனவெழுச்சியோடும் ஓயாமல் விளையாடும் விளையாட்டுக்களே, அவர்கள் தேகத்தை மாத்திரமேயன்றி, மனத்தையும் வளர்ப்பதற்கென்று, இயற்கையிலே அமைந்துள்ள கருவிகளாம். ஆதலின், நாம் குழந்தைகளை என்ன என்ன செய்யச்சொல்லவேண்டுமோ, அவையாவற்றையும், இயற்கை நமக்கு அறிவிக்கும் இவ்வகை உபாயத்தோடு, கூடியவரையில் பொருந்தச் செய்வதே மிக்க நலம் பயக்கும். அப்படிச் செய்வதால், அவர்கள் விளையாடும் விளையாட்டே, வேலை

போல அமைந்து நற்பயனைத் தரும். அதாவது கல்வி கற்பதில் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியெல்லாம் அவர்களுக்கு விளையாட்டாகவே தோற்றும்படி நாம் செய்யவேண்டும். அப்போது அவர்கள் மனமும் செய்யுந் தொழிலில் விருப்பத்தோடு புகும். அதன் பயனாக, அவர்கள் கல்வியில் அபிவிருத்தி அடைவார்கள். நன்றாக ஆலோசித்து, இயற்கையோடு ஒட்டிய சிறந்த போதனாமுறைகளால் அவர்களுக்குக் கல்வியைக் கற்பித்தோம் என்பது நமக்கும் அகமகிழ்ச்சியைத் தரும்.

இப்படி, சாதாரணமாக வெறுத்து நீக்கும் வேலையையும் விரும்பத்தக்க விளையாட்டாக மாற்றுவதற்குச் சில உபாயங்கள் இருக்கின்றன. அவற்றுட் சில மார்க்கங்களை இங்கே கூறுவோம். குழந்தைகள் விளையாடும்போது பார்த்தால், அவர்கள் தேகத்தில் எந்த எந்தப் பாகங்கள் உழைக்கின்றன என்பது புலப்படும். கால், காது, கண், கை, வாய் முதலிய கருவிகளையே விளையாட்டுகளில் விசேஷமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஆகையால், நாம் மேலே சொன்னபடி, வேலையை விளையாட்டுப்போலவே தோன்றச் செய்வதற்கு, இவற்றை இன்னவண்ணம் உபயோகித்துக்கொள்ளலாம் என்பதை யோசிக்கவேண்டும்.

## நிதான நடை

இயற்கையில், குழந்தை அங்குமிங்கும் நடமாட இஷ்டப்படுகிறதைக் காண்கிறோம் அல்லவா? விசேஷ பரபரப்புடன் எவ்வித உபயோகமுமின்றி

அலைந்து திரியும் இயல்புள்ளவர்களை நிதானமாக நடக்கச்சொல்லி நடை பழக்கினால் அவர்களுக்கு இயல்பாகவுள்ள இஷ்டத்தை ஒரு உத்தேசத்தில் கொண்டு திருப்பலாம். பாட்டு பாடிக்கொண்டு இசையை ஒத்தாவது, அல்லது தாளத்துக்கு ஒத்தாவது, காலைத் தூக்கியும் கீழே வைத்தும், ஒழுங்காக நடக்கக் கற்றுக்கொடுப்பது நலம். உத்ஸாஹமாக ஆடுபவர்களுக்கு வாத்தியம் எவ்வளவு உபயோகமோ, அவ்வளவே, வாயால் பாடும் பாட்டுகள் குழந்தைகள் நடப்பதற்கு உபயோகமாகும். பாட்டின் ஓசையே அவர்கள் பாதத்தைத் தூக்கி நடக்கச்செய்வதுபோல இருக்கும். சிறிதும் சதி பிழையாமல் நடப்பதைத் தூண்டத்தக்கனவாகிய பாசுரங்களை, தேவாரம், திருவாய்மொழி முதலிய நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கலாம். அவற்றைப் பாடிக்கொண்டு நடப்பதற்குச் சிறு பிள்ளைகள் தாமே பிரியப்படுவார்கள்.

இப்படி, பிள்ளைகளை, காலையில் பள்ளிக்கூடத்துக்கு வரும்போது ஒரு முறையும், மாலையில் வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது ஒரு முறையும், பாட்டு பாடிக்கொண்டே நிதானமாக நடக்கும்படி செய்யலாம். சில சமயங்களில் பிள்ளைகள் வகுப்பில் இருக்கும்போதுகூட, அவர்களுடைய சோம்பலை நீக்கவும், அவர்களுக்கு மேற்கொண்டு உத்ஸாஹத்தை மூட்டவும், இவ்வகையான நிதானநடை நிரம்ப உபயோகப்படும்.

இவ்வகை நடையைத்தான் 'மார்ச்' என்று சொல்லுகிறார்கள். சில பள்ளிக்கூடங்களில் காலையில் பிள்ளைகளையெல்லாம் ஒருங்குசேர்த்து 'மார்ச்'

பழக்குவார்கள். 'மார்ச்' செய்வதால் உண்டாகக் கூடிய பயன்களைச் செவ்வனே அடைவதற்கு, 'மார்ச்' செய்யும்போது பிள்ளைகளை உபாத்தியாயர் நன்ருகக் கவனிக்கவேண்டும். முதலில் அவர்களை வரிசையாக நிற்கச்செய்யவேண்டும்; ஒழுங்கீனமாக நிற்க இடங்கொடுக்கக்கூடாது. காலையில், பிள்ளை களையெல்லாம் ஒரே இடத்தில் வந்து வரிசையாக நிற்கச் சொல்லலாம். பள்ளிக்கூடத்திலேயே இடம் விசாலமாக இருந்தால், பிள்ளைகளை இவ்வாறு நிறுத் தலாம். இப்படி நிற்பதற்கு, கூடம் அல்லது பெரிய 'ஹால்', அல்லது அகலமான கொரடு, மிக்க உபயோகமாக இருக்கும். அப்படி நிற்கும்போது பிள்ளைகள் தங்கள் புத்தகங்களைக் கையில் வைத் துக்கொண்டு நிற்கலாம். பள்ளிக்கூடத்தில், இவ் விதமாக ஒரேகாலத்தில் எல்லாப் பிள்ளைகளும் வந்து நிற்கப் போதிய விசாலமுள்ள இடம் ஒன்று இல்லாவிட்டால், பள்ளிக்கூடத்துக்கு முன்னே திறந்த வெளியிடத்திலும் நிற்கச் சொல்லலாம். ஆனால் நிழலில்லாத இடத்தில் வெயில் நேரத்தில் இவ்வாறு நிறுத்திவைக்கக்கூடாது; குளிர்ந்த வேளையாக இருந்தால் வெளியே நிறுத்தி, பிறகு பாடிக்கொண்டே கிரமமாக அவரவர் வகுப்புகளுக் குப் போகச்செய்யலாம். 'மார்ச்' செய்ய ஆரம் பிப்பதற்குமுன்னே, பிள்ளைகள் எல்லாரும் தங்கள் தங்கள் புத்தகங்களைக் கையில் வைத்துக்கொண் டிருக்கிருர்களா, என்று கவனிக்கவேண்டும். ஒவ் வொரு வகுப்பின் உபாத்தியாயரும் அவரவர் வகுப் புப் பிள்ளைகள் இருக்கும் இடத்தில் வந்திருக்க வேண்டும். அப்போது தினசரி ஆஜர்பட்டியென்று

சொல்லும், 'அட்டெண்டன்ஸ்' எடுத்துவிடலாம். 'மார்ச்' செய்வதற்கு உரித்தான பாட்டைப் பாட ஆரம்பித்தவுடன், பிள்ளைகள் ஒழுங்காகத் தங்கள் இடதுகாலையும் வலதுகாலையும் தூக்கியும் தாழ்த்தியும் நடக்க ஆரம்பிக்கவேண்டும். வரிசை கோணுமல் இருக்கிறதா என்பதை அந்த அந்த வகுப்பு உபாத்தியாயர் கவனித்துக்கொண்டு, தம் வகுப்புப் பிள்ளைகளைத் தாமே கூடவிருந்து அழைத்துப் போகவேண்டும். நடக்கும்போது எல்லாப் பிள்ளைகளும் காலைத் தூக்கிவைத்து நடக்கிறார்களா என்பதைமட்டில் கவனித்தாற் போதாது. முதலில் சில பிள்ளைகள் வலதுகாலைத் தூக்கும்போது வேறு சிலர் இடதுகாலைத் தூக்கிவைப்பார்கள். இப்படி முறை பிறழ்ந்த 'சதி'யை நாளடைவில் திருத்த வேண்டும். எல்லாரும் ஒழுங்காக வலதுகாலையும் அல்லது இடதுகாலையும் ஒரே ரீதியாகத் தூக்கி வைக்கும்படி பழக்குவதற்குக் கொஞ்சம் நாள் செல்லும். சில பிள்ளைகள் காலை அதிகமாகத் தூக்குவார்கள். அதனுல் மற்றவர்கள் காலைக் கீழேவைத்த போது அவர்கள் வைக்காமல், வலது இடதுகால்களை முறை பிறழ்ந்து கீழே வைப்பார்கள். அழகும் ஒழுங்கும் இல்லாத 'மார்ச்' உபயோகமில்லை. 'மார்ச்' கற்பிப்பதில் செலவழிக்கும் காலம் வீண் காலமென்று எண்ணக்கூடாது. ஆரம்பத்தில், கால அளவு நிரம்ப முக்கியம் என்று பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். அதற்கு, 'மார்ச்' ஆரம்பிப்பதன்முன்னே, ஒரு தெளிவான சமிக்ஞை செய்து, பிறகு, கிரமப்படி இடதுகால் வலதுகால்களைத் தூக்கிவைத்து நடக்கும்படி செய்யவேண்டும். முத

வில் எல்லாப்பிள்ளைகளும் ஒரே ஒழுங்காகக் கால்களைத் தூக்கிவைக்க மாட்டார்கள். அதற்காக அவர்களை அதட்டக்கூடாது. இப்படிச் செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு அன்போடு சொன்னால், கூடியசீக்கிரத்தில், வகுப்பில் உள்ள பிள்ளைகள் எல்லாரும் காலம் தாளம் தப்பாமல் வலது கால்களை ஒரேகாலத்திலும், அம்மாதிரியே இடது கால்களைச் சமகாலத்திலும், தூக்கியும் தாழ்த்தியும் ஒழுங்காக நடப்பார்கள். 'மார்ச்' நன்றாகத்தெரிந்தபிறகு, பிள்ளைகளுக்கே அதில் அதிகப்பிரியம் ஏற்படும். 'மார்ச்' ஆரம்பிக்கும்வேளைக்கு முன்னமேயே பள்ளிக்கூடத்துக்கு வந்துவிடுவார்கள். காலம் தாமதித்து வந்தால், 'மார்ச்' செய்ய முடியாதே என்று பரபரப்போடு பள்ளிக்கூடத்துக்கு வருவார்கள். பிள்ளைகளைக் காலம் தாழ்க்காமல் பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்வதற்கு இது சிறந்த உபாயமாகும்.

## (ii) தேகாப்பியாசம்

சாதாரணமாக, வகுப்பில் பிள்ளைகள் படிக்கும் போது; நெடுநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருத்தலினாலேயே சோர்ந்துபோவார்கள். தேகத்தை இப்படி அப்படி அசைப்பார்கள், கொட்டாவி விடுவார்கள், விரல்களைச் சொடுக்குவார்கள், தலையைப் பின்புறமாகச் சாய்ப்பார்கள். இன்னும் எத்தனையோ வகைகளில் அவர்கள் மனச்சோர்வை அடைந்திருக்கிறார்கள் என்பது தெரியும். அப்போது உபாத்தியாயர், அவர்களை 'மார்ச்' செய்யச்

சொல்லி அவர்கள் சோர்வைப் போக்கி ஊக்கம் பிறப்பிக்கலாம்.

இவையன்றி, பாட்டுக்களோடுகூடிய தேகாப்பியாசம் கை கால்களை உழைப்பித்தும், கண், காது, உரம், கண்டம் முதலிய அங்கங்களை தொழிற்படுத்தியும், குழந்தைகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணும்.

சிறு குழந்தைகள் பாடக்கூடியதாக எத்தனையோ பாட்டுகள் இருக்கின்றன. உபாத்தியாயர் இப்படிப்பட்ட பாட்டுகளில் உபயோகமான சிலவற்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பாடல்கள் தேகத்துக்கும் மனத்துக்கும் ஊக்கமூட்டும். இவற்றைப் பாடிக் காண்பிக்கக்கூடிய உபாத்தியாயரிடம் பிள்ளைகள் பிரியத்தோடு வசப்பட்டு நிற்பார். இப்படிப் பாடும் சக்தி அவருக்குப் புதியதோர் வசீகரத்தைத் தரும். அவர் பாடுவதைக் கேட்டும், அவர் செய்கைகளை நன்ருக உற்றுப்பார்த்தும், அவ்வண்ணமே தாமும் பாடவும் செய்கைகளைச் செய்யவும் வழக்கப்பட்ட குழந்தைகள், தொடக்கத்திலிருந்தே, கீழ்ப்படிந்து நடக்கப் பயில்கிருர்கள் அன்ருே? உபாத்தியாயர் காண்பிக்கும் வண்ணமே தவருமல் செய்ய எத்தனிப்பதில், சொன்னவண்ணம் செய்யப் பழகி அதனுல் கீழ்ப்படிதலாகிய வழக்கம் ஏற்படுகின்றது.

பள்ளிக்கூடத்தில் மாத்திரம் தான் தேகாப்பியாசம் செய்யவேண்டும் என்று நினைக்கக்கூடாது. வீட்டிலும் தேகாப்பியாசம் செய்தல் நல்லது. வீட்டில் எப்படிப்பட்ட தேகாப்பியாசத்தைச் செய்யக் கூடும் என்பதைப் பெற்ருேர் யோசிக்கவேண்டியது.

உபகரணங்கள் ஒன்றும் தேவையில்லாத தேகாப்பியாசங்கள் எத்தனையோ இருக்கின்றன. குழந்தைகள் விநாயகருக்கு முன்னின்று தோப்பகரணம் போடலாம். பிறகு, அஷ்டாங்க நமஸ்காரம்* செய்யலாம்.

இன்னொரு வகையான தேகாப்பியாசம் இக்காலத்தில் சில மேல்நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பிராணிகளின் கதிகளைக் கண்டு அவற்றைப் போலவே நடக்கவும், ஊர்ந்து செல்லவும் முயன்றால், தேகத்தில் எல்லாப் பாகங்களுக்கும் நல்ல அப்பியாசம் இருக்கிறதென்றும், அப்படிப்பட்ட அப்பியாசங்களால் தேகம் கெட்டிப்படுகிறதென்றும், ஜீரண கருவிகள் பலப்படுகின்றனவென்றும், தேகாப்பியாசங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த சில நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவதை யொட்டி சில தேகாப்பியாசக் கழகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நமது தேசத்தில் சிறுபிள்ளைகள், பச்சைக் குதிரை தாண்டுவது, தவளைக்கதியாகச் செல்வது போன்ற விளையாட்டுகளைத் தொன்றுதொட்டு விளையாடி வருவதை யாவரும் அறிவார். பிராணிகளின் கதியைப்போல நடித்துக்காட்டுவதில் சிறு குழந்தைகளுக்கு விருப்பம் உண்டு. ஆகையால், இந்தவகையில் குழந்தைகள் தாமாகவே பார்த்துள்ள பிராணிகளின் கதியைப்போல நடிக்கச் சொல்வதிலும், தேக அப்பியாசம் இருக்கிறது. இப்படி அப்பியசிப்பதில் அவர்களுக்கு உத்ஸாஹமும்

* எட்டு அங்கங்கள் பூமியிற் படும்படி செய்யும் நமஸ்காரம்.

இருக்கலாம். முரட்டுத்தனமாக ஒன்றும் செய்யாமல் சிறுபிள்ளைகளை வேடிக்கையாகப் பிராணிகளின் கதியைப்போல விளையாடச் செய்யலாம்.

இவை நிற்க, மற்றொருவகையான தேகாப்பியாசம் இருக்கிறது. அது சுலபமானதாயும் யாவரும் பிரயாசையின்றி செய்யக்கூடியதாயும் உள்ளது. மற்ற அப்பியாசங்களைவிட அது அதிக உபயோகமானது. ஆதலால் ஒவ்வொரு குழந்தைக்கும் அதைச் செய்யக் கற்றுக்கொடுத்தல் நலம். அந்த அப்பியாசம் சிறுவயது முதல் ஆயுள்பரியந்தம் செய்யத்தக்கது. மூச்சை உள்ளே இழுத்து, சக்திக்குத் தக்கபடி சற்றுநேரம் நிறுத்தி, பிறகு உபாயமாகவும், அவசரப்படாமலும் நிதானமாக வெளியேவிடுவது சிறந்த அப்பியாசம். நன்றாக சுவாஸம்விடப் பழகுவதால் அநேகம் பயன்கள் உண்டு.

சுவாஸத்தை நிதானமாக உள்ளே இழுத்து வெளியேவிடும் அப்பியாசங்களால் இனிமையாகப் பாடுகிற சக்தி விருத்தியாகும். உச்சரிப்பு சுத்தப்படும். பேச்சில் தெளிவும் விளக்கமும் திருத்தமும் உண்டாகும். நாம் சாதாரணமாக மூச்சுவிடும்போது காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுகிறோம். சுவாசிக்கும் காற்று மூக்குத்துவாரங்களின் வழியே உட்செல்லவேண்டும். வாயைத் திறந்துகொண்டு காற்றை உள்ளே இழுக்கக்கூடாது. வெளியே விடும்போதும், மூக்கின்வழியாகவே விடவேண்டும். வாயைத் திறந்துகொண்டு மூச்சுவிடுவதால் அசுத்தமான காற்றும், காற்றில் உள்ளனவாய் நமது கண்ணுக்குத் தெரியாதவையும், மிகச்

சிறியவையுமான, பல விஷக்கிருமிகளும், வாயின் வழியே உட்சென்றுவிடுகின்றன. அதனால், அற்ப ஜலதோஷம் முதல், பலவித கொடிய வியாதிகளும் வரும். ஆகையால், வாயை மூடிக்கொண்டு, மூக்கின் வழியே சுவாஸம் விடுவதுதான் ஆரோக்கியத்தைத் தரும். சிறு பிராயத்திலேயே குழந்தைகளுக்கு இந்தப் பழக்கம் ஏற்படவேண்டும். பெற்றோர்கள் அஜாக்கிரதையினால், இதை முதலில் கவனிக்காமல் விட்டுவிட்டால், பின்பு எப்போதும் வாயால் மூச்சு விடுவதே குழந்தைகளுக்கு வழக்கமாகிவிடும். அந்த வழக்கத்தைப் பிறகு மாற்றுவது மிகவும் கடினம். அதனால், குழந்தைகள் எப்போதும் வாயைத் திறந்துகொண்டே தூங்குவார்கள். இந்தக் கெட்ட வழக்கத்தால் அவர்கள் ஜீரணசக்தி குறையும். அது பற்றி அவர்கள் தேகம் திடமாக வளராது. புத்தியும் மந்தப்படும். வாயினாலேயே மூச்சுவிடுகிற வழக்கமுள்ள குழந்தைகளுக்கு அடிக்கடி ஜலதோஷமும், தலைவலி, தொண்டையில் வலி முதலிய நோய்களும் உண்டாகும். ஆகையால் சிறு குழந்தைகளை முதலிலிருந்தே இவ்விதம் சுவாஸம் விடவேண்டிய ஆரோக்கிய முறையிற் பழக்கவேண்டும்.

காற்றை உள்ளே இழுப்பதற்கு 'உசுவாஸம்' என்று பெயர். வெளியே விடுவதற்கு 'நிசுவாஸம்' என்று பெயர். அதிக சுவாஸத்தை, சிரமத்தோடு சுருக்க சுருக்க அவசரமாக இழுப்பதும் விடுவதும் தவறு. சாந்தமாகவும், நிதானமாகவும், தாராளமாகவும், மெதுவாகவும், பிரயாசை யில்லாமல் எவ்வளவு நேரம் நீடித்து இழுக்கமுடியுமோ, அவ்வளவு நேரம்தான் காற்றை உள்ளே இழுக்கவேண்டும்.

இந்த அப்பியாசங்களைச் செய்யும்போது, குழந்தைகளை நேரே தலை நிமிர்ந்து உட்கார்ந்திருக்கச் செய்யவேண்டும். தலையைப் பக்கமாகச் சாய்க்கக் கூடாது. புஜங்களை, முன்னே குறுகிவராதபடி பின்புறமாகப் பரவியிருக்கும்படி செய்துகொண்டு, மூக்கின்வழியே காற்றை மெல்ல இழுக்கச் சொல்ல வேண்டும். காற்றை இழுக்கும்போது தோள்களைத் தூக்கக்கூடாது. அப்போது காற்று உட்செல்லுகையில் மார்பு அகலும். காற்றை உள்ளே இழுத்தபிறகு சற்றுநேரம் அதை அடக்கிக்கொண்டிருந்து, பிறகு மெதுவாகவும், நிதானமாகவும் வெளியே விடவேண்டும். அடக்கிய சுவாஸத்தை அவசரமாக வெளியேவிடுவது தவறு. அதை சுவாதீனத்தில் மெல்ல நிறுத்தி வெளியே விடவேண்டும்.

இந்தப்பிரகாரம் சுவாஸ அப்பியாசங்களைத் தினந்தோறும் சற்றுநேரம் செய்வது நலம். இதில் பிரயாசை இருக்கக்கூடாது. இந்த அப்பியாசம் மிகவும் சுலபமாகச் செய்யத்தக்கது. எங்கும் செய்யத்தக்கது. விளையாடுவதென்றால் அதற்குக் கூட்டாளிகள் வேண்டும். இந்த அப்பியாசமோ ஒவ்வொருவரும் தனியே செய்யத்தக்கது. சிறுபிராயத்திலேயே, சுவாஸத்தை ஆரோக்கிய முறையை ஒட்டி அடக்கவும் விடவும் பழகினால், அந்த நற்பழக்கம் ஆயுள் முழுமைக்கும் நிரம்ப உபயோகமாக இருக்கும். சுவாஸத்தைக் கிரமமாக முறையே அடக்கியும் வெளியேவிட்டும் செய்யத்தகுந்த அப்பியாசங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் உபாத்தியாயர் நன்றாக அறிந்து பிறகு பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். தவறான முறையில் இவ்வகை

அப்பியாசங்களைச் செய்வது நன்மை பயக்காத தோடு கெடுதியை விளைவிக்கும்.

### (iii) பாட்டு

குழந்தைகளுக்கு ஆரவாரம் செய்துகொண்டு விளையாடுவதில் அதிகப் பிரியம் உண்டு. சுத்த மான காற்று உள்ள விஸ்தாரமான மைதானங்களி லும், தோட்டங்களிலும், ஆரவாரம் செய்து கொண்டு விளையாடுவதில் பிரயோசனம் இருக்கி றது. சுத்தமான காற்று உட்செல்லுகிறது. கூச்சல்போடுவதில் இயல்பாகவே இஷ்டம் மிக்கவர் களான குழந்தைகளின் பிரியத்தை மற்றொரு துறை யிலும் உபயோகித்துப் பயன்பெறச் செய்யலாம்; அவர்களைப் பாட்டு பாடச் சொல்லலாம்.

இசை நமது மனத்தின் விருத்திக்கு நிரம்ப உப யோகமானது. நம் மனத்தை ஓர் தோட்டத்தைப் போலவே பயிர்செய்யவேண்டும் என்பார். ஓர் தோட்டத்தில் வெற்றிடமாகவுள்ள ஓர் பாகத்தில் ஒரு புஷ்பச்செடியைப் பயிர்செய்தால் அது எவ் வளவு உபயோகமாகவும் பார்ப்பதற்கு அழகாக வும் இருக்குமோ, அப்படியே, இசை பயில்வதால் மனம் அழகுபெறுகின்றது. மேலும், இசை பயில் வதால்தேகத்துக்கு ஆரோக்கியம் உண்டாகின்றது. பாட்டுகளைப் பாடினல் தோள் எலும்புகளுக்குச் சமீபத்திலுள்ள குழிகள் நிரம்பி, தேகம் புஷ்டியா கும். இருமல் முதலிய வியாதிகள் அணுகா. பாட் டும் அதற்கிசைந்த நடையும் மனததை ஒருவழிப் படுத்தும். அவ்வாறு ஒன்றில் சிறிது நேரம் மனத்தை நிற்கச்செய்யும் பழக்கத்தால் வேறு

பாடங்களிலும் மனம் ஊன்றி நிற்கப் பழக்கமடை கிறது. மனம், படபடப்பு இன்றி, சாந்தமடைந்து அமைதியாக இருப்பதற்குச் சிறந்த பாட்டுகள் நல்ல கருவிகளாகுமென்பது சங்கீத சாஸ்திர நிபுணர்களின் துணிபு.

ஆகையால், பாடுவது சுவாஸ ஆசயத்துக்குச் சிறந்த அப்பியாசம் ஆகும். குழந்தைகளுக்குப் பாட்டில் வெகு பிரியம் உண்டு. நோயினால் அழுது கொண்டிருக்கும் குழந்தைகூட, ஒரு பாட்டைக் கேட்டவுடன், அழுகையை நிறுத்தி இசையின் இனிமையை அனுபவிக்கும். குழந்தைகளுக்கு இப்படி இயல்பாகவேயுள்ள பிரியத்தைப் பள்ளிக்கூடங்களில் நல்லவண்ணம் உபயோகித்துக்கொள்ளலாம். குழந்தைகள் பாட்டுப் பாட இஷ்டப்படுவதால் அவர்களுக்குக் கிரமமாகச் சில பாட்டுகளைக் கற்பிக்கலாம். தோத்திரப்பாக்களில் சுலபமான சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, குழந்தைகளுக்குக் கற்பிக்கலாம். இவையன்றி தினசரி பாடங்களோடு பொருத்தம் உள்ளனவாயிருக்கும் செய்யுள்களையும், ஆராய்ந்தெடுத்து, பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம்.

தினந்தோறும் பிள்ளைகள் யாவரையும் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் வந்து வரிசையாக நிற்கச் சொல்லி, எல்லோருக்கும் சமகாலத்தில் பாட்டுகளைக் கற்பிப்பது நலம். பள்ளிக்கூடத்தில் நடத்த வேண்டிய பாடங்களில் சிலவற்றை நன்றாகச் சொல்லிக்கொடுக்கும் திறமையில்லாத உபாத்தியாயர் கூட, ஒருசமயம் சங்கீதத்தில் பிரியமுள்ளவராகவும், ஆர்மோனியம் முதலிய இசைக்கருவிகளை வாசிக்கக்கூடிய திறமையுள்ளவராகவும் இருக்க

லாம். அவரைக்கொண்டு காலையிலும் மாலையிலும் எல்லாப் பிள்ளைகளுக்கும் பாட்டுகளைக் கற்பிக்கலாம்.

பாட்டுகளைப் பாடக் கற்பிக்கும்போது, எழுத்துக்களின் உச்சரிப்பும், சொல்லின் இனிமையும் பிள்ளைகள் உள்ளத்தில் நன்றாகப் பதியும்படி பாடிக் காட்டவேண்டும். பாடுகிற பாட்டின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளாமலும், பதங்களை விளக்கமாகச் சொல்லாமலும், உச்சரிப்புகளைக் குறைத்தும், குழறியும் பாடுவதிற் சிறிதும் பயனில்லை. தோத்திரங்களின் அர்த்தத்தை அறிந்து பாடினால் பக்தியுண்டாகும், உள்ளம் கனியும், பாட்டில் புத்தி செல்லும்; பாட்டு பாடுவதில் அதிக ஊக்கமும் சந்தோஷமும் உண்டாகும். சிறுபிள்ளைகளுக்குப் பாட்டுகளின் அர்த்தத்தைக் கற்பிப்பது மிகக் கடினம் என்று எண்ணவேண்டியதில்லை. சொற்களைத் தெளிவாகச் சொல்லி, பாடிக் காட்டி, அவ்வாறு பாடியவுடனே, சில பிள்ளைகளை, "இந்தச் சொல்லுக்கு என்ன பொருள்" என்று கேட்டு, பொருளை விளக்கவேண்டும். இப்படி ஒரு பாட்டில் உள்ள சொற்களையெல்லாம் ஒரே நாளில் தனிப் பாடமாகக் கற்பிக்கத் தொடங்கக்கூடாது. ஒவ்வோர் சமயத்தில் சுலபமான கேள்விகளைக் கேட்டு, பிள்ளைகள் பாடலின் அர்த்தத்தை அறிந்துகொண்டிருக்கிறார்களா என்று கவனித்துக்கொண்டுபோனால், கூடியசீக்கிரத்தில் எல்லாப் பிள்ளைகளும் பாட்டின் அர்த்தத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு அனுபவத்தோடு பாடுவார்கள்.

குழந்தைகள் பாடவேண்டிய பாடல்களாயிருத்தலால், அவை நிரம்ப சுலபமாக இருக்கவேண்டும்

என்று தவருக எண்ணி, சிலர் தாமாகவே எளிய நடையில் எழுதுவதாக நினைத்துச் சில புதிய பாட்டுகளை வரைந்து அவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறுர்கள். உதாரணமாக, மாமரத்தைப் பாருங்கள்—அதில் மாங்கனிகள் பழுக்குது! என்ற வண்ணமான புதியதாக எழுதப்பெற்ற பாட்டுகளைக் கற்பிப்பதால், பிள்ளைகளுக்கு பாஷா ஞானம் விருத்தியாகாததுமன்றி, அவர்களுக்கு இயற்கையாகச் சங்கீதத்திலுள்ள பிரியமும் குறைந்துபோகும். இவ்வாறின்றி, மிகச் சிலாக்கியமான பாடல்களையே பிள்ளைகளுக்குப் பாடிக்காட்ட வேண்டும். சொல்லினிமையும் பொருளினிமையும் உள்ள பழைய பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கவேண்டும். பிள்ளைகள் ஒன்றுகூடிப் பாடுவதற்கு ஏற்றதாகவுள்ள பல தோத்திரப்பாக்களுள் சிலவற்றை * மாதிரிக்கு இங்கே எடுத்துக்காட்டு

---

* 1 துலங்கு வெண்மழு வேந்திச் சூழ்சடை
அலங்கலான் உறை ஆடானை
நலங்கொண் மாமலர் தூவி நாடொறும்
வலங்கொள்வார் வினை மாயுமே. (திருஞானசம்பந்தர்)

2 அம்பொன் ஆலவாய்
நம்பனுர் கழல்
நம்பி வாழ்வர்
துன்பம் வீடுமே. (திருஞானசம்பந்தர்)

3 தலையே நீ வணங்காய்
தலை மாலைதலைக் கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

வோம். இவைபோன்ற பாடல்களை உபாத்தியார் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். ஒரே பாட்டை வருஷம் முழுமையும் பாடிக்கொண்டேயிருப்பதிலும் பயனில்லை. ஒரு பாட்டைச் சொல்லிக்கொடுத்தபிறகு, பிள்ளைகள் அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு இனிமையாகப் பாடத்தொடங்கும்வரையில், அதைக் கற்பிக்கவேண்டும். ஒன்றை

---

4 நெஞ்சே நீ நினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடுமலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

5 கைகாள் கூப்பித் தொழீர்
கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர் (திருநாவுக்கரசு நாயனார்)

6 கரையாய் காக்கைப் பிள்ளாய்
கரு மாமுகில் போல்நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தமனை வர
கரையாய் காக்கைப் பிள்ளாய். (பெரிய திருமொழி)

7 கூவாய் பூங்குயிலே
குளிர் மாரி தடுத்துகந்த
மாவாய் கீண்ட மணிவண்ணனை வர
கூவாய் பூங்குயிலே. (பெரிய திருமொழி)

8 செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.
(பெருமாள் திருமொழி)

நன்ருகக் கற்றுக்கொண்ட பிறகு, அதை முதலில் பாடச் சொல்லிக் கேட்டு, பிறகு புதியதொன்றைக் கற்பிக்கவேண்டும். அதை நன்ருகத் தெரிந்து கொண்ட பிறகு, அதனை முதலில் பழம்பாடமாகப் பாடச்சொல்லி, வேருென்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இந்த முறைப்படியே கற்பித்தால், எல்லாப் பிள்ளைகளும் அநேகம் தோத்திரப்பாக்களை அர்த்தத்தை யுணர்ந்து பாடத் தெரிந்துகொள்வார்கள். அப்போது அவர்களுக்கு இன்னும் சில தோத்திரங்களைப் பாடத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை பிறக்கும். அதனுல் அவர்களுடைய பாஷாஞானமும் விருத்தியாகும். மனங்கனிந்து தோத்திரங்களை உருக்கமாகப் பாடும்போது கடவுள் பால் மனமானது செல்லும். நன்னடை விருத்தியாகும்; தெய்வபக்தி யுண்டாகும். மனத்தையுருக்கும் படியானதாகவும், பாலுந் தேனும் கலந்ததுபோலச் சொல்லிற் பொருளினிமை தோற்றுவதாகவும் உள்ள தோத்திரங்களைப் பாடி உலகத்தாருக்குப் பேருதவி செய்தருளிய நாயன்மார்கள்பாலும் ஆழ்வார்கள்பாலும் மனம் ஈடுபடும். திருத்தாண்டகம் போன்ற பண்களைப் பாடும் முறைப்படி பாடினுல் எவருடைய உள்ளம்தான் கனியாது? சொல்லும், பண்ணும், பக்தியில்லாதவர்களுக்கும் பக்தியை உண்டுபண்ணும். மனத்தூய்மையைத் தரும்.

### (iv) படங்கள், உருவங்கள் முதலியவை

நூதன விஷயங்களைப் பார்ப்பதில் குழந்தைகள் மனம் விரைந்து செல்லுந்தன்மையது. ஆனதால், அவர்கள் கண்கள் நாற்புறமும் செல்லும். இவ்

வியல்பை, கல்வியபிவிருத்தி விஷயமாக, உபாத்தியாயர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள லாம். பிள்ளைகள் வஸ்துக்களையே நேரே பார்த்தால் அவற்றை எவ்வாறு அறிந்துகொள்வார்களோ, அவ் வாறே, தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்களை மனத்திற்கொள்ளும்படி, படங்களையும் வஸ்துக்களை யும் வகுப்பறையில் சேமித்து வைக்கவேண்டும். பாலர் வகுப்பில் அவர்கள் பாடங்களோடு சம்பந்த முள்ள படங்கள், சித்திரங்கள், பதுமைகள், வஸ் துக்கள் முதலியவற்றை உபாத்தியாயர் நன்கா ராய்ந்து சேர்க்கவேண்டும்.

இவற்றை உபயோகப்படுத்தவேண்டிய முறை களை இதன்பின்னே விவரிப்போம். அவற்றை விவரிக்கும் முன்னே இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றே.

படம் முதலிய உருவங்களைக் காட்டாமல் பாலர் களுக்கு எந்தப் பாடமும் சொல்லக்கூடாது. அவர் கள் காதினுல் கேட்பது மாத்திரம் போதாது. கண்களாலும் பார்க்கவேண்டும். தெய்வங்களின் படங்களும், மனிதர் உடை, ஆபரணம், தொழில் வகைகள் முதலியவற்றைக் காட்டும் படங்களும், இக்காலத்தில் வர்ணப்படங்களாகவே அகப்படுகின் றன. ஏர் உழுதல், ஏற்றம் இறைத்தல் போன்ற வேலைகளைக் காட்டும் சிறு உருவங்களும், தச்சன் குயவன் வண்ணுன் கருமான் முதலிய தொழிலாளி கள் செய்யும் வேலைகளைக் காட்டக்கூடிய பதுமை களும், மண்ணுலும் மரத்தாலும் செய்யப்பட்டு விற்பனைக்குக் கிடைக்கின்றன. இவற்றைப் பள்ளிக் கூடத்தில் வாங்கி வைத்துக்கொள்ளுதல் நலம். கர்கி

தத்தில் எழுதக்கூடிய படங்களை உபாத்தியாயரே எழுதி வைத்துக்கொள்ளலாம். வர்ண மணிகளினாலும் நூல்களாலும் சில படங்களைச் செய்து கொள்ளலாம். பிள்ளைகள் சுலபமாகப் பார்க்கக் கூடியபடி அந்தப் படங்களைச் சுவரில் அவர்கள் கை எட்டும்படியான இடத்தில் வைத்தால் அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பார்ப்பதனாலும் சிலசமயம் கீழே எடுப்பதனாலும், அவை கிழிந்துபோகும் என்று தோற்றினால், சற்று உயரத்தில் ஆணியில் மாட்டிவைக்கலாம். குழந்தைகள் நன்றாகப் பார்க்க முடியாத உயரத்தில் படங்களை வைப்பதில் யாதொரு பயனுமில்லை. பதுமைகள், உருவங்கள் முதலியவற்றைக் கூடுமானால் கண்ணாடி அலமேரியில் வைப்பது நலம். பாலர்கள் அவற்றைச் சமீபத்திலேயே நின்று பார்க்கப் பிரியப்படுவார்கள். ஆகையால், பாடம் சொல்லும்போது அவசியமான படத்தையும், உருவத்தையும், மேஜையின் மீது வைத்துக் காண்பிக்கவேண்டும்.

## உருவம் வரைதல்

பாலர்களின் இயல்புக் குணங்களை அவர்கள் கல்வி விருத்தியில் உபயோகப்படுத்தும் முறைகளுள் உருவம் வரைவதாகிய விளையாட்டை ஏற்படுத்துவதும் ஒன்றாகும். சித்திரம் வரைதல் என்பது இன்னதென்று யாவரும் அறிவார். தரையிலும், பலகையிலும், காகிதத்திலும், பொட்டுகளையும் கோடுகளையும் கோணல்மாணலாகப் போட்டு, தோற்றியபடி எழுதுவதில் பாலர்களுக்கு அதிக விருப்பம் இருப்பதை யாவரும் கவனித்திருப்பார்கள். தரை

யிலும் சுவர்களிலும் கோடுகளைக் கீறி குழந்தைகள் விஷமம் செய்கிறார்களென்று சாதாரணமாக எண்ணி அவர்களைப் பெற்றோர்கள் ஒருசமயம் கண்டித்தாலும் கண்டிப்பார்கள். ஆனால் இவற்றை உபயோகமற்ற விளையாட்டாக நினைக்கக்கூடாது. குழந்தைகள் இவ்விதமாகக் கோணல்மாணலாக வரையும் கோடுகள் இன்னவையென்று நமக்குப் புலப்படாவிட்டாலும், அவர்கள் ஏதோ தங்கள் மனத்திலுள்ள அபிப்பிராயங்களைத்தான் இந்த உருவங்கள் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள் என்ற உண்மை, சமீபகாலத்தில்தான், ஆராய்ச்சிகளால் வெளியாயிற்று. ஆகையால் பாலர் வகுப்புகளில் உருவம் வரைதல் என்ற பாடத்தையும் நடத்த வேண்டும் என்று சொல்லப்புகுமுன்னே, பாலர் வகுப்பு சம்பந்தப்பட்டவரையில் சித்திரம் வரைதலைப்பற்றிச் சில கருத்துகளை விளக்கவேண்டியிருக்கிறது. 'சித்திரம் வரைதல்' என்பதன் பொருள் யாது? எப்பயனைக் கருதி பாலர்களைச் சித்திரம் வரையச் சொல்லவேண்டும்? அல்லது, இந்த அப்பியாசம் எதற்கு உபயோகமாக இருக்கிறது? இவ் விஷயங்களை விளங்கச் செய்யவேண்டியது அவசியம்.

இக்காலத்தில் சாதாரணமாக எல்லா உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் நடத்தும் முக்கியமான பாடங்களுள், 'சித்திரம் வரைதல்' என்பதும் ஒன்றாகும். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் 'சித்திரம் வரைதல்' பாடம் ஒவ்வொரு வகுப்பிலும் நடக்கும். இந்தப் பாடத்தைக் கற்பிக்கும் உபாத்தியாயர் சித்திர உருவங்களை எழுதப்பழகி,

பரீக்ஷையில் தேறியவராக இருப்பார். பொருள்களைப் பிரத்யக்ஷமாகப் பார்ப்பதுபோலவே, ஒரு சிறிதும் தாரதம்மியமின்றி, பார்ப்பவர் மனம் பிரமிக்கும்படிச் சித்திரம் எழுதுவதில் வல்லுனர்களையே, இந்தப் பாடத்தைக் கற்பிக்கும்படி நியமிப்பார்கள்.

ஆனால், பாலர் வகுப்பில் நடத்தும் சித்திரம் வரைதலாகிய பாடம் இதைப்போன்றதன்று. பாலர் வகுப்புக்கு ஏற்பட்ட உபாத்தியாயர், சித்திரம் வரைதலில் விசேஷ சமர்த்தராக இராவிட்டாலும் குறையில்லை. பாலர்களை நன்றாகச் சித்திரம் வரைதலிற் பழக்கவேண்டியது அவர் வேலையன்று. சாதாரணமாக வீட்டில் விளையாடும்போது, கோணல்மாணலாகக் கோடுகளைப் போடுவதில் எப்போதும் விசேஷ பிரியமுள்ள குழந்தைகளுக்கு, அவ்வாறே, பள்ளிக்கூடத்திலும், சந்தோஷமாகக் காலங் கழிக்கும்படி அனுமதி கொடுப்பதுதான் அவர் வேலை. சித்திரம் வரையக் கற்றுக்கொடுப்பது கடினம். பாலர்கள் இஷ்டப்படி ஏதாவது வரையவிடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது! பாலர் வகுப்புச் சித்திரத்துக்கும் பெரிய வகுப்புச் சித்திரத்துக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் இதுவே. பாலர் வகுப்பில், பிள்ளைகள் எழுதும் சித்திரம் அவர்கள் தாமாகவே, தம் மனத்தில் தோற்றியவண்ணம், எழுதுவதேயாம். பிள்ளைகளுக்குமுன்னே உபாத்தியாயர் எதை வரைந்துகாட்டிக் கற்பிக்கின்றாரோ, அதனை நன்றாகக் கவனித்து, அவர் தொடங்குகிறபடியே தொடங்கி, அவர் சொல்லும்வண்ணமே வரைவது மேல்வகுப்புகளில் நடத்தப்படவேண்டிய

சித்திரவேலை. குழந்தைகள் தமது இஷ்டம்போன படி, தாமாகவே, பிறர் தூண்டுதல் இல்லாமலும், ஒருவர் கற்றுக்கொடுத்துப் போடாமலும், சித்தி ரங்களை வரையவேண்டும் என்பதே பாலர் வகுப்புச் சித்திரப்பாடத்தின் நோக்கமாகும். அவை பிள்ளை கள் தாமே வரைவதாக இருக்கவேண்டும். ஆனால் உபாத்தியாயர் செய்யவேண்டியது என்ன? பிள்ளை களுக்குக் கருத்துகளைச் சொல்வார்; அவர் சொல் லுங் கருத்துகளைப் பிள்ளைகள் தங்கள் மனத் தில் வாங்கிக்கொள்வார்கள்; அவர்கள் சித்திரம் வரைந்து காட்டுவதில், உபாத்தியாயர் சொன்ன கருத்துகள் அவர்கள் மனத்தில் இவ்வண்ணம் பதிந்திருக்கிறதென்பதை அவர்கள் எழுதும் சித்தி ரத்தால் ஒருவாறு வெளியிடுவார்கள். இந்த வகை யாக யோசிக்கும்போது, பாலர் வகுப்புச் சித்திரம் என்பது ஒருவகையான பேச்சுப்போலவே உப யோகப்படுகிறது என்பது விளங்கும். குழந்தை கள் மனத்தில் உள்ள எண்ணங்களையெல்லாம், சொற் களால் சொல்லாமல், தங்களுக்குத் தோற்றிய வற்றை, உருவத்தால் வரைந்து காட்டுகிறார்கள் என்று எண்ணவேண்டும். உபாத்தியாயர் வேறொன் றும் செய்யவேண்டியதில்லை. காகிதமும் பென்சி லும் கொடுக்கவேண்டியதுதான் அவர் கடமை. அல்லது, சுவரைச்சுற்றிலும் பிள்ளைகள் கைக்கு எட் டும்படியாக கரும்பலகையைப்போலவே உபயோ கப்படும்படி கருப்புக்காவி பூசிய சுவர்ப்பாகத்தில், வரையும்படி சொல்லலாம். சீமைச்சுண்ணாம்பி னால் வரையும்போது, சுண்ணாம்புத்தூள் பிள்ளை களின் உடையில் படியாமலும், கண்களிலும் நாசி

களிலும் புகாதபடியும், கவனித்துக்கொள்ளும்படி, பிள்ளைகளை எச்சரிக்கை செய்தாற் போதும். மேற்கொண்டு வேறொன்றும் உபாத்தியாயர் செய்ய வேண்டியதில்லை. கொஞ்சநேரம் வரையில் பிள்ளைகள் மனத்திலுள்ள விஷயங்களை, காகிதத்திலாவது பலகையிலாவது வரைந்து காட்டும்படி விட்டுவிட வேண்டியது.

எப்போது பாலர் சித்திரப் பாடமானது, அவர்கள் வாய்ப்பேச்சு ஸ்தானத்தில் இருப்பதொன்று என்று சொல்லிவிட்டோமோ, அப்போதே, பிள்ளைகள் தாங்கள் எழுதும் சித்திரங்கள் மூலமாகத் தங்கள் மனத்திலுள்ள கருத்துகளை நன்ருகத் தெரிவிக்கும் சக்தியுடையவர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகம் வருவதற்கு இடமில்லை. உருவங்களை வரைந்து காட்டுவதன் மூலமாக, தங்கள் மனக் கருத்தை வெளிப்படுத்தத் தகுந்த சக்தி, சிறு பிள்ளைகளிடம் இருக்குமா என்ற பயம் வேண்டாம். குழந்தைகளுக்குச் சாதாரணமாகக் கீற்றுக்கோடுகளைப் போடுவதில் நிரம்ப சந்தோஷம் இருப்பதே இந்தசக்தி அவர்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறதென்பதற்கு ஓர் அடையாளமாகும். எவ்வித நோக்கமுமில்லாமல், கோணல்மாணலாகப் போடும் கோடுகளால் என்ன பயன் என்றும், அவர்கள் வரையும் உருவம் எதற்கு உபயோகம் என்றும், அந்த உருவங்கள் விஷயங்களை விளக்கமாகக் காட்டுமா என்றும் ஆக்ஷேபித்தல், இந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமில்லை.

சிற்பத்தில் வல்ல நிபுணருக்கு பாலர் வரையும் தாறுமாருன கோடுகளில் யாதொரு உபயோகமும்

தோன்றுமலிருக்கலாம். பார்ப்பவர்களுக்குக் குழந்தைகள் எழுதிய உருவங்களில் அர்த்தம் ஒன்றும் விளங்காமலும் இருக்கலாம். அவ்வுருவங்கள் எவற்றை விளக்குகின்றனவென்று சிலர் சந்தேகிக்கலாம். ஆனால், குழந்தையின் உள்ளத்தை நன்கறிந்த நிபுணருக்குத்தான் அவர்கள் வரையும் உருவங்களில் உபயோகத்தைக் காணவும், அவற்றின் அர்த்தத்தைக் கிரஹிக்கவும் முடியும்.

ஆனால் ஒன்று நிச்சயம். குழந்தைகளுக்குத் தாம் வரைந்த படங்கள் நிரம்ப அர்த்தம் உள்ளனவாகவே இருக்கும். அவர்கள் கண்ணுக்கு அந்த உருவங்கள் வெகு திருப்திகாமாகவும், தெளிவாகவும் இருப்பதாகவே தோற்றும். அவர்கள் வரைந்த உருவம் அவர்களுக்குத் தெளிவாக இருக்குமானல், அதுதான் நாமும் விரும்பத்தக்கது. ஸ்ரீ வான்மீகி மஹாரிஷி வடமொழியில் எழுதிய ஸ்ரீ இராம சரிதத்தைத் தமிழில் காப்பியமாக எழுதியுதவிய கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், தாம் எழுதிய இராமாயணத்தில், அவையடக்கத்தில், தாம் எழுதுவதில் குற்றங்கள் இருப்பினும், கற்றறிந்த பெரியோர் அவற்றைப் பொறுப்பார்களென்று சொல்லுகிறார். அவர் இதனைக் கூற எடுத்துக்கொண்ட திருஷ்டாந்தங்களுள் இங்கே பொருத்தமான தொன்றை* எடுத்துக்காட்டுவோம்.

சிறு குழந்தைகள் பூமியில் கோடுகளைக் கீறி, இது ஒரு அறை, இது ஒரு மண்டபம், என்று வகுத்து

* "அறையும் ஆடரங்கும் மடப்பிள்ளைகள்
தறையிற் கீறிடில் தச்சரும் காய்வரோ"
(கம்பரா—பாலகாண்டம்)

விளையாடுவார்களானுல், சிற்பசாஸ்திரத்தில் வல்லுநரான நிபுணர்கள், 'இக்குழந்தைகள் வகுக்கும் அறைகள் முழுமையும் தவறு' என்று சொல்லி அவ்வாறு விளையாடும் பாலர்களைக் கோபிப்பார்களோ, என்பது மேற்கூறிய திருஷ்டாந்தத்தின் கருத்து.

ஆதலால், குழந்தைகள் வரைந்த உருவத்தில், நமது கண்களுக்குத் தெளிவாகப் புலப்படாத விஷயங்கள் அவர்களுக்குத் தெளிவாக இருப்பின், அதுவே நமக்குப் போதுமானது. இதைக்கொண்டு, சிறு குழந்தைகள் எழுதும் உருவங்கள் யாவும் தெளிவின்றியேயிருக்கும் என்றும், அவை பார்ப்பதற்கு அவலக்ஷணமாகவே இருக்குமென்றும் எண்ணிவிடவேண்டாம். குழந்தைகள் வரையும் உருவங்கள் கூட, அநேகம் சமயங்களில் பெரியவர்களுக்கும் விளக்கமாக இருக்கும். அவர்கள் தங்கள் கருத்துகளை ஒருவாறு சுலபமாகவே வரைந்து காட்டும் சக்தியுள்ளவர்களே. பாலர்களோடு பழகுபவர்களுக்கு இந்த உருவங்கள் முற்றிலும் விளங்காமல் இரா. பாலர்கள் வரையும் உருவத்தைப் பார்த்து அவர்கள் இன்ன கருத்துகளை வெளியிட்டிருக்கிறுர்கள் என்பதை உபாத்தியாயர் ஸ்தூலமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

ஆனுல், இப்படியெல்லாம் சித்திரம் வரைவதினுல் என்ன பிரயோசனம்? சிறு குழந்தைகளுக்குக் கோணல்மாணலாகக் கோடுகளைக் கீறிக்கொண்டு பொழுது போக்குவதில் விசேஷ பிரியம் இருக்கிறதென்று ஒப்புக்கொள்வோம்: அவர்கள் வீடுகளில் இம்மாதிரியே தரையில் மாக்கல்லினுல்

கிறிக்கொண்டிருக்கிறார்கள் அன்றோ? அப்படியிருக்க, இவற்றை நமது பள்ளிக்கூடங்களிலும் ஏன் நடத்தவேண்டும்? என்ற ஐயங்கள் தோற்றலாம். அவற்றை நன்கு புலப்படுத்துவோம்: சிறுபிள்ளைகள் மனமும் தேகமும் ஓயாத சலன சுபாவம் உள்ளவையென்று முன்னமே அறிந்திருக்கிறோம். ஆகையால், அவர்கள் ஒரே தன்மையான வேலையையே நெடுநேரம் செய்யமாட்டார்கள். ஆனதுபற்றி, வேலைகள் வெவ்வேறு வகையினவாயிருக்கவேண்டும். மேலும் அவர்களோ பென்சிலை எடுத்துக் காகிதத்தில் கோடுபோடுவதில் இயல்பாகவே மிக்க பிரியம் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் படம் வரைதலில் அவர்களுக்கு அவா இருக்கிறது. இதன் பயனை மிகவும் குறைத்துச் சொன்னால், அது குழந்தைகளுக்கு ஆனந்தத்தையாவது கொடுக்கும் என்று கூறலாம்; பள்ளிக்கூடத்தில் சந்தோஷமாகக் காலங்கழிக்கிறார்கள். இவ்வாறு வீட்டுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லாததனாலும், உபாத்தியாயரும் அவர்களிடம் பிரியமுள்ளவராக இருத்தலாலும், குழந்தைகள் தாமாகவே பள்ளிக்கூடம் போக ஆசைப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை அதட்டியும், அடித்தும், 'பள்ளிக்கூடம்போ' என்று கட்டாயப்படுத்தவேண்டிய அவசியம் இராது.

இப்படிச் சித்திரப்பாடம் மூலமாகப் பள்ளிக்கூடத்துக்குப் போவதில் இளம்பிள்ளைகளுக்கு விருப்பம் விழுவதே முதன்மையான பயன். ஆனால், இஃதொன்றுதான் இதன் பயன் என்றெண்ணுவது தவறு. இன்னும் முக்கியமான

பயன்களும் உள. சித்திரம் வரைவதனால் பிள்ளைகளின் அறிவு விருத்தியாகிறது. பிள்ளைகள் அறிவு விருத்தியாகவேண்டுமென்பதுதானே நமது நோக்கம். அந்த நோக்கம், இப்படி அவர்கள் சந்தோஷமாகப் பொழுதுபோக்கும் காரியங்களாலேயே பூர்த்தியாகின்றதன்றோ?

இவ்வாறு இளம்பிள்ளைகள் தாம் என்ன செய்கிறார்களோ அந்தத் தொழில் மூலமாகவே தமது அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்த உண்மையை உபாத்தியாயர் மறக்கக் கூடாது. வயது முதிர்ந்தவர்கள்கூட, தாங்கள் கேட்டவற்றையும் கண்டவற்றையும் தெளிவாக மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமானால், ஐயந் திரிபுகளைக் கவனித்துத் திருத்திக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறதல்லவா? செவியால் கேட்ட விஷயங்கள் ஞாபகத்தில் தெளிவாக ஊன்றி நிற்கவேண்டுமானால், கேட்கும்போதேனும், அல்லது, கேட்ட சிறிது நேரத்துக்குள்ளாகவேனும், அவற்றைக் குறிப்பாக எழுதி வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படி எழுதி வைத்துக்கொள்ளாத பக்ஷத்தில் கேட்ட எல்லாவற்றையும் பிறகு ஞாபகப்படுத்திக்கொள்ள முடியாமற்போகிறது. ஆனால் நேரே காணுகிற காட்சிகள் தெளிவாக உள்ளத்திற் பதிந்துநிற்க என்ன செய்கிறோம்? காட்சியை நேரே காணும்போதே சற்று கண்ணை மூடிக்கொண்டு, கண்ட விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள முயல்கின்றோம். பிறகு கண்ணைத் திறந்துபார்த்து, நாம் மனத்துள் கொண்டதில் உள்ள தவறுகளையும் குறைகளையும் திருத்தி

நீக்கிக்கொள்ளுகிறோம் அல்லவா? குழந்தைகள் செய்கையும் இதுபோன்றதேயாம். அவர்கள் ஒரு கதையைக் கேட்டபிறகு, அந்தக்கதையின் விஷயத்தைப் படமாக எழுத ஆரம்பிப்பார்களானால், அவர்கள் கேட்டறிந்த விஷயங்கள் அப்போது மனத்தில் தெளிவாகத் தோற்றமாகும். மனத்தில் எழுந்ததைப் படத்தில் விளங்கச் செய்கிறபோது, அந்தச் செய்கையே அவ்விஷயத்தை மனத்தில் ஆழமாகப் பதிக்கவும் உபயோகமாகிறது. இப்படி, உருவம் வரைதலில், குழந்தைகளின் இயல்புக்குணமாகிய ஓயாத சுருசுருப்பு கல்வி விருத்தியில் உபயோகமாகிறது. அதுவே அவர்களுக்குக் களிப்பையும் தருகிறது.

பாலர் வகுப்பில் சித்திரம் வரைதலின் பயன்கள் இம்மட்டோடு நிற்கவில்லை. அதன் பயன்கள் இன்னும் பலவுள. சித்திரம் வரைதலானது எவ்வாறு பிள்ளைகளின் அறிவுவிருத்திக்கு உபயோகமாகிறது என்பதை இதுகாறும் கூறினோம். இனி அது எவ்வகையில் உபாத்தியாயர் தொழிலுக்கும் உதவியாக இருக்கிறதென்பதை ஆராய்வோம்.

பாலர்கள் வரையும் சித்திரங்கள் உபாத்தியாயருக்கும் ஒருவகையில் உபயோகப்படும். இளம் பிள்ளையின் உள்ளம் ஒரு சிக்கலான வழி. அதனை உட்புகுந்தறிவதற்கு நேரான மார்க்கம் இல்லை. ஆனால் பாலர்கள் வரையும் உருவங்களைக்கொண்டு, அவர்கள் நாம் சொன்னவற்றை எப்படி உள்ளத்தில் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒருவாறு ஊகித்துத் தெரிந்துகொள்ளலாம். அப்போது, நாம் அவர்களுக்கு இன்னும் என்னசொல்ல

வேண்டும் என்பது விளங்கும். ஏற்கனவே சொல்லப்பட்ட விஷயங்களில் அவர்கள் தவருக மனத்துள் ஏற்றுக்கொண்டிருந்தவற்றை இதுமூலமாக அறிந்து, அப்படிப்பட்ட தவறுகளை உடனே திருத்த முடியும். நாம் சொன்ன விஷயங்களை வகுப்பில் பெரும்பாலார் ஏதோ ஓர் வகையில் சித்திரம் மூலமாகவும் தெரிவிக்க முடியாதவர்களாயிருந்தால், நாம் சொல்லிக்கொடுத்த முறையே சரியல்லவென்று நம்மை நாமே திருத்திக்கொள்ளலாம். ஒரே விஷயத்தைச் சில குழந்தைகள் ஒருவிதமாகவும், வேறு சில வேறு விதமாகவும் வரைந்து காட்டினுல், இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டியவை இவை என்பதும், இவற்றை வற்புறுத்திச் சொல்ல வேண்டியது அவசியம் இருக்கிறதென்பதும் புலப்படும். ஆனுல், குழந்தைகள் எல்லாரும் வரைந்த உருவங்கள், நாம் சொல்லிக்கொடுத்த விஷயத்தைச் சற்றேறக்குறைய ஸ்தூலமாகவேனும் காட்டுமானுல், அதுவே நாம் குழந்தைகளின் மனம் கொள்ளும்படி சொல்லியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியை நமக்குத் தரும்.

இதன்றி, பல குழந்தைகள், தனித்தனியே வரைந்த உருவங்களில், புதிதாகக் காட்டிய அம்சங்களாலும், வேறுபாடுகளாலும், அவரவர்கள் மனோதர்மம் விளங்கும். இதனுலும், அவர்களுடைய விருப்பங்களும், நுண்ணறிவும், தெளிவும், கற்பனு சக்தியும் புலப்படும்.

## (v) களிமண் வேலை

பாலர்கள் மனத்தில் உள்ள கருத்துகளை விளக்கிக் காட்டுவதற்கு, சித்திரம் வரைதல் என்னும்

பாடம் ஒரு முக்கியமான கருவியாக இருக்கிறதென் பதை மேலே விவரித்தோம். அதைப்போலவே இன்னும் வேறு கருவிகளும் இருக்கின்றன. அவற்றுள் அநேகர், களிமண் வேலை மிகச்சிறந்த தென்று அதைச் சிலாக்கியமான முறையாக எடுத் திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு குழந்தை யிடம் வெண்மையான காகிதத்தில், கருப்பு மசி யினால் வரையப்பெற்ற படம் ஒன்றையும், அந்த உருவத்தையே வர்ணங்களால் எழுதியுள்ள வேறொரு படத்தையும் காண்பித்தால், அது வர் ணப்படத்தையே அதிகமாக விரும்பும். அது போலவே உருவப்படத்தைவிட, உருவத்தையே கொடுத்தால், அது உருவத்தைத்தான் படத்தை விட அதிகமாக விரும்பும். உருவத்தைப் பார்க்கும் போது, நேரே அந்த வஸ்துவே இருப்பதுபோலத் தோற்றுவதால், குழந்தைகள் இயல்பாகவே உரு வங்களை விரும்புகிறார்கள். ஆகையால் நாம் சொல் லாமலே அவர்கள் உருவங்களைச் செய்துகொண்டு விளையாடுகிறார்கள். மண்ணினால் அம்மி, குழவி, பொம்மை முதலியவற்றைக் குழந்தைகள் அதிகப் பிரியமாகச் செய்துகொண்டு விளையாடுவதை நாம் பார்க்கிறோமே.

அவர்கள் கண்ணாற் கண்டதைக் கையாற் செய்ய முயற்சி செய்வார்களானமையால், சித்திரம் வரை தல்போலவே, இதுவும் அறிவை விருத்திசெய்யத் தக்கதாயிருத்தலோடு, சித்திரம் வரைதலைவிட, சில பாகங்களில் அதிக மேன்மையுள்ளதாயும் இருக் கிறது. களிமண்ணினால் ஒரு உருவத்தைச் செய்ய எத்தனிக்கும்போது, இரண்டு கைகளும் வேலை செய்

யும். இதனால் கைகள் இரண்டும் சமகாலத்தில் ஒத்துழைக்கும் சக்தியைப் பெறுகின்றன. கண்ணாற் பார்த்ததைக் கைகளாற் செய்வதால், வஸ்துவின் ஞானம் மனத்தில் ஊன்றிப் பதிகின்றது. கொஞ்சம் களிமண்ணைக்கொண்டு ஒரு உருவத்தைச் செய்ய ஆரம்பிக்கிறபோது, எந்தெந்தப் பாகத்துக்கு எவ்வளவு மண் வேண்டும் என்று எடுத்துக் கொள்வதில், உருவத்தின் பரிமாணத்துக்குத் தக்கபடி அங்கங்கள் வைக்கவேண்டியிருக்கிறது. இதனால் பரிமாணத்தை அறியும் ஆற்றலும் உண்டாகிறது. இப்படி அநேகம் விதங்களில் உபயோகமாக இருக்கிற களிமண்வேலையைப் பாலர்கள் செய்யுமாறு அவர்களுக்குச் சௌகரியங்களைக் கொடுக்கவேண்டும்.

சிலவிடங்களில் களிமண் சுலபமாகக் கிடைக்கலாம். வேறு சிலவிடங்களில் களிமண்ணை விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டியிருக்கும். அன்றியும் பிள்ளைகளைக் களிமண் வேலையைச் செய்யச் சொல்லி அந்த வேலை மூலமாக அவர்கள் அறிவை இப்படி விருத்தி செய்யலாம் என்பதைக் கவனிப்பதன்றி, மற்றப் பாடங்களுக்கும், குழந்தைகளின் பருவத்துக்கும் ஏற்றவாறு இந்த வேலைன்யக் கற்பிக்கவேண்டும்.

பார்த்தால் விளையாட்டுபோலவும், ஆனால் இதர பாடங்களுக்கும் உபயோகமாகவும், களிமண்வேலையை நடத்துவதற்கு உபாத்தியாயர் நன்றாக யோசனை செய்யவேண்டும். ஆகையால், செலவை உத்தேசித்தாயினும், அவ்வேலையைத் திருப்திகரமாக நடத்துவதன் பிரயாசையை உத்தேசித்தா

யினும் களிமண்வேலையை நடத்தாவிட்டால், குழந்தைகளுக்கு, சித்திரம் வரைதலேயன்றி கல்விக்குச் சம்பந்தமான வேறு விளையாட்டுகளும் வேண்டியிருத்தலால், பிறிதோர் உபாயத்தை விவரித்துக் கூறுவோம்.

## மணல் தட்டுகள்.

மணலில் விளையாடக் குழந்தைகளுக்கு அதிகப் பிரியம் உண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகையால் பள்ளிக்கூடத்துக்குச் சமீபத்தில் கொஞ்சம் மணலைக் கொட்டிவைத்து, அதில் விளையாட்டாக, கோடுகள் முதலியன போடச் சொல்லலாம். அல்லது பிள்ளைகளை அதில் விளையாடவிடலாம். எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களோ அத்தனை தட்டுகள் வாங்கி ஒவ்வொன்றிலும் கொஞ்சம் மணலைக் கொட்டிவைத்து, ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒரு தட்டு கொடுத்தால், குழந்தைகள் அந்தத் தட்டில் ஈர்க்குச்சியால் ஏதாவது வரைந்து விளையாடுவார்கள். இது, பொழுது போக்காகவும், உபயோகமாகவும் இருக்கும்.

இப்படி ஆரம்பத்தில் குழந்தைகளின் மனப் போக்கையும் அவர்களுடைய சுபாவகுணங்களையும் அறிந்து, அவர்களுக்குத் தக்கவண்ணம், விளையாட்டுகள் மூலமாகவே கல்வி கற்பிக்கவேண்டும். இன்ன இன்ன முறைகளால், பருவத்துக்கேற்றபடி, குழந்தைகளுக்கு எண், எழுத்து, இயற்கைப்பாடம், கதை, கைப்பணி முதலியவற்றை உபாத்தியாயர் கற்பிக்கவேண்டும் என்ற விஷயத்தை எடுத்துக்கூறும் முறையைத்தான் 'கிண்டர்கார்ட்டன் முறை' என்று சொல்லுகிறார்கள்.

## (vi) வகுப்பின் ஒழுங்கு

இதுவரையில் குழந்தைகளின் இயல்பான குணங்களை விவரித்தமட்டில் உபாத்தியாயர் தம் மனத்தில் பதித்துக்கொள்ளவேண்டிய முக்கியமான எச்சரிக்கை ஒன்றுண்டு. ஓயாமல் இப்படியும் அப்படியும் இயங்கிக்கொண்டிருப்பதும், சலிப்பில்லாத சுருசுருப்பும், குழந்தைகளின் சுபாவகுணங்கள் என்று தெரிந்துகொண்டோம்; அவர்கள் மனமும் ஒரு நிமிஷம் எதிலே சென்றிருக்கிறதோ, அதிலேயே மறு நிமிஷம் நிலைத்திருக்காத தன்மையுள்ளது என்பதையும் அறிந்துகொண்டோம்; ஆகையால் மாறிமாறி இயங்குவதே பிள்ளைகளின் சுபாவம் என்று நாம் எதிர்பார்க்கவேண்டும். அது பற்றி, அவர்களுக்கு எந்த வேலையைக் கொடுத்தபோதிலும் சரி, என்ன பாடத்தைச் சொல்லிக்கொடுத்தாலும் சரி, அவர்கள் மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றில் வெகு விரைவாகத் தாவிச் சென்றுவிடும் என்ற உண்மையை உபாத்தியாயர் ஒருபோதும் மறக்கக்கூடாது.

ஆனால், குழந்தைகளின் சுபாவமே இப்படியிருக்கிறபோது, அவர்கள் வகுப்பில் உட்கார்ந்திருக்கும்போது சும்மா இருப்பார்களா? அவர்களை எப்படி ஒழுங்காக இருக்கச்செய்து, பிறகு பாடங்களைச் சொல்லமுடியும் என்று உபாத்தியாயர் ஆலோசிக்க வேண்டியதில்லை. வகுப்பில் உள்ள பிள்ளைகள் அமைதியாகவும் சத்தம் போடாமலும் உட்கார்ந்துகொண்டு, பாடங்களைக் கவனித்துக் கேட்க வேண்டுமென்றே உபாத்தியாயர் முயற்சி செய்ய வேண்டியது. வகுப்பை இப்படி ஒழுங்காக நடத்

திப் போதிப்பது அதிகக் கடினமுமன்று. சொல்லும் விஷயங்கள் ருசிகரமாக இருத்தல்வேண்டும். ஒன்றையே நீடித்தநேரம் நடத்திக்கொண்டிருக்கக் கூடாது. தொழில்களும் அடிக்கடி மாறிமாறி வர வேண்டும். அவை வெவ்வேறு வகையினவாகவும் இருத்தல்வேண்டும். இந்தப் பிரகாரம் கால அட்டவணையை ஒழுங்குபடுத்திக்கொண்டு நடத்தினால், குழந்தைகள் உற்சாகமாகவும் கவனமாகவும் பாடங்களைக் கேட்பார்கள். சத்தம் செய்யமாட்டார்கள். கீழ்ப்படிந்து சொன்னவண்ணம் செய்ய முந்துவார்கள். உபாத்தியாயரும் உற்சாகமாக இருக்கலாம்; சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது ஒரு பெரிய பாக்கியமே என்று எண்ணுவார். அது 'பெருந்தொல்லை'யாகத் தோற்றாது.

எல்லாரும் பேசாமல் உட்கார்ந்திருக்கவேண்டும் என்று பன்முறை கேட்டுக்கொண்டால், பாலர்கள் அப்படியே இருப்பார்கள் என்றுமாத்திரம் உபாத்தியாயர் நினைக்கலாகாது. வகுப்பில் பிள்ளைகளின் கவனத்தை அவ்வளவு சுலபமாக அடைய முடியாது.

"டுஷ், பேசாதே!"

"இளங்காளி, சும்மா உட்கார்ந்திரு!"

"குப்பண்ணு, இப்படி அப்படி அசையாதே!"

"அம்மாயி, நீ பேசாதிருக்கமாட்டாயா?"

"அடே, நீ என்ன அந்தப் பக்கம் பார்க்கிறாய் இப்படித் திரும்பியிரு!"

"சுந்தரம்! நிமிர்ந்து உட்கார்!"

என்றவைபோன்ற கட்டளைகளை அடிக்கடிப் பிறப்பிக்கும் உபாத்தியாயர் தமக்கு வகுப்பை அடக்கி

ஆளுந்திறமை யில்லையென்பதை எல்லாரும் அறி யத் தம்மைத் தாமே தூற்றிக்கொள்வதை யொக் கும்.

இதற்கு ஓர் உதாரணந் தருவோம். இரண்டு வகுப்புகளில் இரண்டு பேர் உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். ஒரு வகுப்பில் ஒரே இரைச்சலாய் இருக்கிறது. பிள்ளைகள் எல்லாரும் ஏதோ ஒவ் வொரு வகையில் தமக்கேற்றவாறு சுருசுருப்பா கவே இருக்கிறார்கள்; அண்டையிலுள்ளவர்களின் உடை, தலைபின்னல், புத்தகம் முதலியவற்றைத் தொட்டும், எடுத்தும், பார்த்தும், இப்படியும் அப் படியும் தேகத்தை முறுக்கிக்கொண்டும் ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டும், குனிந்து மறைவாகச் சிரித்துக்கொண்டும் இருக்கிறார்கள். உபாத்தியா யரும் உரத்த குரலிலேயே ஏதோ ஒரு பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் என்ன உரக்கக் கத்தினாலும், அவர் நடத்துகிற பாட்த்தில் பிள்ளை களுக்குச் சிறிதும் கவனமே இல்லை. இப்படி யிருக்கையில், அவர் கடுகடுத்துப் பார்க்கிறார்! மேஜையைக் கையாற் புடைக்கிறார். மிக்க கோபம் கொள்ளுகிறார். சடக்கென உரத்த குரலில் ஒருவனைக் கூவித் திட்டுகிறார்! அந்தச் சமயம் சற்று நேரம்வரையில் அவ்வகுப்பில் கூக்குரலின்றி யிருக் கிறது. ஆனால் சற்றுநேரமே. சிறிதுபொழுதுக் கெல்லாம் மறுபடியும் முன்போலவே சத்தமும், கவனக்குறைவும் தலை நிமிர்ந்து நிற்கின்றன. இப் படிச் செய்யாதே! அப்படிச் செய்யாதே! என்று இடைவிடாமல் கூறுவதனால் பயனில்லை என்பதற்கு இது திருஷ்டாந்தம்.

மற்றொரு வகுப்பிலோ இப்படிப்பட்ட கஷ்டங்களைக் காணோம். அந்த வகுப்பு அமைதியாக இருந்ததற்குக் காரணம் என்ன? பிறகு பிள்ளைகள் இப்படியிருக்கக்கூடும் என்பதை முன்னாடியே எதிர்பார்த்த உபாத்தியாயர் அதற்கு ஏற்றவாறு ஏதேனும் அணை கோலி வைத்திருந்தாரா? இல்லை. ஆனால் அவரிடம் படிக்கும் பிள்ளைகள் அவர் சொல்வதைக் கவனிக்கிறார்கள். வேறு எதையாவது கவனிப்போம் என்ற எண்ணமே அவர்களுக்கு உண்டாகவில்லை. ஏன்? பிள்ளைகளின் மனத்தின் சக்தி இவ்வளவு என்பதை அறிந்த அந்த உபாத்தியாயர், அவர்கள் எளிதில் அறிந்துகொள்ளும்வண்ணம் தகுதியான முறையில் போதிக்கிறார். அவர் ஒரே பாடத்தை நெடுநேரம் நடத்துவதில்லை. நீடித்த நேரம் ஒன்றையே கவனித்துக்கொண்டிருப்பது, பிள்ளைகளின் தேக தத்துவத்துக்கும் மனோ தத்துவத்துக்கும் மாறானது என்ற உண்மையை உணர்ந்து, சிறிது காலமே ஒரு பாடத்தை நடத்துகிறார். அநேக விஷயங்களைச் சிறுவர் மனம் கொள்ளும் வண்ணம் வெவ்வேறு வகைகளிற் சொல்லுகிறார். அவர்கள் கவனம் பிறிதொன்றிற் செல்லுகிறது என்பதை ஜாடையாகக் கண்டறிந்தவுடன், கற்பிக்கும் முறையை மாற்றுகிறார். ஒரே நிலையில் நெடுநேரம் உட்கார்ந்திருப்பது பிள்ளைகளுக்கு அசௌகரியமாக இருக்கும் என்பதை அறிந்து, அவர்கள் இயல்புக்குத் தகுந்தபடியே, ஓய்வுக்கும் புடைபெயர்ச்சிக்கும் இடம் கொடுக்கிறார். அவர்களைப் பாங்கன் போலப் பாவித்து நடத்திக்கொண்டு போகிறார்.

அவர்களை முன்னே போகச்சொல்லித் தாம் பின்னே நின்று துரத்தவில்லை, அதட்டவில்லை.

உபாத்தியாயர்கள் இப்படிப் பிள்ளைகளைப் பாங்கன்போலக்கொண்டு நடத்தவேண்டுமேயன்றி ஓர் எஜமானன்போல, பின்னே நின்று துரத்திக்கொண்டு போகக்கூடாது. பாங்கன்போலவேயிருந்து பிள்ளைகளை நடத்திக்கொண்டு போகும் உபாத்தியாயர்தான் சிறந்தவர். அதட்டுபவரால் பிள்ளைகளின் கல்வி விருத்தியாகாது. ஆனால் இப்படிப் பிள்ளைகள் மனப்போக்கையொட்டி நடத்தும் சக்தியை ஒரேநாளில் பெற்றுவிடலாம் என்று எண்ணக்கூடாது. முயற்சியாலும், பழக்கத்தாலுமே இந்த சக்தி ஏற்படும். அந்த சக்தியை அடைய வேண்டும் என்பதே உபாத்தியாயர் நோக்கமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சக்தி உண்டாகும்வரையில், தன் குற்றத்தைப் பிள்ளைகள்மீது சாட்டக்கூடாது.

என்ன, இஃது ஓர் விந்தையாயிருக்கிறது! நம்மிடம் படிக்கும் சிறுவர்களை நாம் அதட்டாமல் வேறு யார் அதட்டுவார்கள்! இதைச் செய்! இதைச் செய்யாதே! என்று கண்டிக்கக்கூடாதா! என்று இவற்றை உதாசினமாக யோசிக்கவேண்டாம். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதிலேயே தமது வாழ்நாளைக் கடத்திய ஆசிரியச் சிரோமணிகள் பிள்ளைகளை அதட்டியும், கண்டித்தும், உரப்பி எவியும் பாடம் சொல்வதினும் தவறு வேறெதுவுமில்லையென்று பன்முறை அறைந்துள்ளார். சில் சமயம் வகுப்பில் உட்கார்ந்துள்ள பாலர்கள் இப்படி அப்படி அசைவதும், தேகத்தை முறுக்கு

வதும் அவர்கள் குற்றமன்று. அவை, அவர்கள் அயர்ந்திருப்பதைக் காட்டும் குறிகளாம். இல்லா விட்டால், ஏற்கனவே செய்துகொண்டிருந்த வேலை யிற் பிரியம் இல்லை என்பதைக் காட்டும் குறி. அதனை அறிந்து தொழிலை மாற்றவேண்டும். வேறு வேலையைக் கொடுக்கவேண்டும். அவர்கள் அவ் வாறு செய்வதைக் கண்டு அந்த அந்தச் சந்தர்ப்பத் தைக் கவனித்துத் திருத்தவேண்டும். இப்படியப் படி அசைவது அவருடைய குற்றம் என்று கண் டிக்கக்கூடாது. அப்படி ஏற்பட்டபோது, 'சும்மா இரு' என்று உரப்பி அடக்குவதிற் பயனில்லை. உரப்பி அடக்காமல், வேறொன்றில் அவர்கள் புத்தி யைச் செலுத்துவதே சிறந்த முறை.

T (7117)
N31
148757

## அத்தியாயம் 5

# கதை சொல்லுதல்

இதுவரையில், குழந்தைகளின் இயற்கைத் தன்மைக்கும் சுபாவமான மனப்போக்குக்கும் விரோதமில்லாமல், அவற்றை அனுசரித்தே, விளையாட்டுகள் போலவே சில வேலைகளைக் கொடுத்து, அவர்கள் அறிவைச் சுலபமாக விருத்திபண்ணக்கூடிய சில உபாயங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டுவந்தோம். இப்படி எடுத்துரைத்த உபாயங்கள், பல வித்வச் சிரோமணிகளும் குழந்தைகளின் மனோதத்துவத்தை நன்கறிந்த நிபுணர்களும், அனுபவசித்தமாகக் கைகண்ட போதனாமுறைகளாகும். இவை ஏதோ சூழ்ச்சிகளென்று எண்ணக்கூடாது; எஜமானன் தயவை எப்படியாகிலும் சம்பாதிக்கவேண்டும் என்ற உத்தேசம் உள்ள வேலைக்காரன் அடிக்கடி எஜமானனுக்குப் பிரியமான கையுறைகளை ஏந்திச் சென்று அவர் முன்னின்று, முகமன் கூறியும், புகழ்ந்தும், இச்சகம் பேசியும், அவரை எப்படி வசீகரிக்க முயற்சி செய்வானோ, அப்படியே, உபாத்தியாயர் குழந்தைகளைத் தம்வசம் கொண்டுவருவதற்கு இவை சில சாதனங்கள்போல உள்ளனவென்று நினைக்கக்கூடாது. இந்தப் போதனாவழிகள் தந்திரங்கள் அல்ல. போலி முறைகள் அல்ல. அவை, உண்மையில் குழந்தைகளைக் கல்வியில் விரைவாகவும் சிரமமில்லாமலும் அபிவிருத்தியடையச் செய்யும் முறைகளேயாகும். குழந்தைகளின்

அறிவை விருத்தி செய்யவேண்டும் என்பது நமது நோக்கம். நன்ருக ஆலோசித்துக் குழந்தைகளின் சக்திக்குத் தக்கவாறும், நமது உத்தேச பாடங் களுக்குப் பொருத்தமானவாறும், இந்த முறைகளை உபயோகித்தால், இந்த நோக்கம் நிச்சயமாகக் கைகூடும்.

சிறு குழந்தைகளின் அறிவை வளர்க்கவும், அவர்கள் ஒழுக்கத்தைச் சீர்படுத்தவும், அவர்களைச் சீலமுள்ள நன்மக்களாக வாழும்படிக் கற்பிப்பதற் கும் சிறந்த வழி எது? நாம் சொல்லிக்கொடுக்கும் பாடங்களேயாகும். சிறு பிள்ளைகளுக்குப் பாடங் களை எப்படிப் போதிக்கலாம்? அவர்களுக்குக் கதை சொல்லவேண்டும். ஆவின்பால் எப்படி அவர் கள் தேகத்தை வளர்க்குமோ அதைப்போலவே, நல்ல கதைகள் அவர்கள் மனத்தை வளர்க்கும்.

பாலர்வகுப்புத் தொடங்கியே வாசிப்பு, எழுத்து, கணக்கு என்ற மூன்று முக்கியமான பாடங்களும் நடக்கவேண்டும் என்று நிச்சயித்து, இவை மூன் றையும் கற்பிக்க ஆரம்பிக்குமுன்னே, எந்த வேறு அம்சங்கள் இவற்றுக்கும் அஸ்திவாரமாக இருக் கின்றன என்பதை யோசிக்கவேண்டும். குழந்தை களின் தன்மையைக் கவனிப்போமானுல், அவர்கள் முதலில் தாமாகப் பேசவும், பிறர் சொல்வதைக் கேட்கவும், பழகவேண்டும் என்பது தெளிவாகும். குழந்தைகளோடு பேசிப் பேசியே அவர்கள் அறிவை விசாலப்படுத்தவேண்டும். அவர்களை வாசிக்கச் சொல்வதற்கு முன்னே, அவர்களுக்குச் சொற்பழக்கம் உண்டாகும்படி செய்யவேண்டும். வார்த்தை பேசவும், சொல்வதை அமைதியாகக்

கேட்டுத் தெரிந்துகொள்ளவும், தெரியாதவற்றைக் குறித்து வினவவும், அவர்களைப் பழக்கவேண்டும். பேசுதல், கேட்டல், வினவுதல் என்ற இவை மூன்றும் வாசிப்பு, எழுத்து, கணக்கு என்ற மூன்று பாடங்களுக்கும் அடிப்பீடங்களாக உள்ளன என்று முன்னே கூறியுள்ளோம். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்ற ஆன்றோர் வாக்கியம் இந்த உண்மையை வலியுறுத்துகிறது.

சிறு பிராயந்தொடங்கி, நன்றாகப் பேசப் பழகுவதும், அநேகம் சொற்களையும் அவற்றின் பொருளையும் ஐயந்திரிபறத் தெரிந்துகொள்வதும் பிற்காலத்தில் உலகவாழ்க்கையில் நிரம்ப உபயோகமாக இருக்கின்றன. குழந்தைகளின் சுபாவம் என்ன? பெரியவர்கள் பேசும் இடத்தில் வந்து நின்றுகொண்டு அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கப் பிரியப்படுவார்கள். எதையும் ஆச்சரியத்தோடும் ஆசையோடும் உற்றுப்பார்க்கும் இயல்புள்ளவர்களானமையால், நாம் பேசுவதையும் ஆவலுடன் உன்னிப்பாய்க் கேட்பார்கள். பார்த்தது போலவே செய்வதில் இயற்கையான பிரியமும் சக்தியும் உள்ளவர்களானமைபற்றி, நாம் பேச அவர்கள் கேட்ட விஷயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, நாளடைவில் திருப்பிச் சொல்லுதல் அவர்களுக்குச் சாத்தியமாகிறது. அநேகம் வீடுகளில், பேசும் பாஷையும், உபயோகிக்கும் சொற்களும், சொல்லும் விஷயங்களும் மிகச் சொற்பமாக இருக்கலாம். ஆதலால் அநேகம் பிள்ளைகளுக்குத் தெரிந்துள்ள சொற்களும் மிகவும் கொஞ்சமாகத்தான் இருக்கும். அவர்களோடு சம்பாஷணை செய்தால்தான்

அவர்கள் சொல்லும் வார்த்தைகள் இவற்றைக் குறிக்கின்றன என்பதும் விளங்கும்.

அவர்களுடைய வார்த்தை ஞானத்தை விருத்தி செய்வதற்கு, பல விஷயங்களைப்பற்றி அவர்களோடு சம்பாஷிக்கவேண்டும். அப்படிப்பட்ட சம்பாஷணைகளைக் கதைகள் மூலமாக நடத்துவது சிறந்த முறை. கதை சொல்லுவதைக்காட்டிலும் சம்பாஷணைக்கு மிக்க உதவியாகவுள்ள உபாயம் வேறொன்று இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏனென்னில் கதைகளைக் குழந்தைகள் பிரியமாகக் கேட்பார்கள். கதை சொல்லுகையில் அநேகம் விஷயங்களை விவரிக்கவேண்டியிருக்கும். குழந்தைகள் சுலபமாகத் தெரிந்து கொள்ளும்படி அவற்றைச் சொல்லும் போது, நாம் உபயோகிக்கும் வார்த்தைகளை அவர்கள் கவனமாகக் கேட்பார்கள்; அந்த வார்த்தைகள் அவர்களுக்கு அர்த்தமாகும். குழந்தைகள் கேட்டுச் சந்தோஷிக்கும்படியாகக் கதைகளைச் சொல்லுவதற்குப் போதிய சாமர்த்தியம் வேண்டும். வேடிக்கையான கதைகள் குழந்தைகள் மனத்தைப் போஷிக்கும் என்று முன்னே சொன்னோம்.

ஆதலால் அவர்கள் பிரியமாகக் கேட்டுணரும் படியாகக் கதையைச் சொல்லவேண்டும். இப்படிக் கதையைச் சொல்லும் சக்தி குழந்தையின் தாயாரிடத்தில் இயல்பாகவே அமைந்திருப்பதைக் காணலாம். தாயார் குழந்தையோடு வெகு மதுரமாகச் சம்பாஷணை செய்வாள். தாயாரைப்போலவே சம்பாஷிக்கவும் கதை சொல்லவும் தங்களுக்கு முடியுமா, என்று உபாத்தியாயர்கள் யோசிக்கவேண்

14875

டியதில்லை. கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டால், குழந்தைகளுக்கு இனிமையாகக் கதைகளைச் சொல்லலாம். கதைகளை இப்படிச் சொல்லலாம் என்று இங்கே இனி விவரிக்கப்படும் முறைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால், எந்த உபாத்தியாயரும் படிப்படியாகத் தமக்குக் குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதில் சக்தி வளர்ந்து வருவதைத் தாமே கண்டுகொள்ளலாம்.

கதை சொல்லும் விஷயமாக உபாத்தியாயர் கேட்கக்கூடிய முதலாவது கேள்வி, 'நான் எந்த கதையைச் சொல்லலாம்?' என்பதே. இதற்கு உத்தரம் நாம் கூறவேண்டியதில்லை. பிள்ளைகளின் சுபாவகுணத்தைக் கவனிப்போமானால், எப்படிப்பட்ட கதைகள் அவர்களுக்குப் பிரியமாக இருக்கும் என்பது விளங்கும். இயல்பாகவே சுருசுருப்பாக உள்ளவர்களான குழந்தைகள் பிறரிடமும் சுருசுருப்பைக் குறிக்கும் செய்கைகளையே விரும்புவார்கள். கதையில், எவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் குறித்து அவர்கள் அவ்வளவாகக் கவனிக்கமாட்டார்கள். அல்லது, யார் என்ன எண்ணுகிறார் என்பதிலும் அவர்கள் மனம் செல்லாது. ஆனால் யார் என்ன செய்கிறார் என்பதே, அவர்கள் முழுமனத்தையும் கவரும். ஆதலால் செய்கை நிரம்பிய கதைகளே அவர்களுக்கு உருசியாக இருக்கும்.

அப்படிப்பட்ட கதைகளைச் சொல்லும் உபாத்தியாயர் முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்றுண்டு: கதை சொல்லும்போது,

ஒவ்வொரு செய்கையையும் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.[1]

இனி, கதையைச் சொல்லும்போது எப்படிப் பட்ட பாஷைநடையிற் சொல்லலாம் என்பதை யோசிக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கதை சொல்லும்போது மிகச் சுலபமான வார்த்தைகளையே உபயோகிக்கவேண்டும். பாஷை கடினமாக இருக்கக்கூடாது. ஆனால் சுலபமாக இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்து, 'குழந்தைப் பாஷையாகவே[2] பேசவேண்டும் என்று எண்ணக் கூடாது. 'குழந்தை பேசும்போது இப்படித்தானே பேசுகிறது, அதனால் அந்தப்பிரகாரம் பேசினால் தானே அது அறிந்துகொள்ளக்கூடும்' என்று

---

[1] உதாரணம்:—ஒருநாள் ஸ்ரீ உமாதேவியாரும் சிவபிரானும் சிம்மாஸனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் குழந்தைகளாகிய விநாயகரும் குமாரனும் அங்கே விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிவபிரான் கையில் ஒரு பெரிய மாம்பழம் வைத்துக்கொண்டிருந்தார். விநாயகர், 'அதை எனக்குக் கொடு' என்றார்; குமரன், 'எனக்குத் தா' என்றார். அப்போது பரமசிவன், 'நீங்கள் ஓட்டமாக ஓடிப் பூமி முழுதையும் சுற்றி வாருங்கள். யார் முன்னே வருகிறாரோ, அவருக்கு இந்த மாங்கனியைத் தருவேன்' என்றார். உடனே குமரன் எழுந்து பூமியைச் சுற்றிவரச் சென்றார். விநாயகரோ, இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தார். கொஞ்சம் நாழிகைக்கெல்லாம் குமரன் பூமியைச் சுற்றிவிட்டு வேகமாக ஓடிவருவதை விநாயகர் பார்த்து, அப்போதே மெல்ல எழுந்து பார்வதிதேவியையும் பரமசிவனையும் ஒரு முறை சுற்றிவந்து, 'உங்களைச் சுற்றினால் பூமியைச் சுற்றிவந்த பலன் ஆயிற்றே' என்று சொன்னார். அவரிடம் பரமசிவன் அந்த மாம்பழத்தைக் கொடுத்துவிட்டார்.

[2] 'ஒரு மடத்திலே ஒரு காக்கா ஒக்காந்து இக்கச்சே' என்ற விதமான பாஷையை உபயோகித்துக் கதை சொல்லக்கூடாது.

நினைத்து, மழலைச்சொற்களை உபயோகித்துக் கதையைச் சொல்லக்கூடாது. குழந்தைகளின் மழலைச் சொற்கள் பெரியோர்கள் காதுக்குக் குளிர்ச்சியாய் இருக்கும். சிறு மக்களின் 'பால்வாய்ச்சிறு குதலை'[1] களைக் கேளாதவர்கள் தாம் செவி படைத்ததன் பலனைப் பெறுதவர்கள் என்றும், 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள், மழலைச்சொற் கேளாதவர்'[2] என்றும், 'கல்லாமழலைக் கனியூறல்'[3] என்றும், குழந்தைகளின் மழலை மொழிகளைக் கவிகள் எவ்வளவோ பாராட்டியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் குழந்தைகள் இந்த மழலைச் சொற்களை இப்படி ஏன் பேசுகிறார்கள் என்பதைச் சிறிது ஆராய்வோம். தண்ணீரில் நீந்துவதற்கு முதன்முதல் பழகுபவன் நீந்தும் விதத்துக்கும், பிறகு அவனே, நன்றாகத் தேர்ச்சியடைந்த பிறகு நீந்துகிற ஒழுங்குக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். முதன்முதல் நீந்தும்போது பெரியவர்களைப்போலவே தானும் நீந்தவேண்டும் என்றே முயற்சி செய்கிறான். ஆனால் பலமுறை முயன்று பழகப் பழகத்

---

[1] 'சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.' நளவெண்பா, 244.

[2] திருக்குறள், 66.

[3] 'கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ் வினினிமை யென்னும்'
வில்லிபாரதம்—ஆதிபருவம்—சம்பவச்சருக்கம், 59.

தான் திருத்தம் அடைகிறான். அதுபோலவே, குழந்தைகள் பெரியோர்கள் பேசுவதைக் கேட்டுத் தாமும் அவர்களைப் போலவே பேச விரும்புகிறார்கள். ஆனால், முதலில் திருத்தமாகப் பேச வராது: அவர்கள் அவ்வாறு திருத்தமில்லாமல் பேச முயலும் வார்த்தைகளே மழலைச் சொற்களாம். பழகப்பழக அவர்கள் மழலை திருந்தி நன்றாகப் பேச ஆரம்பிப்பார்கள். ஆகையால் நாம் திருத்தமாகப் பேசினால், அவர்களுக்கு அந்தச் சொற்கள் நன்றாக விளங்கும். அவர்கள் கூறும் மழலை மொழிகளை நாம் உபயோகித்தால், அவர்கள் சிலசமயம் தங்களைப் பரிகாசம் செய்கிறதாகக்கூட நினைத்து பிறகு கதை கேட்கவும் பிரியப்படமாட்டார்கள்.

நாம் சொல்லும் வார்த்தைகள் நன்கு விளங்கினாலும், அவற்றையே அவர்கள் திருப்பிச் சொல்லும்போது திருத்தமில்லாமல் மழலை மொழிகளில் தான் பேசுவார்கள். ஆனால், அவர்கள் நாம் சொன்னதைத் தெரிந்துகொள்ளமாட்டார்கள் என்று எண்ணக்கூடாது. இவ்வாறே, அவர்களுக்கு ஏதாவதொரு சங்கதி தெரிந்திருக்கலாம். ஆனால் அதைப் பற்றிப் பேசத் தெரியாமலிருக்கும். விஷயஞானம் இருக்கும்; அதை விளக்கக்கூடிய வார்த்தைஞானம் இல்லாமையால் அவர்கள் பேச்சில் அந்த விஷயங்கள் வரவில்லை என்று நினைக்கவேண்டும்.

இவற்றை ஆராயுங்கால், குழந்தைகளுக்குக் கதை சொல்வதில் உபயோகிக்கும் வார்த்தை, எடுத்துக்கொண்ட விஷயம், ஆகிய இவ்விரண்டிலும், அவர்களுக்குத் தகுந்தவாறு அவ்வளவு எளிதாகச் சொல்ல இயலவில்லையே என்று உபாத்தி

யாயர் வருந்தவேண்டாம் என்பது புலப்படும். அவர் நோக்கம் பிள்ளைகளின் அறிவை விருத்தி செய்யவேண்டியதேயாதலால், ஒவ்வோரிடத்தில், அவர்கள் புத்திக்கு எட்டாத பதங்களும் விஷயமும் இருக்குமாளுலும், அதனல் குற்றமில்லை. எப்போதும் நிரம்ப எளிதாகவே சொல்லவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. சில வேளைகளில் குழந்தைகளுக்கு எட்டாதபடி, பதமும் விஷயமும் இருந்தாலும் அது தவறல்ல. எனினும், கூடியவரையில், அவர்கள் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்களையே, சுலபமான சொற்களை உபயோகித்துச் சொல்லவேண்டும். இதுவே சிறந்த விதி. எதாவதொரு சமயம் சொற்கள் சுலபமாக விளங்கக் கூடாமலிருந்தால் தவறில்லை என்பதே இங்கே உணரத்தக்கது.

எளிதாகவே கதையைச் சொல்லுகிருேமா, அல்லது பிள்ளைகள் மனதுக்கு எட்டாதபடியே சொல்லிக்கொண்டு போகிருேமா, என்ற சங்கதியை உபாத்தியாயர் தாமே தெரிந்துகொள்ளலாம். ஒரு கதையைச் சொல்லுகையில், உபாத்தியாயர் உட்கார்ந்து அதைச் சொன்னுலும், அல்லது, நின்று கொண்டு சொன்னுலும், அவர் கண்கள் குழந்தைகளைப் பார்த்தவண்ணம் இருக்கவேண்டும். பேச ஆரம்பித்தவுடன் சிலர் கண்ணை மூடிக்கொள்வார்கள். இந்த வழக்கம் உள்ளவர்கள் அதைச் சீக்கிரத்தில் மாற்றிக்கொள்ளவேண்டும். கதையைச் சொல்லும்போது வகுப்பில் உள்ள குழந்தைகளை நேரே பார்த்துக்கொண்டே சொன்னுல், குழந்தைகளின் கண்கள் அவர்கள் மனத்தின் தெளிவு அல்லது

தெளிவின்மையை நன்ருகத் தெரிவிக்கும். 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றபடி, உபாத்தியாயர் பேசுவது பிள்ளைகளுக்கு விளங்கினுல், அவர்கள் கண்களும், முகமும், கதையைக் கேட்பதில் உள்ள ஊக்கமும், அவர் தெளிவாகச் சொல்லுகிருர் என்பதைப் புலப்படுத்தும். இவற்றைக் கவனித்துக் கொண்டே கதை சொல்லும் உபாத்தியாயர் தாம் சொல்லும் கதையில் எந்த இடத்தில் பிள்ளைகள் நன்ருக அறிந்துகொள்ளவில்லை என்பதை உடனே கவனித்துக்கொள்ளலாம். அப்போது ஒரு வார்த்தையின் பொருளைச் சொல்லி விளக்கலாம். அல்லது, முன்னே சொன்னதை இன்னும் ஒருமுறை நன்ருக விளங்கும்படி சொல்லலாம். அல்லது, இது பிள்ளைகளுக்குக் கடினமாக இருக்கலாம் என்பதை ஊகித்தவுடன், அதனை இன்னும் எளிதாகப் புலப்படுமாறு சொல்லலாம்.

புதிய வார்த்தைகளையேனும், அல்லது, நூதன விஷயங்களையேனும், முதன்முதற் பிள்ளைகளுக்குச் சொல்லும்போது, அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்துள்ளவற்ருேடு அவற்றைத் தெளிவாகச் சம்பந்தப்படுத்தி அவர்கள் அவற்றை நன்ருக அறிந்து கொள்ளச் செய்யவேண்டும். முன்பு தெரிந்ததைக் கொண்டே பின்பு தெரியாத விஷயத்தைக் கற்பிக்க வேண்டும். உதாரணமாக, 'அரண்மனை' என்ற வார்த்தையை முதல் தடவை உபயோகிப்பதற்கு முன்னே, பிள்ளைகள் பார்த்திருக்கக்கூடிய பெரிய வீடுகள் இவை என்று அவர்களிடமே கேட்டறிந்து, 'அரண்மனை' அந்த வீடுகளைப்போலன்றி, இப்படியிருக்கும் என்பதைச் சொல்லவேண்டும். ஏதாவ

தொரு முக்கியமான வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவரையில் கதையில் உருசி ஏற்படாது.

இதுவரையில், கதை சொல்லும்போது இப்படிப் பட்ட சொற்களை உபயோகிக்கவேண்டும் என்பதைப்பற்றிக் கூறினோம். இனி கதையை இன்ன நடையில் சொல்லவேண்டும் என்பதை ஆலோசிப்போம். இங்கே நடை என்பது பாஷைநடை. ஒரே கதையை ஒரு உபாத்தியாயர் ஒரு நடையிற் சொல்வார். அதையே மற்றொருவர் வேறு மாதிரியாகச் சொல்வார். இயற்கையில் ஒவ்வொருவர் தன்மையும் வேறுபட்டிருப்பது போலவே, அவரவர் கதை சொல்லும் 'நடை'யும் வேறுபடுவது இயல்பே. ஆனால் பொதுவாக எவரும் சில விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் நலம். சாதாரண [1] சமாசாரங்களைச் சொல்லும்போது அவசரமின்றி நிதானமாகச் சொல்லவேண்டும். அருமைச் செய்கைகளைச் சொல்லும்போது உபயோகிக்கும் வார்த்தைகளை ஓசைபெற அடுக்கியும் துரிதமாகவும் [2] சொல்லவேண்டும்.

---

[1] உதாரணம்:—'ஒரு ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் தினந்தோறும் காலையில் அவ்வூருக்குச் சமீபத்தில் உள்ள ஒரு தோப்புக்குப் போய் மரத்தின் நிழலில் உட்காருவான். உட்கார்ந்து பக்ஷிகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பான்.' இவற்றைப்போன்ற சமாசாரங்களை அவசரப்படாமல் நிதானமாகச் சொல்லிக்கொண்டு போகலாம்.

[2] உதாரணம்:—"அனுமார் அசோகவனத்தை அழித்தார் என்ற செய்தியை இராவணன் கேட்டான். உடனே சில இராக்ஷதர்களை ஏவி, 'நீங்கள் போய் அந்த அனுமானை உடனே பிடித்துவாருங்கள்' என்று கட்டளையிட்டனுப்பினான். அவர்கள் அவர் அருகே வந்தபோது, அனுமார் சிலர் பல்லை உடைத்தார், சிலர் எலும்பை ஒடித்தார், சிலரைக் கையால் குத்தினார், சிலரைக் காலால் தேய்த்தார், சிலரை இழுத்துத்

கதையின் முடிவைச் சொல்லும்போது, பேசுந் தொனியைச் சிறிது மாற்றி, அந்தமாதிரிதான் கதை முடியும் என்று யாவரும் எதிர்பார்ப்பதை யொப்ப, ஆற்றுநீர் வழிந்தோடுவதுபோலக் கம்பீரமாகக் கொண்டுபோய் முடிக்கவேண்டும்.

பிள்ளைகள் எளிதில் அறிந்துகொள்ளுமாறு சொற்களைத் தேர்ந்தெடுப்பது ஒன்று; அந்தச் சொற்களை உபயோகிக்கும் பாஷைநடை ஒன்று. இவ்விரண்டையும் கலந்து, வாக்கியங்களை இலக்கணப் பிழையின்றி நன்றாக அமைத்துச் சொல்லவேண்டும். சிறு வாக்கியங்களாக இருக்கவேண்டியது அவசியமே. ஆனால், மிகச் சிறு துண்டுதுண்டான சொற்றொடர்களையே முழுதும் உபயோகிக்காமல், சாதாரணமாக இலக்கணப்பிழையின்றி அமைத்த வாக்கியங்களையே உபயோகித்துச் சொல்லவேண்டும். இதை எண்ணி வாக்கியங்களை முன்னாடியே யோசித்துக்கொண்டாவது, நெட்டுரு செய்து கொண்டாவது சொல்லக்கூடாது.

வாக்கியங்களை முன்னாடியே யோசித்துக்கொண்டு கதையைச் சொன்னால், குழந்தைகளுக்கு, அப்படிப் பட்ட கதையைக் கேட்பதில் பிரியம் இராது. கதையை நன்றாகத் தெரிந்துகொண்டு பிறகு பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டியது அவசியம். அதுபோலவே, எழுவாய் பயனிலைகொண்ட சிறு சிறு வாக்கியங்களிலேயே கதை முழுவதையும் சொல்லவேண்டியதும் அவசியம்.

---

தூக்கி எறிந்தார், சிலரை மோதினார். சிலரை மரத்தால் சாடினார்" என்பவைபோன்ற வீரச்செய்கைகளைச் சொல்லும்போது, வார்த்தைகளைத் தட்டுத்தடங்கலின்றி மொழியவேண்டும்.

வீட்டில் பேசுவதுபோலவே, கிராமிய நடையில் சொல்லுவதுபோல ஆரம்பித்து, வாக்கியங்களை இலக்கிய நடையிற் சிறிதாகவும் பெரிதாகவும், சொல்லப்புகுந்த விஷயத்துக்கு ஏற்றபடி, அப்போதைக்கப்போது யுக்தம்போல அமைத்துப் பேசும் சக்தியை ஒவ்வொரு உபாத்தியாயரும் உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும்.

கதை சொல்லும் பாட சம்பந்தமாக, உபயோகிக்கும் வார்த்தை நடை என்ற இவ்விரண்டு விஷயங்களையேயன்றி, இன்னம் வேறு அம்சங்களையும் உபாத்தியாயர் மனத்திற் கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது.

கதையின் சமாசாரப் பகுதிகளை எந்த வரிசையில் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்பதையும் அவர் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். கதைகளைப் புத்தகங்களில் எழுதியிருப்பவர்கள் சமாசாரங்களை அவை நிகழ்ந்த முறையில் எழுதியிருப்பார்கள். வாய்மூலமாகச் சொல்பவர்கள் அதே கிரமத்தையே அனுசரிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பிள்ளைகளுக்குக் கதையில் உருசி உண்டாகும்படி சமாசாரங்களைச் சொல்லவேண்டியதே நமது நோக்கம்.

கதையின் சமாசாரங்களை எடுத்துக்கூறும் கிரமத்தை யோசிக்கும்போது, இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். நாம் கதை சொல்வதன் நோக்கம் என்ன? வினோதத்துக்காகச் சொல்லும் கதைகள் தவிர, அநேகமாய் ஒவ்வொரு கதையிலும் ஏதாவது ஒரு நீதி அமைந்திருக்கும். கதையில் அமைந்துள்ள நீதியைக் குழந்தைகள் மனம்

கொள்ளுமாறு கதையைச் சொல்லவேண்டும். நாம் சொல்லும் மாதிரியாலும், சில இடங்களில் அவர்கள் மனம் ஊன்றிக் கவனிக்கும்வண்ணம் சொல்லும் சாமர்த்தியத்தாலுமே, குழந்தைகள் தாமாகவே கதையின் நீதியை அறிந்துகொள்வார்கள். கதையின் நீதியை நாமாக எடுத்துக் கூறி, இந்தக் கதையின் நீதி இது, என்று பாடம் ஒப்பிக்கச் சொல்வதைவிட, கதையின் நீதியை அனுபவத்தால் விளக்குவதே சிறந்த முறையானமையால், நீதிகளை உய்த்துணரவைப்பதே நல்லது.

இதுவுமன்றி, அநேகம் கதைகளில், இன்ன விஷயங்களைச் சொல்லாமலே விட்டுவிடலாம் என்பதையும் உபாத்தியாயர் யோசிக்கவேண்டியிருக்கும். கதை எழுதுபவர் பல விஷயங்களை விஸ்தரித்து எழுதியிருப்பார். சுருக்கமாகச் சொல்லி, முக்கிய அம்சங்கள் யாவும் குழந்தைகள் ஞாபகத்தில் இருக்கச்செய்வதே பாலர் வகுப்பு உபாத்தியாயரின் நோக்கமாயிருத்தல்வேண்டும். ஆகையால், சில விவரங்கள் வர்ணனைகள் முதலியவற்றை நீக்கி, முக்கிய அம்சங்கள்மட்டில் மனத்திற் பதியும்படி கதையைச் சொல்லவேண்டும். இவை முக்கியமானவை, இவை முக்கியமல்லாதவை என்பதை உபாத்தியாயர் தாமே யோசித்து வைத்துக் கொள்ளவேண்டும். சுருக்கமாகச் சொல்லவேண்டியவற்றைச் சுருக்கியும், விவரிக்கவேண்டிய விஷயங்களை விவரித்தும் சொன்னால் முக்கியமான விஷயங்கள் குழந்தைகள் மனத்தில் நன்றாகப் பதியும். அப்போது நாம் சொல்லும் கதை பிள்ளைகள் மனத்தில் ஒரு படம்போல நிற்கும். ஒரு கலியாணப்படத்

தைச் சித்திரத்தில் எழுதுபவன், கலியாணப்பெண்ணையும் கலியாணப்பிள்ளையையும் பெரிய உருவமாக எழுதி, பிறகு கலியாணப்பந்தலில் உள்ள மற்றவர்கள் உருவங்களையும் வேறு பொருள்களையும் யுக்தமாக யோசித்து அளவுக்குத் தக்கபடி எழுதுவான் அல்லவா? அதுபோலவே, கதை சொல்லும்போது எல்லாப் பகுதிகளையும் விவரித்தால், இது முக்கியம் இது சாமானியம் என்பது பிள்ளைகள் உள்ளத்திற்படாமலே போய்விடும்.

மேலும், கதை சொல்லும்போது, அது ஓர் நாடகம்போலத் தோற்றும்படி செய்விக்கும் சக்தி எந்த உபாத்தியாயரிடம் இருக்கிறதோ, அவர் சொல்லும் கதையைக் குழந்தைகள் அதிகப் பிரியமாகக் கேட்பார்கள். அவ்வளவு சக்தி இல்லாவிடினும் பொதுவாக ஒரு விஷயம் அவர் ஞாபகத்தில் இருக்கவேண்டும். சம்பாஷணைகளை எடுத்துச் சொல்லும்போது, அவரவர் நேரே பேசுவதுபோலவே சொல்லிக் காட்டவேண்டும். அப்படிச் சொல்லும்போது சம்பாஷிப்பவர்கள் மயமாகத் தானுகி, அவர்கள் அந்தச் சமயங்களில் எப்படிப் பேசியிருப்பார்களோ அப்படியே, தாம் பேசிக் காட்டவேண்டும். நாடகம் நடிப்பவன் எந்த வேஷத்தைப் போட்டுக்கொள்ளுகிறுனே அந்த மயமாகவே தானுமாகுலன்றி, அவன் நடிப்பதும் பேசுவதும் பயன்படாவன்ருே? ஆகையால் கதை சொல்லும்போது, கதையின் பாத்திரங்கள் நேரே பேசுவதுபோலப் பேசிக்காட்டுதலே சிறந்த முறையாம். இன்னுர் இப்படிச் சொன்னுர்கள் என்று படர்க்கையிற் சொன்னுல் பிள்ளைகளுக்கு உருசி ஏற்படாது.

கதையைச் சொல்லிக்கொண்டு போகும்போது, 'இதற்குப்பின் என்னவாயிற்று' 'அவன் பிறகு என்ன செய்தான்' என்பதுபோன்ற ஆச்சரியங்கள் பிள்ளைகள் மனத்தில் உண்டாகுமாறு, கொஞ்சம் சொல்லியும், சிறிது சொல்லாமலும், அவர்கள் மனத்தைக் கதையில் இழுத்து நிறுத்திக்கொண்டே சொல்லவேண்டும். 'அவன் பிறகு எங்கே போனான்' என்று பிள்ளைகள் கேட்டால், 'அதைத்தான் சொல்லுகிறேன், கவனமாய்க் கேளுங்கள்' என்று பிள்ளைகளை உற்சாகப்படுத்திக் கதையைச் சொல்ல வேண்டும். கதைகளை நன்றாகச் சொல்லும் நிபுணர்களிடத்தில், இவ்வண்ணம் கேட்பவர் மனத்தைப் பற்றிநிற்கும் ஆற்றல் மிகுதியாகவிருக்கும்.

மேற்கூறிய முறைகளை மனத்திற்கொண்டு, பிள்ளைகளுக்குக் கதையைச் சொல்லும்போது, கதையில் முக்கியமான பாகங்கள் அவர்கள் மனத்தில் பதிந்தனவா என்பதை அறிந்துகொள்வதற்கு, அவர்களைக் கேள்வி கேட்கலாம். ஒரு கேள்வி கேட்டவுடன், பிள்ளைகள் கதையை நன்றாக அறிந்துகொண்டதும் கொள்ளாததும் விளக்கமாகும். எந்தப் பாகம் அவர்களுக்கு நன்றாக விளங்கவில்லை என்று தெரிந்ததோ, அதை இனிது விளக்கிச் சொல்லிய பிறகு, பாக்கியுள்ள கதையைப் பூர்த்திசெய்வது நல்லது.

இதன்றி அவர்கள் நம் வாயிலாகக் கேட்ட கதையைத் திருப்பிச் சொல்லச்சொன்னால், அவர்கள் மனத்தில் கதையின் விஷயங்கள் மேலும் நன்றாகப் பதியும். ஆனால், இப்படி அவர்களைச் சொல்லச் செய்வது சுலபமன்று. சில குழந்தைகள் கதையை

நன்ருக அறிந்திருப்பார்கள்; சொல்வதற்கு அஞ்சுவார்கள். ஆகையால் முதலில் அவர்களைத் தாராளமாகப் பேசச்சொல்லி, அவர்கள் பயத்தை நீக்க வேண்டும். ஒரு குழந்தையை ஒரு கதை முழுவதையும் சொல்லச்சொல்லி, அக்குழந்தை சரியாகச் சொல்லுகிறதா என்று மற்றவர்களைக் கவனிக்கச் செய்யலாம். அல்லது ஒரே கதையைச் சிறு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வோர் பாகத்தை ஒவ்வொரு குழந்தையைச் சொல்லும்படியும் கேட்கலாம். கதை கேட்டபிறகு, கதையில் வந்துள்ள பொருள்களுள் வரைந்துகாட்டக்கூடியவற்றை வரைந்துகாட்டச் சொன்னுல், குழந்தைகள் அதிகக் களிப்புடன் வரைவார்கள். அவர்கள் வரையும் படம் கைதேர்ந்த நிபுணர் எழுதுவதுபோலிராவிட்டால், சிறிதும் கவலையில்லை. அது மூலமாக அவர்கள் உள்ளக்கருத்தை வெளியிடுவதைக் கண்டு நாம் அகமகிழ்வோம்.

## விஷய சூசிகை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| **அ.** | |
| அட்டெண்டன்ஸ், | 68 |
| அதிகக்கல்வி, | 17 |
| அமைதி, | 99 |
| அயர்ந்திருப்பதைக் காட்டும் குறி, | 101 |
| அரண்மனே, | 111 |
| அற்புத ஆராய்ச்சி, | 35 |
| அறிவு விருத்தி, | 25, 90, 93, 94, 102, 103 |
| அன்பு, | 28 |
| அன்புடைமை, | 27, 29 |
| **ஆ.** | |
| ஆச்சரியங்கள், | 117 |
| ஆசனம், | 55 |
| ஆராய்ச்சி, | 36, 38, 39, 83 |
| ஆரோக்கியக்குறிப்பு, | 30, 31 |
| ஆரோக்கியம், | 75 |
| **இ.** | |
| இசை, | 75 |
| இசைக்கருவி, | 76 |
| இசையறிவு, | 22 |
| **உ.** | |
| உச்சரிப்பு, | 72, 77 |
| உடை, | 81 |
| உண்மை, குழந்தையைப்பற்றிய, | 5, 11, 30, 34, 38, 61, 64, 90, 96, 99, 104 |
| உருவங்கள், | 82, 83, 93 |
| உற்றுப்பார்த்தல், | 41, 44, 45 |
| **எ.** | |
| எண்ணம், | 13, 43 |
| **ஒ.** | |
| ஒப்புரவு, | 34, 42, 61 |
| ஒழுங்கு, | 96 |
| **க.** | |
| கட்டளே, | 97 |
| கட்டுக்கோப்பு, | 33, 34 |
| கடமை, உபாத்தியாயர், | 6, 18, 19, 85 |
| கடவுள், | 61, 80 |
| கதை, | 103 |
| கரணம், | 71 |
| கல்வி, | 26 |
| ,, அபிவிருத்தி, | 20, 65, 82, 91, 100 |
| கவனம், | 26, 45, 46, 97, 99 |
| களிமண்வேலே, | 93, 94 |
| கற்பனுசக்தி, | 92 |
| கற்பிக்கும் முறை, | 99 |
| **கா.** | |
| கால அட்டவணே, | 97 |
| காற்றேட்டம், | 58 |
| **கி.** | |
| கிண்டர்கார்ட்டன் முறை, | 95 |
| கிளிஞ்சல், | 42 |
| **கு.** | |
| குழந்தை, | 1 |

விஷயம். பக்கம்.

கே.

கேள்வி, உபாத்தியாயரின், 77, 117
,, குழந்தையின், 39

கோ.

கோடு, 33, 82, 83, 84, 86, 87, 88, 89, 95

ச.

சக்தி, கதையைச்சொல்லும், 105, 106
,, பேசும், 114, 116
சத்தம், 46
சம்பாஷணை, 59, 104, 105, 116
சலனம், 30, 32, 51, 54

சி.

சிசுபோதம், 39
சித்திரங்கள், 81
சித்திரப்படங்கள், 59
சித்திரப்பாடம், 85, 86, 89
சித்திரம்வரைதல், 82, 83, 91, 93
சிந்தனை, 45
சிருஷ்டி, 33, 43, 46
சிற்றுருவம், 5

சு.

சுபாவம், 104, 106
சுருசுருப்பு, 29, 33, 34, 42, 43, 91
சுவாஸம், 72, 73, 74

சூ.

சூக்ஷ்ம அறிவு, 17, 18

செ.

செய்கைகள், 10, 17

சே.

சேமித்தல், 34, 42
சேஷ்டிதம், 29, 30, 31, 32, 33, 34, 43

சொ.

சொந்தம்பாராட்டுகை, 42
சொற்பழக்கம், 103

ஞா.

ஞாபகம், 21, 58
ஞானம், வஸ்துவின், 38, 94
,, வார்த்தை, 105, 109
,, விஷய, 109
,, பாஷா, 78, 80

டி.

டிரெயினிங், 25

த.

தவணைக்கதி, 71
தவறான எண்ணங்கள், 2
தன்மை, குழந்தைகளின், 3, 5, 10, 26, 28, 29, 30, 31, 43, 48, 96, 103

தி.

திருக்குறள், 108
திருத்தாண்டகம், 80
திருவாய்மொழி, 66

தெ.

தெளிவின்மை, 111
தெளிவு, 92, 110
தென்னம்பிள்ளை, 9

தே.

தேகதத்துவம், 6
தேகவளர்ச்சி, 8, 11, 12, 18, 26, 103

| விஷயம். | பக்கம். |
|---|---|
| தேகாப்பியாசம், | 70 |
| தேங்காய், | 15 |
| தேவாரம், | 66 |
| **தொ.** | |
| தொண்டரடிப்பொடியாழ்வார், | 7 |
| தொண்டை, | 73 |
| தொழிலாளி, | 81 |
| **ந.** | |
| நடித்தல், | 39, 40, 41, 46, 116 |
| நடை, | 65 |
| நமஸ்காரம், | 71 |
| நல்லொழுக்கம், | 48, 50, 51 |
| நலி, | 30, 31 |
| நளவெண்பா, | 108 |
| நன்னடை, | 26, 48, 61, 80 |
| **நா.** | |
| நாற்காலி, | 57 |
| **நீ.** | |
| நீதி, | 114, 115 |
| **நு.** | |
| நுண்ணறிவு, | 92 |
| **நெ.** | |
| நெட்டுரு, | 113 |
| **ப.** | |
| பக்தி, | 80 |
| பச்சைக்குதிரை, | 71 |
| படங்கள், | 81 |
| பதுமை, | 81, 82 |
| பருவபேதங்கள், | 7, 8 |
| பல்முளைத்தல், | 10, 12 |
| **பா.** | |
| பாங்கன், | 99, 100 |
| பாட்டு, | 66, 70, 75, 76, 77, 78, 79 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பாடநேரம், | 54, 55 |
| பாடம், | 97 |
| பாடல், | 77 |
| பாரதம், | 108 |
| பால், | 103 |
| பாவனை, | 43, 44, 47 |
| பாஷை, | 104, 107 |
| பாஷைநடை, | 107, 112, 113 |
| **பி.** | |
| பிள்ளைக்கல்வி, | 60, 61 |
| **பு.** | |
| புதிய அறிவு, | 23 |
| புஷ்பம், | 1 |
| **பெ.** | |
| பெஞ்சு, | 56 |
| **பே.** | |
| பேதை, | 7 |
| **போ.** | |
| போதனாமுறை, | 65, 102 |
| **ம.** | |
| மணல், | 34 |
| ,, தட்டு, | 95 |
| மழலை, | 108, 109 |
| மனச்சோர்வு, | 69 |
| ,, நீக்கும் உபாயம், | 69 |
| மனத்தூய்மை, | 80 |
| மனவளர்ச்சி, | 8, 18, 26, 103 |
| மனவேகம், | 60 |
| மனோதர்மம், | 92 |
| மனோபாவம், | 43 |
| **மா.** | |
| 'மார்ச்', | 58, 66, 67, 68, 69 |
| **மு.** | |
| முறை,-சிறந்த, | 101, 115, 116 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| **மூ.** | |
| மூளை, அமைப்பு, | 13 |
| ,, சுருசுருப்பு, | 16 |
| ,, தன்மை, | 15 |
| ,, விருத்தி, | 17 |
| **மே.** | |
| மேடை, | 56 |
| **ய.** | |
| யசோதை, | 31 |
| **வ.** | |
| வகுப்பறை, | 81 |
| வசதி, | 32 |
| வர்ணம், | 46 |
| வரிசை, | 114 |
| வஸ்துக்கள் | 81 |
| **வா.** | |
| வாக்கியங்கள், | 113, 114 |
| வாத்தியப்பெட்டி, | 58 |
| வாத்தியம், | 66 |
| வார்த்தை, | 107, 109, 111, 112 |
| **வி.** | |
| விருப்பங்கள், | 92 |
| விளையாட்டு, | 62, 95, 102 |
| விளையாட்டுச்சாமான், | 36, 42 |
| விஷமம், | 83 |
| விஷயம், | 109, 110, 111, 115, 117 |
| **வெ.** | |
| வெளிச்சம், | 58 |
| **வே.** | |
| வேலையும் விளையாட்டும், | 62, 63, 65 |
| **ஜ.** | |
| ஜலதோஷம், | 73 |
| **ஜீ.** | |
| ஜீரணகருவி, | 71 |
| ஜீரணசக்தி, | 73 |
| **ஹெ.** | |
| ஹெர்பார்ட், | 21 |
| **ஸ்ரீ.** | |
| ஸ்ரீகண்ணன், | 31 |


DIOCESAN PRESS, MADRAS—1931. B 154

14873